KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

மலர்:- 32, 19 December 2025 இதழ்:- 43

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## தமிழகத் தலைவர்களைச் சந்திக்கும் கஜேந்திரகுமார் அணியின் அரசியல் நகர்வு தந்திரமா? புதிய பாதையா?

இந்தியாவை தொடர்ந்து விமர்சித்தும் 13வது அரசியலமைப்பு திருத்தத்தைத் தெளிவாக நிராகரித்தும் வந்த கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய அரசியல் அணியினர், தற்போது தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திக்க முனைவதாக வெளி வரும் தகவல்கள், ஈழத் தமிழ் அரசியலில் புதிய கேள்விகளையும் விவாதங்களையும் உருவாக்கியுள்ளது. இச்சந்திப்பு, ஒரு வழக்கமான மரியாதை பயணம் அல்ல. மாறாக மாறி வரும் பிராந்திய அரசியல் சூழலில் எடுக்கப்படும் தந்திர ரீதியான நகர்வாக பலரும் பார்க்கின்றனர். (4ம் பக்கம் பார்க்க)



## ஒரு மில்லியன் டொலர் அவசர உதவி! நாடாளுமன்றத்தில் ஒலித்த அமைச்சர் ஹரியின் குரல்!

இலங்கையைச் சின்னாபின்னமாக்கியுள்ள ‘டிட்வா’ (Ditwah) சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மலையக மற்றும் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் துயர் துடைக்கக் கனடா முன் வந்துள்ளது. கனடிய அரசாங்கம் 1மில்லியன் கனடிய டொலர்களை (CAD) அவசர மனிதாபிமான நிதியாக ஒதுக்குவதாக 16 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை (25ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடல் தொழிலாளர் போராட்டமும் இந்தியாவுக்கு எதிரான கோசங்களும் புலம்பெயர்ந்த தமிழர்களின் கவலையும்!







யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற கடல் தொழிலாளர் போராட்டத்தின் போது இந்தியாவுக்கு எதிராக எழுப்பப்பட்ட கோசங்கள் ஒரு சாதாரண தொழில் கோரிக்கையைத் தாண்டி பாரதூரமான அரசியல் விளையாட்டாக மாறியிருப்பது புலம் பெயர்ந்த தமிழர் சமூகத்தை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. கடல் வள பாதுகாப்பு, வாழ்வாதார உரிமை போன்ற நியாயமான கோரிக்கைகள் முன் வைக்கப்பட வேண்டிய இடத்தில் வெளிநாட்டு விரோத அரசியல் முழக்கங்கள் புகுத்தப் பட்டிருப்பது மிகவும் ஆபத்தான போக்காகவே பார்க்கப்படுகிறது. (2ம் பக்கம்பார்க்க)

## மலையக மக்களை வடக்கு கிழக்கில் குடியேற்றுவது யதார்த்தமா? அரசியலா?

இலங்கை அரசியல் அலைபாயும் இந்நேரத்தில் திடீரென தலைதூக்கும் ஒரு கேள்வி இலங்கை வாழ் மலையக (Upcountry / Estate) தமிழர்களை வடக்கு—கிழக்கில் குடியேற்றுவது சாத்தியமா? என்ற கேள்வியின் பின்னால் கொஞ்சம் அரசியல், கொஞ்சம் உணர்ச்சி, ஆனால் மிக அதிகமாக நிலப்பரப்பு அடையாள உரிமை குறித்த அச்சங்கள் (13ம் பக்கம் பார்க்க)

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடல் தொழிலாளர் போராட்டமும் இந்தியாவுக்கு எதிரான கோசங்களும் புலம்பெயர்ந்த தமிழர்களின் கவலையும்!







யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கடல் தொழிலாளர் போராட்டத்தின் போது இந்தியாவுக்கு எதிராக எழுப்பப்பட்ட கோசங்கள் ஒரு சாதாரண தொழில் கோரிக்கையைத் தாண்டி பாரதூரமான அரசியல் விளையாட்டாக மாறியிருப்பது புலம் பெயர்ந்த தமிழர் சமூகத்தை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. கடல் வள பாதுகாப்பு, வாழ்வாதார உரிமை போன்ற நியாயமான கோரிக்கைகள் முன் வைக்கப்பட வேண்டிய இடத்தில் வெளிநாட்டு விரோத அரசியல் முழக்கங்கள் புகுத்தப்பட்டிருப்பது மிகவும் ஆபத்தான போக்காகவே பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் சமூகத்தின் வரலாற்றில் இந்தியா ஒரு சிக்கலானதாயினும் தவிர்க்க முடியாத பங்கைக் கொண்ட நாடு. கடந்த தசாப்தங்களில் நெருக்கடி நேரங்களில் மனிதாபிமான உதவி, பொருளாதார ஆதரவு, மீட்பு நடவடிக்கைகள் என பல கட்டங்களில் இந்தியாவின் பங்கு மறுக்க முடியாதது.

இத்தகைய பின்னணியில், யாழ்ப்பாணக் கடல் தொழிலாளர் போராட்டம் போன்ற மக்கள் சார்ந்த போராட்டங்களில் இந்தியாவை குறி வைத்து கோசங்கள் எழுப்பப்படுவது, உண்மையான பிரச்சினைகளை மறைக்கும் முயற்சியாகவே புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தால் பார்க்கப்படுகிறது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பார்வையில், இது தன்னிச்சையான மக்கள் உணர்ச்சியின் வெளிப்பாடு அல்ல. மாறாக, பிராந்திய அரசியலில் குழப்பத்தை உருவாக்கவும், வெளிநாட்டு உறவுகளைத் திசை திருப்பவும் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட உத்தியாகவே தோன்றுகிறது. குறிப்பாக, கடல் எல்லை, மீன்பிடி உரிமை போன்ற பிரச்சினைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் தொழில்நுட்ப பேச்சுவார்த்தைகளின் வழியே தீர்க்கப்பட வேண்டியவை. அவற்றை தெரு அரசியலாக மாற்றி, ஒரு நாட்டை எதிரி எனக் காட்டுவது, நீண்டகாலத்தில் வடக்கு மக்களின் நலனுக்கே தீங்கானதாக முடியும்.

மேலும் இத்தகைய இந்திய விரோத கோசங்கள் சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளின் நம்பகத் தன்மையையும் பாதிக்கும் அபாயம் உள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர், தாங்கள் வாழும் நாடுகளில் இலங்கைத் தமிழர் விவகாரங்களை எடுத்துச் செல்லும் போது, பிராந்திய நிலைத்தன்மை, அயல் நாடுகளுடனான நல்லுறவு ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் எழும் இத்தகைய முழக்கங்கள், உலகத் தமிழர் அரசியல் முயற்சிகளுக்கும் சங்கடத்தை ஏற்படுத்துகின்றன.

புலம் பெயர்ந்த தமிழர் கண்ணோட்டத்தில், யாழ்ப்பாணக் கடல் தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் நியாயமானவை் அவற்றுக்கு தீர்வு தேவை. ஆனால் அந்த தீர்வு, வெளிநாட்டு விரோத அரசியல் நாடகங்களின் ஊடாக அல்ல் தெளிவான கொள்கை, பொறுப்பான அரசியல், மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு மூலமே கிடைக்க வேண்டும். உண்மையான எதிரி யார் என்பதைத் தெளிவாக அடையாளம் காணாமல், உணர்ச்சிகளைத் தூண்டும் கோசங்கள் மட்டும் எழுப்பப்படுவது, மீண்டும் ஒருமுறை தமிழ் சமூகத்தை அரசியல் சதுரங்கக் கட்டையாக மாற்றும் அபாயம் உள்ளதாக புலம்பெயர்ந்த தமிழர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தச் சூழலில் யாழ்ப்பாணத்தின் மக்கள் போராட்டங்கள் தங்கள் உண்மை நோக்கத்தை இழக்காமல், அரசியல் விளையாட்டுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதே காலத்தின் அவசியமாகியுள்ளது.

இப்பிரச்சனை தொடர்பாக வடக்கு மாகாண மீனவர்கள் இந்திய மீனவர்களின் வருகையை எதிர்க்கிறோமே தவிர இந்தியாவை எதிர்க்கவில்லை என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள் சந்திப்புக்கு பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது. மேலும் கருத்து தெரிவிக்கையில், அண்மையில் நடைபெற்ற இந்திய மீனவர்களுக்கு எதிரான போராட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடை பெற்றது. அந்தப் போராட்டம் வாயிலாக பல விடயங்களை நாங்கள் தெளிவுபடுத்த வேண்டி இருக்கிறது. இந்திய மீனவர்களின் வருகை தொடர்வதன் காரணமாக வடபகுதியில் உள்ள நான்கு மாவட்டங்களிலுமுள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு தரப்பும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு பெரிய அளவிலான போராட்டத்தை யாழ் மாவட்டம் முன்னெடுத்திருந்தது. அதனை நாங்களும் எதிர்பார்க்கின்றோம். போராட்டம் வரும் போது நாங்களும் பங்காளர்களாக இருப்போம்.

அதே நேரம் போராட்டத்தில் தலைமையை ஏற்றவர்கள் சிலர் கூறிய கருத்துக்கள் விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கிறது. குறிப்பாக வடக்கு மாகாண மீனவர் என்ற ரீதியில் அந்தப் போராட்டத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களை கேட்டிருந்தோம்.

இந்திய தூதரகம் தொடர்பாக கருத்துச் சொல்ல வந்த நபர் எங்களுக்கு இந்தியா வேண்டாம். சீனாவும் அமெரிக்காவும் தான் வேண்டும் என்று கூறிய கருத்து எங்களையும் சற்று யோசிக்க வைத்திருக்கிறது. அது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

வடபகுதி மீனவர்கள் இந்திய அரசை நம்பியே இருக்கிறோம். இந்திய மீனவர்களின் வருகையை தடுக்க வேண்டும் என்றால் அதை தூதரக ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் தடுக்க முடியும் என நாம் திடமாக நம்புகிறோம். அரசாங்கம் ஊடாக இதையே நாம் கூறி வருகிறோம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

– செய்தியாளர் கனடாவில் இருந்து துறையூரான்

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION


**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*


**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களிடமிருந்து அவசியமும் அவசரமுமான நிதி திரட்டல்!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டு களாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வருபவர்கள் நீங்கள். அதுமட்டுமல்ல அவர்களது கல்வி – பாதுகாப்பு – உடை – சுகாதாரம் – பராமரிப்பு உட்பட அனைத்துச் செலவு களையும் வருடாந்த இன்னிசை விழாவும் இராப்போசன விருந்தும் நிகழ்வு மூலம் உதவி வருபவர்களும் நீங்களே.

ஆனால் அண்மையில் இலங்கையில் ஏற்பட்டு இன்று வரை வெள்ளப் பாதிப்பால் சேதமடைந்த முல்லைத்தீவு முள்ளிய வளையில் அமைந்துள்ள பாரதி இல்லம் மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை அன்பு இல்ல ங்கள் இந்த இயற்கை அனர்த்தத்தில் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு பிராந்தியத்தில் உள்ள முள்ளியவளையில் அமைந்துள்ள பாரதி இல்லம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று இல்லங்களும் பல ஆண்டுகளாக சங்கடங் களையும் சவால்களையும் கடந்து பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு பாதுகாப்பான தங்கும் சூழல், உணவு, கல்வி, ஆலோசனை மற்றும் எதிர்கால நம்பிக்கை வழங்கி வருகின்றன. ஆனால் அண்மையில் இலங்கை முழுவதும் ஏற்பட்ட கொடுமையான மழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நீர்மட்ட உயர்வு காரணமாக இல்லங்களின் கட்டிட வசதி கள், குடிநீர் அமைப்புகள், சமையல் அறைகள், படுக்கை யறைகள் குழந்தைகளின் உடமைகள் உள்ளிட்ட பல அத்தியாவசிய பகுதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. குழந்தைகளின் தினசரி வாழ்வாதாரத்துக்கே நேரடியான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அத்தியாவசியமானதும் அவசரமானதுமான சூழ் நிலையை முன்னிட்டு உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கனடா தமிழ்ச்சமூகத்திடம் அவசர நிதி உதவிக்கான திரட்டல் முயற்சியை 05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமை முதல் ஒரு மாதத்திற்கு ஆரம்பித்துள்ளது. (05 ஜனவரி 2026 வரை)

இல்லங்களின் உடனடி பழுது பார்ப்பு, குழந்தைகளின் உணவு, உடை, படுக்கை உள்ளிட்ட அடிப்படை வசதி கள் மீளமைத்தல் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை மேம்பாடுகள் பாதிக்கப்பட்ட கற்றல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மாற்றுதல் என்பன உடனடித் தேவையாக வுள்ளது.

நமது குழந்தைகள் பாதுகாப்பாகவும் மரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய கனடா தமிழர் சமூகத்தின் இரக்க மிக்க பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. ஒவ் வொரு நன்கொடையும் ஒரு குழந்தையின் எதிர்காலத் திற்கு புதிய ஒளியையும் நம்பிக்கையையும் வழங்கும் என்பதை உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை வலியுறு த்துகிறது.

ஈழநாடு பரமேஸ் 416 841 9600 என்ற எமது தொலைபேசி யில் தொடர்பு கொண்டு நிதி உதவி வழங்க விரும்பும் அன்பர்கள் தயவு செய்து பெயர், தொலைபேசி இலக்கங் களைத் தவறாது பதிவு செய்யவும்.

வங்கியில் நேரடியாக பணம் செலுத்த விரும்புபவர்கள் **T.D.BANK Eelanadu Anpuillam A/C 3026 - 5013835** என்ற வங்கிக் கணக்கில் செலுத்தவும். முக்கியமாக உங்களது பெயர் விபரங்களை எமக்கு அறியத் தரவும்.

**E-Transfer**செய்ய விரும்பும் அன்பர்கள் **Eelanadu 1993@gmail.com** என்ற மின்னஞ்சலில் அனுப்பலாம். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலர்களும் மூன்று இல்லக் குழந்தைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படும்.

அன்பர்களே! உங்களது பெயர் விபரங்கள் அனுப்பிய பணத் தொகை சரியாக உள்ளதா என்பதை எம்முடன் தொடர்பு கொண்டு அல்லது முகநூல் மூலமாகவோ – **Eelanadu.ca** மின்னிதழ் மூலமும் உறுதிப்படுத்திக் கொள் ளுங்கள்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கனடியத் தமிழ் சமூகத்தில் 32 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருப்ப துடன் 3 இல்லங்களின் வாழும் குழந்தைகளின் நலனுக்காக 14 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக கனடியத் தமிழ் சமூகத் தின் ஆதரவோடு அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். என்றும் உங்கள் அன்புக்குரிய

T.K.பரமேஸ்வரன் – ஆசிரியர் ஈழநாடு 416 841 9600

அவசர நிதி உதவி வழங்கியோர் விபரங்கள்

திரு சாந்தா பஞ்சலிங்கம் 1000.00

ஈழநாடு பத்திரிகை 500.00

திருமதி சாருமதி மனோகாந்தன் 250.00

திரு.திருச்செல்வன் சிவசாமி 100.00

திரு விசு கணபதிப்பிள்ளை (உதவும் பொற்கரங்கள் அமைப்பு கனடா) 250.00

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடா 1000.00

திருமதி வதனி ஹரிஸ் 500.00

திரு ம.தயாகுணன் 100.00

திரு ஜெயபாலசிங்கம் நாகமணி (டென்மார்க்) 500.00

திருமதி ரஜனி நித்தி (கனடா) 500.00

செல்வி வைதினி விஜயகுமார் 100.00

திரு குலசேகரம்பிள்ளை அநுராகரன் 200.00

திரு பாஸ்கரன் வைரமுத்து 100.00

திரு பாலசிங்கம் உதயகுமார் குடும்பம் 250.00

திரு பாலகுமாரன் மாசிலாமணி குடும்பம் 250.00

திரு கதிரித்தம்பி சுப்பிரமணியம் 1000.00

திரு ஞானபண்டிதன் பாலசுப்பிரமணியம் 150.00

திருமதி இராஜேஸ்வரி சிதம்பரநாதன் 500.00


திரு தீபன் கிருஷ்ணபிள்ளை 250.00

திரு திருமொழி முருகேசபிள்ளை 100.00

திரு இரத்தினேஸ்வரன் இரத்தினம் 100.00

(தொடரும்)

முக்கிய கவனிப்பு:- இலங்கையில் உள்ள சிறுவர் நன்னடத் தைப் பிரிவினதும் குழந்தைகள் நல அமைச்சு ஆலோ சனைகளின்படி பிள்ளைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப் பட்டுள்ளதால் நாமும் புகைப்படங்களைத் தவிர்த்துக் கொள்ளுகின்றோம். நன்றி

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தமிழகத் தலைவர்களைச் சந்திக்கும் கஜேந்திரகுமார் அணியின் அரசியல் நகர்வு தந்திரமா? புதிய பாதையா?



இந்தியாவை தொடர்ந்து விமர்சித்து, 13வது அரசியலமைப்பு திருத்தத்தைத் தெளிவாக நிராகரித்து வந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய அரசியல் அணியினர், தற்போது தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திக்க முனைவதாக வெளிவரும் தகவல்கள், ஈழத் தமிழ் அரசியலில் புதிய கேள்விகளையும் விவாதங்களையும் உருவாக்கியுள்ளது.

இச்சந்திப்பு, ஒரு வழக்கமான மரியாதை பயணம் அல்ல. மாறாக, மாறி வரும் பிராந்திய அரசியல் சூழலில் எடுக்கப்படும் தந்திர ரீதியான நகர்வாக பலரும் பார்க்கின்றனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அரசியல் தரப்பு, 13வது திருத்தத்தை இந்திய திணிப்பு எனக் கூறி நீண்ட காலமாக நிராகரித்து வந்தது. அந்த நிலைப்பாட்டில் இன்றுவரை வெளிப்படையான மாற்றம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆயினும், தற்போது தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திக்க முனைவது,

இந்திய அரசுக்கு எதிரான அரசியல் என்பது இந்திய அரசியலை முழுமையாக புறக்கணிக்க முடியாத நிலை என்ற யதார்த்தத்தை அந்த அணி காலம் கடந்து உணரத் தொடங்கியுள்ளதைக் காட்டுகிறது.

இந்த அணியின் அரசியல் வாதத்தில் இந்திய மத்திய அரசு அதிகார அரசியல்

தமிழகம் – ஈழத் தமிழர்களின் உணர்வுப் பின்புலம் கொண்ட அரசியல் வெளி என்ற தெளிவான வேறுபாடு எப்போதும் முன்வைக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பும், அந்த வேறுபாட்டை அரசியல் பலமாக மாற்றும் முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. தமிழகம் வழியாக, இந்திய அரசியல் அரங்கில் ஈழத் தமிழ் விவகாரத்தை மீண்டும் உயிர்ப்பிக்கலாம் என்ற கணக்கீடு இதில் தென்படுகிறது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரத்தில் தமிழ்த் தரப்பு பல்வேறு உட்கிளைவுகளால் பலவீனமடைந்துள்ளது இந்தியா மீண்டும் வடக்கு கிழக்கு விவகாரங்களில் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது

அநுராவின் இலங்கை அரசு, இந்தியாவுடன் உறவுகளை வலுப்படுத்தும் நிலையில் உள்ளது இந்தச் சூழலில், இந்தியாவை முழுமையாக எதிர்த்து நிற்கும் அரசியல் நடைமுறை சாத்தியமற்றதாக மாறி வருகிறது. இதுவே தமிழகத் திசையில் இந்த அணியை நகர்த்திய முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

தமிழக அரசியல் வட்டாரங்களில் இந்தச் சந்திப்பு குறித்து கலவையான கருத்துகள் வெளிப்படுகின்றன.

திராவிட இயக்கப் பின்னணியுள்ள அரசியல் தரப்புகள் ஈழத் தமிழ் உரிமைகள் பேசப்படுவது வரவேற்கத்தக்கது ஆனால் நடைமுறை தீர்வுகள் குறித்து தெளிவு அவசியம். இந்திய இலங்கை உறவுகளை பாதிக் கும் வகையிலான அரசியல் பயணமாக மாறக் கூடாது

உணர்ச்சி அரசியலை விட, செயல் திட்ட அரசியல் தேவை நீண்ட காலமாக இந்தியாவை விமர்சித்தவர்கள், இப்போது தமிழகத்தை நாடுவது அரசியல் முரண்பாடல்லவா? இந்தச் சந்திப்புகள் எவ்வளவு தூரம் ஈழத் தமிழருக்குப் பயன் தரும்? என்ற கேள்விகளை எழுப்புகின்றன.

13வது திருத்தத்தை மறுக்கும் நிலையில் மாற்று அரசியல் திட்டம் தெளிவாக இல்லாததும் சர்வதேச அரங்கில் ஆதரவு மந்தமாக இருப்பதும் இந்த அணியை புதிய ஆதாரத் தளங்களைத் தேட வைக்கிறது. அந்த வகையில், தமிழக ஆதரவு என்பது, தற்காலிக அரசியல் மூச்சுக் குழாயாக மாறியுள்ளது என்ற விமர்சனமும் எழுகிறது.

தமிழகத் தலைவர்களைச் சந்திக்க முனையும் இந்த முயற்சி கொள்கை மாற்றமாக இல்லாவிட்டாலும் அரசியல் தந்திர மாற்றமாகத் தெளிவாகப் பார்க்கப்படுகிறது

இந்தச் சந்திப்புகள், ஈழத் தமிழரின் அரசியல் பலத்தை உயர்த்துமா? அல்லது தனிமையை மறைக்கும் அரசியலாக மாறுமா? என்பதற்கான பதில், சந்திப்புக்குப் பின் வெளிவரும் கூட்டு அறிக்கைகள், செயல்திட்டங்கள் மற்றும் தொடர்ச்சியான அரசியல் நடவடிக்கைகள் என்பவற்றில் தான் இருக்கிறது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# இலங்கைக்கு 120 மில்லியன் டொலர்களை அவசர உதவியாக வழங்கும் உலக வங்கி!

டித்வா புயலுக்கு பின்னர் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக 120 மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான அவசர உதவியை உலக வங்கிக் குழுமம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள உலக வங்கிக் குழுமம், அரசாங்கத்தின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கான நிதியை மாற்றி ஒதுக்குவதன் மூலம் 120 மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான அவசர உதவியை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

'டித்வா' புயலினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரம், நீர், கல்வி, விவசாயம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பை மீட்டெடுக்கவும் சீரமைக்கவும் இது உதவும் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பொருளாதார மீட்சியை முன்னெடுப்பதற்கும், விவசாயம், உற்பத்தி மற்றும் சரக்கு போக்குவரத்து போன்ற முக்கிய துறைகளில் ஆலோசனை மற்றும் மூலோபாய முதலீடுகளை வழங்குவதன் மூலம், உலக வங்கிக் குழுமத்தின் தனியார் துறைப் பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், தனியார் துறையைத் தொடர்ந்தும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான ஆதரவும் உள்ளடங்கும். மீட்பு முயற்சிகளுக்கு வழிகாட்ட, அனர்த்த அபாயக் குறைப்புக்கான உலக




ளாவிய வசதியுடன் இணைந்து, அனர்த்தத்திற்குப் பின்னரான உலகளாவிய விரைவான சேத மதிப்பீடு ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆரம்பக்கட்ட முடிவுகளை எடுப்பதற்கும், பதிலளிப்பு மற்றும் மீட்பு முயற்சிகளைச் சரியான முறையில் இலக்கு வைப்பதற்கும், இந்த விரைவான மதிப்பீடு அனர்த்தத் தாக்கங்கள் குறித்த நம்பகமான மதிப்பீடுகளை வழங்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

Rebuilding Sri Lanka நிதியத்தை உருவாக்கி அனர்த்தத்திற்குப் பின்னரான தேவை மதிப்பீடுகளின் அடுத்த கட்டம் உள்ளிட்ட பரந்த அளவிலான மீட்புத் திட்டங்களை அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையில், அரசாங்கத்துடன் நெருக்கமாகப் பணியாற்றி வருவதாகவும் உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

# கஜன் அணி விஜயையும் சந்திக்க ஆவல்!



இந்தியா தொடர்பில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதுடன் தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திக்க இவ் வாரத்தில் தமிழகத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர்கள் செல்கின்றார்கள்.

பயணிக்கும் அணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொ.ஐங்கரநேசன் மற்றும் செல்வராசா கஜேந்திரன் தசிய அமைப்பாளர் சுரேஸ் உத்தியோகபூர்வ பேச்சாளர், சுகாஸ் ஆகியோருடன் பிரசாரச் செயலாளர் காண்டீபன் உள்ளிட்டோர் உள்ளடங்கியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக சிறீலங்கா அரசு ஏக்கிய இராச்சிய அரசியல் யாப்பினை திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் அதனைத் தடுத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம் இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஸ்டி அரசியல் யாப்பினை கொண்டு வருவதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும். அந்த வகையில் பிராந்திய வல்லரசாகிய இந்திய அரசு இலங்கை மீது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான நிலையை ஏற்படுத்த தமிழக அரசியல் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது.

இந்நோக்கத்திற்காக தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்து அவ்விடயங்களை தெளிவுபடுத்தி அவர்களது ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சென்னை சென்று அரசியல் தலைவர்களுடன் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளதாக சந்திக்கும் தமிழகத் தலைவர்கள் அணியில் செந்தமிழன் சீமான் மற்றும் நடிகர் விஜய் ஆகியோரையும் உள்ளடக்க ஆதரவாளர்கள் கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

இதேவேளை ரெலோ இயக்கப் பேச்சாள் குருசாமி சுரேந்திரன் இது குறித்துத் தெரிவிக்கையில் தமிழகத்திற்கான அரசியல் பயணம் என்பது, தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்காக தமிழகத்தில் இருக்கின்ற முக்கியஸ்தர்களை சந்திப்பதாக அமைவது வரவேற்கத்தக்கது. ஆனால் வராத ஒரு தீர்வினை அல்லது அரசியல் யாப்பினை நிராகரிக்கின்றோம் என்று கூறி கலந்துரையாடல் செய்வது என்பது எந்தளவுக்கு பயனளிக்கும் என்று தெரியவில்லை. புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வரவேண்டும் என்ற விடயத்தை கோருவதாக அந்த பயணம் அமைந்தால் அது வரவேற்கத்தக்கது.

தமிழ்நாடு மாத்திரம் அல்ல, சர்வதேச பயணங்களில் ஈடுபடுகின்ற போது எமக்கான சமஸ்டி தீர்வினை அரசாங்கம் தரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற பயணமாக அந்தப் பயணம் அமைந்தால் அது ஆரோக்கியமாக இருக்கும் என்றார்.

ஏக்கிய ராச்சிய அரசியல் யாப்பில் அது ஒரு மாதிரி வரைபாக இருந்ததே தவிர இறுதி வரைபாக கொண்டு வரப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# மாகாணசபைத் தேர்தலை ஆராயும் குழு?

மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் வைப்பது பொருத்தமானது என்பதை ஆராய்வதற்காக பாராளுமன்ற குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது – இந்த செய்தி சொல்வது என்ன? அரசாங்கம் உண்மையில் தேர்தலை நடத்த விரும்புகின்றதா அல்லது காலத்தை நீட்டிக்கொண்டு செல்ல விரும்புகின்றதா?

மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். அதனை தொடர்ந்தும் பிற்போடுவதானது ஒரு ஜனநாயக மீறல். தொடர்ந்தும் பிற்போட்டால் அரசாங்கத்திற்கான உதவிகளை இழக்க நேரிடும் என்றவாறான எந்தவொரு அழுத்தமும் அரசாங்கத்தின் மீதில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தலை நடத்த வேண்டும் என்னும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லாதிருந்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை மாறாக தேர்தலை நடத்த வேண்டும் என்று எண்ணினால் தான் ஆச்சரியப்பட வேண்டும்.

தமிழ்ச் சூழலில் அரசியலை எடுத்து நோக்கினால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உண்மையிலேயே அக்கறை இருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு. வேறு வழியின்றி மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் என்று தமிழ் கட்சிகள் கூறினாலும் கூட அதில் உண்மையான ஈடுபாட்டுடன் அதன் தேவையை முழுமனதாக உணர்ந்து ஒருங்கிணைந்து செயற்படும் நிலைமையை தமிழர் பக்கத்தில் காண முடியவில்லை.

இப்போதும் கூட, சமஸ்டி மற்றும் புதிய அரசியல் யாப்புக் கதைகளை காவித் திரிவதில் மகிழ்வுறும் வியாதி தான் மேலோங்கியிருக்கின்றது. இந்த வியாதிக்கு மருந்தில்லை ஏனெனில் அரசியல் அனுபவங்கள் எதிர்மாறாக இருந்த போதிலும் கூட நிலைமைகளை புரிந்து கொண்டு மாகாண சபைத் தேர்தலுக்காக ஒன்றுபட்டுச் செயற்படும் போக்கை காணமுடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் இலங்கை தமிழரசு கட்சி மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்தி மக்கள் இயக்கமொன்றை ஆரம்பிக்கப் போவதாக கூறியிருப்பது நல்ல செய்தி தான். ஆனால் அதனை முறையாக நேர்த்தியாக முன்னெடுப்பார்களாக என்பதும் அடுத்த கேள்வி.

ஏனெனில் மாகாண சபைத் தேர்தல் பற்றி பேசினால் அத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதனை ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் அவ்வாறில்லாது மாகாண சபைத் தேர்தலையும் பேசிக் கொண்டு புதிய அரசியல் யாப்புக் கதைகளையும் காவித் திரிந்தால் அது எந்தவொரு பயனையும் தராது. மேலும், அது அரசாங்கத்திற்கே வாய்ப்பாகும்

ஏனெனில் புதிய அரசியல் யாப்பு வந்த பின்னர் தேர்தலுக்கு செல்லலாம் தானே என்று அரசாங்கம் வாதிட முடியும். அரசாங்கம் பாரியதொரு அழுத்தம் இல்லாமல் தேர்தலை நடத்தப் போவதில்லை என்பதை ஊகிக்க முடிகின்றது. தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையில் அரசாங்கத்தின் கையே ஓங்கியிருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று ஒரு அழுத்தத்தை பிரயோகிக்கக் கூடியதொரு நாடு என்றால் அது இந்தியா மட்டும் தான். ஆனால் தற்போதைய சூழலில் அவ்வாறான அரசியல் நிலைமையும் தற்போது இல்லை.

# தமிழர் நிலத்தில் புயல் வந்தாலென்ன? சுனாமி வந்தால் என்ன? புத்தர் வந்தே தீருவார்!

திருகோணமலை கடற்கரையில் புத்தர்சிலை முளைத்துள்ள நிலையில் அடுத்து கன்னியா வெந்நீரூறுப் பகுதியில் புதிதாக பெரிய புத்தர் சிலை ஒன்று திறப்பதற்கு தயார் படுத்தப்பட்டுவருகின்றமை அம்பலமாகியுள்ளது.

பாரம்பரிய சிவன் கோவில் 180 வருடங்கள் பழமையான பிள்ளையார் கோவிலுடன் இறந்தவர்களுக்கான பிதிர் கடன் செய்யும் இடமாகவும் கன்னியா உள்ளது. கோவில் இடம் முழுமையாக தனியாருக்கு சொந்தமாக இருந்திருந்த நிலையில் காணி உரிமையாளர் தனது காணியை பிள்ளையார் கோவில் கட்ட வழங்கியிருந்தார். யுத்தம் முடிந்த பின் படிப்படியாக இடங்களை கொள்ளையடிகும் நோக்குடனும் பௌத்த மயப்படுத்தும் நோக்குடனும் தொல்பொருள் திணைக்களம் ஊடாக தமிழர் காலாகாலமாக இருந்த இடங்களை வழிப்பாட்டுத்தலங்களை கையகப்படுத்த நடவடிக்கைகள் தொடர்கின்றது. எனினும் தற்போது வெந்நீர் ஊற்று பகுதியிலிருந்த சிவன் கோவிலும் பூட்டப்பட்டுள்ளது. பிதிர்கடன் செய்ய வருபவர்களுக்கு அதற்கு முன் பல அனுமதிகள் எடுக்க வேண்டியிருக்கின்றது.

இராணவன் வரலாற்றுப் பதாகை உடைக்கப்பட்டு, புது அனுராதபுர வரலாறு எழுதப்பட்டுள்ளது. விகாரை உருவாக்கப்பட்டுள்ளது. உப்புவெளி பிரதேச சபையிடம் இருந்த இடம் தொல்பொருள் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது கன்னியா வெந்நீரூறுப் பகுதியில் புதிதாக பெரிய புத்தர் சிலை ஒன்று திறப்பதற்ரகு தயார் படுத்தப்பட்டுவருகின்றமை அம்பலமாகியுள்ளது.



# விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனின் ஏற்பாட்டில் தமிழக முதல்வரைச் சந்தித்த கஜேந்திரகுமார் அணி!

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்ராலினை தலைமைச் செயலகத்தில் 18 டிசம்பர் 2025 வியாழக்கிழமை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவையினர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் ஏற்பாட்டில் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் உத்தியோக பூர்வ பேச்சாளர் சுகாஸ் கனகரத்தினம், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜா காண்டீபன், தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.




இச்சந்திப்பின் போது தமிழ்த் தேசியப் பேரவையினரால் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து ஏக்கிய ராஜ்ய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், புதிய அரசாங்கம் உருவாக்கவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய சமஸ்டி முறைமை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தமிழக அரசு இந்நிய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், பொருளாதார ரீதியாகப் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை அரசாங்கம் இந்தியாவின் பங்களிப்பின்றி வளர்ச்சியடைய முடியாது. தமிழகத்தோடு பொருளாதார ரீதியில் நெருக்கமான உறவையும் தொடர்பாடலையும் உருவாக்காமல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியென்பதும் பாரிய சவாலாகவே இருக்கும்.

இதன் பின்னனியில் இலங்கையின் மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தி, தமிழர்கள் விரும்பும் தீர்வை இந்தியாவினால் சாத்தியமாக்க முடியும் என்றும் தெரிவித்தனர். அத்தோடு தமிழக மற்றும் ஈழக் கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாகவும் உரையாடி இருந்தார்கள்.

நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தமிழக மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்சினையை இலங்கை அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி தமிழகத்தையும் ஈழத் தமிழர்களையும் நிரந்தரப் பகையாளிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்றும், இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்திய நலன்களுக்கு முரணான வெளிச் சக்திகள் இலங்கையில் காலூன்றி வருவதனையும் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

எல்லை தாண்டிய மீன்பிடியைக் கட்டுப்படுத்தி இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணத் தமிழக அரசு தலையிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

சந்திப்பின் முடிவில் தமிழ்த்தேசியப் பேரவையின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிய அரசியல் அமைப்புத் தொடர்பாகவும் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சினை தொடர்பாகவும் முதலமைச்சர் மு.க. ஸ்ராலினிடம் தனித்தனியான கோரிக்கைக் கடிதங்களைக் கையளித்தார்.

முதலமைச்சரின் சந்திப்பின் பின்னர் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் விரைவில் சந்திக்கவிருப்பதாகத் தமிழ்த் தேசியப் பேரவையின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பின் போது இந்திய பாராளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவனும் கலந்துகொண்டிருந்தார்.

இதேவேளை இன்னும் நான்கு மாதங்களில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சனையை மீண்டும் கிளப்பி உசுப்பேத்தல் அரசியல் செய்ய தமிழகக் கட்சிகள் சில முனையலாம். அதேபோன்று இலங்கையிலும் அரசிலயமைப்பு உருவாக்க முயற்சியோ அதில் என்ன விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது பற்றியோ எதுவுமில்லாத நிலையில் எக்கியராஜிய என்று வரப்போகுது என கூக்குரல் எழுப்பும் கஜேந்திரகுமார் அணியும் தமிழகம் ஒன்று திரண்டு விட்டது என்று பம்பாத்து விடலாம்.

இது இவ்வாறிருக்க நாட்டில் பேரிடர் நிகழ்ந்து மக்கள் வெள்ளத்தில் தத்தளிக்கும் போது அவர்களுக்கு ஒரு பாண் துண்டு கூடக் கொடுக்காத கோடிஸ்வரன் கஜேந்திரகுமார் தனதுபேரன் பாணியில் மக்களை ஏமாற்றலாம் என நினைக்கின்றார் என்கிறார்கள் சில அனுபவம் வாய்ந்த முது தமிழர்கள்.

# நீண்ட கால இடைவெளிக்குப் பின் இந்தியத் தூதுவரைச் சந்திக்கவுள்ள ஆறு தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள்!



இலங்கை தமிழ் அரசு கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை இந்திய உயர்ஸ்தானிகர் சந்திக்கும் நிகழ்வாக இச்சந்திப்பு நிகழவுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சிவானந்தன் நவநீதராஜா (வேந்தன்) மற்றும் சமத்துவ கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் குறித்த சந்திப்பில் இணையவுள்ளனர்.

இச்சந்திப்பில் ஆறு கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக தயாரித்த மகஜர் ஒன்று இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்படவுள்ளது. இச்சந்திப்பில் மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்குவதோடு நிலையான சமஷ்டி தீர்வினை அடைவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை சுட்டிக்காட்டியும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

மேலும் வடபகுதியில் அமைந்துள்ள பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிக்கப்படாமை மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை வணிக நீதியான துறைமுகமாக செயல்படுத்துவது தொடர்பில் இந்தியாவின் அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்குவது தொடர்பிலும் பேசப்படவுள்ளது.

உயர்ஸ்தானிகருடன் பேசப்படுகின்ற விடயங்கள் மகஜர் வடிவில் தயாரிக்கப்பட்டு ஆறு கட்சிகளின் தலைவர்களின் கையொப்பத்துடன் உயர்ஸ்தானிகரின் ஊடாக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கையளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இம்மாத இறுதிக்குள் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் இன்னொரு புறம் நடைபெற்று வரும் நிலையில் தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது..

## உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்க கோப்பாயில் காணி வழங்கத் தயாராக இருக்கும் பெரியார் கந்தையா வைத்தியநாதனின் பேத்தியார்

யாழ்ப்பாணத்துக்கான உள்ளக விளையாட்டரங்கை அமைப்பதற்கான காணியை தான் நன்கொடையாக கொடுத்து உதவ தயாராக உள்ளதாக சமூக நலத்துறை முன்னாள் அமைச்சர் கந்தையா வைத்தியநாதனின் பேர்த்தியாரான கௌரி பொன்னையா தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 17 டிசம்பர் 2025 புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்,



யாழ். குடாநாட்டில் உள்ளக விளையாட்டு அரங்கத்தை அமைப்பதற்கு முயற்சிக்கின்றார்கள் என கேள்வியுற்றேன். அதற்காக புராதன மரங்களை அழிக்கவுள்ளதாகவும் கேள்வியுற்றேன். இயற்கையை அழிக்காது, புராதன மரங்களை அழிக்காது, உள்ளக விளையாட்டரங்கை சகலரும் பயன் பெறத்தக்க வகையில் மாற்றுவதற்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியும். எமது பரம்பரைக்கு உரிய கோப்பாயில் உள்ள நிலங்களில் ஒன்றை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு வழங்குவதன் ஊடாக அபிவிருத்திக்கு ஒத்துழைக்க நாம் முயற்சிக்கின்றோம். அதற்காக தவிசாளர் தியாகராஜா நிரோஸை சந்தித்து இணக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளோம்.

இளைஞர்கள் பெருமளவில் வாழக்கூடிய கோப்பாய் பகுதியில் உள்ளக விளையாட்டரங்கினை அமைக்க அரசாங்கம் முன்வருமாயின் எமது காணிகளில் ஒன்றை வழங்க பிரதேச சபையுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

# அநுர அரசாங்கத்தின் கீழ் உள்நாட்டு வெளிநாட்டு உதவிகள் திருடப்படாது



இலங்கையின் பிரதான சங்கநாயக்க தேரர் ஓமல்பே சோபித தேரர் சுனாமி நிவாரண உதவிகளைத் திருடிய ஆட்சியாளர்கள் இருந்ததாகவும், கோவிட் தொற்றுநோயின் போது நண்பர்களுக்கு அண்டிஜென் பரிசோதனைகள் மூலம் திருட அனுமதித்ததாகவும் குற்றம் சாட்டினார். எனினும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் கிடைக்கும் உதவிகள் சரியாக விநியோகிக்கப்படும் என்று தான் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

தலப்பத்திப்பிட்டிய சமூக சேவைகள் அறக்கட்டளை ஏற்பாடு செய்த கங்கொடவில சோம தேரரின் நினைவு விழாவில் பங்கேற்று அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில், அனர்த்த முகாமைத்துவத்தில் மிக உயர் நிலையில் இருப்பது பௌத்த விகாரைகள் ஆகும். மறைந்த சோம தேரர் தான் நாட்டைக் காப்பாற்ற முன்னோடியாக இருந்தார். அவரது வழிகாட்டுதலின் கீழ், பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர எங்களால் முடிந்தது. இன்றும், சோம தேரர் எங்களுக்கு வழி காட்டுகிறார்.

இந்த நிகழ்வில் பூஜ்ய பாஸ்ஸரமுல்லே தயாவன்ச தேரர், புதுகல ஜினவன்ச தேரர், கங்கொடவில சோம தேரரின் சகோதரர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அம்பிட்டிய சுமண தேரருக்கு நீதிமன்றம் பிடியாணை! தலைமறைவாகியுள்ள தேரரைத் தேடும் பொலிசார்!

தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் எனக் கூறிய அம்பிட்டிய சுமண ரத்ன தேரருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் 15 டிசம்பர் 2025 திங்கட்கிழமை நீதிமன்ற பிடியாணை பிறப்பித்து வெளிநாட்டு பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டுள்ளது. மேலும், எதிர்வரும் ஜனவரி 26 திகதி குறித்த வழக்கை ஒத்தி வைத்துள்ளது.

கடந்த 2023-10-23 திகதி ஊடகங்களுக்கு சுமணரட்ன தேரர் கருத்து வெளியிட்டபோது வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும் என தெரிவித்தார்.

இதையடுத்து குறித்த வன்முறையான கருத்துக்கு எதிராக 2023-10-27ம் திகதி கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி தனுக்க ரனஞ்சக முறைப்பாடு செய்ததுடன் சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழுள்ள சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார

இந்தநிலையில் குறித்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபருக்கு கோப்புக்கள் அனுப்பப்பட்ட நிலையில், கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் தேரரை கைது செய்யுமாறு உத்தரவிட்டது. இந்தநிலையில் குறித்த வழக்கு கடந்த 8ஆம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த தேரர் நீதிமன்றில் சமூகமளிக்காத நிலையில் வழக்கு தொடுநர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின்படி தேரரை இதுவரை கைது செய்யப்படவில்லை என நீதவான் கவனத்துக்கு கொண்டு வந்தார்

இதையடுத்து நீதவான் அடுத்த வழக்கு தவணை எதிர்வரும் 15ம் திகதி முன்னர் குறித்த தேரரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் குறித்த தேரரை இதுவரை நீதிமன்றில் ஏன் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதவான் கட்டளையிட்டார்.



இந்த நிலையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்காக கடந்த திங்கட்கிழமை 15ம் திகதி விசாரணைக்கு எடுத்து கொண்ட போது தேரர் ஆஜராகாத நிலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்பாக முதலாம் தரம் கொண்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆஜராகி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயர் நீதிமன்ற வழக்கு ஒன்றுக்கு சென்றுள்ளதாகவும் அதனால் நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை எனவும் குறித்த தேரர் தங்கியிருக்கும் இடம் என சந்தேகிக்கப்படும் மங்களகம கெளவ்லியாமடு மற்றும் சின்னவத்தை விகாரை பகுதிக்கு தேடிச் சென்றுள்ளதாகவும் அவர் அங்கு இல்லை எனவும் அவர் மறைந்திருக்கும் இடத்தை தேடி வருவதாகவும் நீதவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து நீதவான் தேரரை கைது செய்வதற்காக நீதிமன்ற பிடியாணை பிறப்பித்து அவருக்கு வெளிநாட்டு பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

# பலாலி விமான நிலைய பயணிகள் முனையத்துக்கு அடிக்கல்!



யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் பயணிகள் முனைய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் விமான நிலையத் தலைவர் சமன் அமரசிங்க விமான நிலைய இணை முகாமைத்துவ தலைவர் சஞ்சீவ அமரபதி, இலங்கை விமான நிலைய ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், பொறியியலாளர் ஆகியோரால் சர்வமத வழிபாடுகளோடு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதேவேளை கட்டம் 02 க்கான வேலைகள் ஜனவரி 2026 இல் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களுக்கும் எதிர்பார்க்கப்படும் மொத்த முதலீடு ஏறத்தாழ 700 ரூபாய் மில்லியன் ஆகும் என சிவில் விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் ஜனிதா ருவான் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க மலேசியாவில் இருந்து வந்த சிறிய ரக விமானம் ஒன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் 15ஆம் திகதி திங்கட்கிழமை தரையிறங்கியுள்ளது. மலேசியாவின் ஜோகூர் பாரு செனாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வந்த அந்த விமானத்திற்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

குறித்த விமானம் இந்த ஆண்டு தரையிறங்கிய சிறிய ரக மூன்றாவது சர்வதேச விமானம் எனவும் பிராந்திய விமான இணைப்புகளை வலுப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கவும், இலங்கையின் வட பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தவும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நெருக்கடி நேரத் தோழன் இந்தியா!



இலங்கை கடந்த சில ஆண்டுகளில் எதிர்கொண்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள், எமது தேசிய நினைவகத்தில் ஒருபோதும் மறையாத காயங்களைப் பதித்துள்ளன. அடிப்படை தேவைகள் கூட கிடைக்காத அளவிற்குச் சரிந்த அந்த சூழலில், சர்வதேசம் கவனித்தாலும் உடனடி செயல் வடிவில் கை கொடுத்தது மிகச் சிலரே. அந்த வரலாற்று தருணத்தில், அரசியல், பொருளாதாரம், மனித நேயப் பொறுப்பு ஆகியவற்றை ஒன்றாகச் சுமந்து கொண்டு நம்மை உயர்த்திய நாடு இந்தியா என்பது மறுக்க முடியாத உண்மை.

இன்று யார் எதைச் சொன்னாலும், அதிர்ச்சியின் நடுவில் தேவையான எரிபொருள், மருந்து, உணவு போன்ற உயிர்க் கோலங்களைக் கொண்டு வந்த நாடு இந்தியாதான். இலங்கையின் பொருளாதார இயங்குகோள் முற்றிலும் சிதறியிருந்த போது, $4 பில்லியனுக்கும் மேற்பட்ட உதவி வழங்கி அடிப்படை வாழ்க்கை ஓட்டத்தை மீண்டும் இயக்க இந்தியா மிகப் பெரிய பங்கு வகித்தது.

அளித்த உதவி வெறும் நிதி அல்ல நம்பிக்கை. IMF மீட்பு திட்டத்திற்கு முதன்மையான உறுதி கடிதத்தை வழங்கி, இலங்கை சர்வதேச தளத்தில் மீண்டும் நிற்க உதவியது. இதுவே பொருளாதார மீட்சியின் கதவுகளைத் திறந்த முக்கிய தருணம். பல நாடுகள் ஆலோசித்த போதும், இந்தியா மட்டும் முடிவெடுத்து, செயலில் இறங்கியது.

அண்டை நாடுகளுக்கிடையேயான உறவு எழுத்துப் பிரச்னைகளால் அல்ல நெருக்கடியின் நேரத்தில் யார் பக்கத்தில் நின்றார்கள் என்பதை மற்றவராக நிர்ணயிக்கும். இந்த அளவில் பார்க்கும் போது இந்தியாவின் நடவடிக்கைகள் அண்டை நாடு கொள்கை என்பதைக் கடந்ததாகும். அது ஒரு தோழமைத் தன்மை, குடும்பப் பொறுப்பு, மேலும் மனிதநேய நிறைவு கொண்ட தலையீடாகும்.

வடக்கு கிழக்கில் வீடு கட்டுதல், பள்ளிகள் அமைத்தல், மருத்துவ வசதிகள் வழங்குதல் போன்ற மனிதநேய உதவிகள் இந்தியாவின் நீண்டகால உறுதியைக் காட்டுகின்றன. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீண்டும் வழிப்படுத்த இந்தியா எடுத்த முயற்சிகள் சமூகத்தின் ஆழத்தில் நன்றியுணர்வை விதைத்துள்ளன.

இலங்கை இன்று மெதுவாக மீட்பின் பாதையில் பயணிக்கிறது. அந்த பாதையில் இந்தியாவின் பங்கின்றி பேசுவது உண்மையைத் தவிர்ப்பதாகிவிடும். நம் எதிர்கால பொருளாதார வடிவமைப்பிலும், பிராந்திய வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் இந்தியா ஒரு முக்கிய கூட்டாளியாக இருப்பது தெளிவாகிறது.

நெருக்கடி நேரம் மனிதரைப் பரிசோதிப்பது போல் நாடுகளின் உண்மையான நட்பையும் நிரூபிக்கிறது. இந்தியா அந்தப் பரிசோதனையைத் தாண்டி, நெருக்கடி நேரத் தோழனாக மட்டுமல்ல நிறைவேற்றுத் தோழனாக திகழ்கிறது.

ஒரு நாடு எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய பாடம் இது தான்: சூழ்நிலை சமயத்தில் யார் நம்மை காப்பாற்றுகிறார்களோ, அவர்களே உண்மையான அண்டையவர்கள். இலங்கையின் மீட்புப் பயணத்தில் இந்தியாவின் பங்களிப்பு வரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயமாகவே நிலைத்திருக்கும்.

# மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பாதுகாப்பு உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும் கனடிய தமிழர் பேரவை கோரிக்கை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
“Voice of Tamil Canadians”

இலங்கையின் மலையகப் பகுதிகளில் சுழற்காற்று டிட்வா காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட கடும் பாதிப்புகள் குறித்து கனேடிய தமிழர் பேரவை (Canadian Tamil Congress – CTC), ஆழ்ந்த கவலை தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், ஏற்கனவே ஆபத்தான சரிவுப் பகுதிகளில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் முக்கியமாகத் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர் சமூகங்கள் தங்களின் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப் பேரழிவு தனிப்பட்ட ஒன்றல்ல. பல தசாப்தங்களாக மலையகத் தமிழ்ச் சமூகங்கள் இலங்கையில் பொருளாதார ரீதியாகவும், இயற்கை அனர்த்தங்களுக்கு அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற சமூகங்களாகவும் இருந்து வருகின்றன. மீண்டும் மீண்டும் ஏற்படும் வெள்ளம், நிலச்சரிவு போன்ற அனர்த்தங்கள், நீண்டகால பாதுகாப்பு இல்லாத, பாதுகாப்பற்ற நிலங்களில் குடும்பங்கள் வசிக்க வேண்டிய கட்டாய நிலையை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு அனர்த்தத்திற்குப் பிறகும் அதே ஆபத்தான நிலங்களுக்கு மீண்டும் மக்களைத் திருப்பி அனுப்புவது, அவர்களின் உயிர்களை தொடர்ந்தும் ஆபத்தில் ஆழ்த்துகிறது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மலையக சமூகங்களுக்காக பாதுகாப்பை முதன்மையாகக் கொண்ட உரிமை சார்ந்த நீண்டகால இடமாற்று உடனடியாக ஏற்குமாறு இலங்கை அரசையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கனேடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது. அந்தத் திட்டம் பின்வரும் அடிப்படை கோட்பாடுகளை உட்படுத்த வேண்டும்:

மலையகப் பகுதிகளுக்குள் பாதுகாப்பான நிலங்களுக்கு இடமாற்றம்:

சாத்தியமான இடங்களில், அதே மாவட்டங்களுக்குள், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட நிலங்களில் குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். வீடமைப்பு, வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விருப்ப அடிப்படையிலான இடமாற்றம்:

மலையகப் பகுதிகளில் பாதுகாப்பான நிலம் கிடைக்காத சந்தர்ப்பங்களில், முழுமையான சம்மதத்துடன் இடமாற்றம் விரும்பும் தமிழ்மொழி பேசும் குடும்பங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலம் வழங்கும் விருப்பத் திட்டத்தை கனேடிய தமிர் பேரவை CTC ஆதரிக்கிறது. அங்கு நிலவும் தமிழ்ச் சமூகச் சூழல், தமிழ் வழிக் கல்வி மற்றும் பண்பாட்டு தொடர்ச்சி குடும்பங்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் உறுதி செய்யும்.

எந்தவொரு இடமாற்றமும் முழுமையாக விருப்ப அடிப்படையிலும், தகவல் அறிந்த சம்மதத்துடனும், கட்டாயமற்ற முறையிலும் நடைபெற வேண்டும். நில உரிமை பாதுகாப்பு, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார ஆதரவு உறுதி செய்யப்பட வேண்டும்.

மலையகத் தமிழ்ச் சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இலங்கையின் குடிமக்கள் அமைப்புகள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளுடன் இணைந்து செயல்பட கனேடிய தமிழர் பேரவை தயாராக உள்ளது.

மலையகப் பகுதிகளில் மீண்டும் மீண்டும் நிகழும் உயிரிழப்புகளும் வீட்டு இழப்புகளும் ஒன்றை தெளிவுபடுத்துகின்றன: பாதுகாப்பற்ற நிலங்களுக்கு மக்களை மீண்டும் அனுப்புவது தீர்வல்ல. மனிதநேயமும், நீடித்ததுமான பாதுகாப்பை மையமாகக் கொண்ட அணுகுமுறை உடனடியாகத் தேவைப்படுகிறது. அடுத்த பேரழிவுக்குப் பிறகு அல்ல இப்போது மலையகத் தமிழ்ச் சமூகங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பேரனர்த்தத்தின் போது ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிறப்பு மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் அழிக்கப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை வழங்குவதற்காக நடமாடும் சேவைத் திட்டங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் சசிதேவி ஜல்தீபன் தெரிவித்துள்ளார்.

அண்மைய பேரிடரால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 2.2 மில்லியன் மக்களில், பாதிக்கும் மேற்பட்டோர் இந்த முக்கியமான ஆவணங்களை இழந்துள்ளதாக அத்திணைக்களம் மதிப்பிட்டுள்ளது.

இந்த முயற்சியின் கீழ், பேரிடரால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் பதிவுச் சான்றிதழ்கள் இலவசமாகவும், ஒரு நாள் துரித சேவை மூலமாகவும் வழங்கப்படுகின்றன.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial
- Cremation


Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை


Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# மல்வத்த - அஸ்கிரிய பீடாதிபதிகள் அநுர அரசுக்கு வழங்கிய நற்சான்று ஆட்சியின் நீட்சிக்கான வழிகாட்டி!

மழை விட்டும் தூவானம் போகவில்லையென்பது ஒரு வாழ்மொழி. மழை நிலத்தை நனைக்கும் வெறும் தண்ணீர் அல்ல. மனிதனின் அன்றாட வாழ்வுக்கு அத்தியாவசியமானது.

ஆனால் மழை காற்றுடன் இணையும் பொழுது அதன் வீச்சு வேறாகிறது. மழை தூறுகிறது மழை பெய்கிறது மழை பொழிகிறது என்ற சொல்லாடல்கள் ஊடாக தென்றலுக்கும் புயலுக்கும் சூறாவளிக்குமிடையிலான அர்த்தத்தை புரிந்து கொள்ளலாம். சூறாவழியால் ஏற்பட்ட அனர்த்தத்தை இலங்கை இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறது. சர்வதேசமும் இதனை உணர்ந்து உதவிக் கரங்களை நீளமாக நீட்டுகின்றன.





தேசிய மக்கள் சக்தி அரசு அநுர குமர தலைமையில் கண்களை மூடிக் கொண்டு நிவாரணப் பணிகளை மேற்கொள்கிறது. இதற்கு ஏதுவாக உலகம் தாராளமாக உதவுகிறது. அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்க்கும்போது நாடு வழமைக்குத் திரும்ப பல மாதங்கள் அல்லது வருடங்கள் கூட ஆகலாம்.

இலங்கை எல்லோருக்கும் பொதுவானது என்பதை எடுத்துக்காட்ட (இதுவும் ஒருவகை அரசியல் தான்) கடந்த 12ம் 13ம் திகதிகளில் இடம் பெறவிருந்த இலங்கையர் தினம் என்னும் தேசிய நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மிக மோசமாக பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதி நேரடியாகச் சென்று பார்வையிடுகிறார். சிறுவர் முதல் முதியோர் வரையானவர்களை அணைத்து ஆறுதல் கூறுகிறார். குடும்ப உறவுகளை இறந்தவர்களுக்கு தேறுதல் கூறி உடனடி நிவாரணத்துக்கு உத்தரவாதம் வழங்குகிறார்.

மத்திய மாகாணத்தின் பெரும்பகுதிகளே பெரும் அழிவைச் சந்தித்துள்ளன. மண் சரிவுகளில் அகப்பட்டு காணாமல் போயுள்ள சுமார் 200க்கும் அதிகமானவர்களுக்கு இறப்புப் பதிவு சான்றிதழ் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது பெறுபவர்களுக்கு தாமதமின்றி அதற்கான நிவாரணம் கிடைக்குமாம். வீடுகளை சுத்தப்படுத்த 25இ000 ரூபா மேலதிக செலவுகளுக்கு 50இ000 ரூபா உயிரிழப்புகளுக்கும் வீடழிப்புகளுக்கும் நிறைவான நிவாரணம். ஜனாதிபதி உத்தரவில் அரச இயந்திரம் வேகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் எங்கிருந்து நிதி கிடைக்கும் என்ற ஆராய்ச்சியில் எதிர்க்கட்சிகள் தங்கள் சக்தியை செலவழிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள பலர் இன்னமும் தங்கள் தொகுதிகள் பக்கமே போகவில்லை. தங்கள் வாக்குகளால் எம்.பியானவர்களைத் தேடி தொகுதி மக்கள் நெடுமூச்சு விடுகின்றனர். எந்தவொரு நாடாளுமன்ற எம்.பியாவது தங்களின் ஒரு மாதச் சம்பளத்தைக்கூட நிவாரண நிதிக்கு வழங்கியதாக இதுவரை தெரியவில்லை. அர்ச்சுனா இராமநாதன் தமது பங்காக நான்கு இலட்சம் ரூபாவுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியதாக அறிவித்துள்ளார். எதிர்க் கட்சிகளின் பிரமுகர்கள் அவ்வப்போது எங்காவது சென்றுவிட்டு ஊடகங்களில் செய்தி போடுகின்றனர்.

ஒரு நாள் மழைக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்கிய எம்.பிக்களின் காலம் முன்னர் இருந்தது. 1978ம் ஆண்டு சூறாவளியின் போது எம்.பிக்களின் தாராள நிதி உதவியை நேரில் தரிசித்த சாட்சி இந்தப் பத்தி எழுத்தாளர். ஆனால் இன்று நிலைமை அப்படிக் காணப்படவில்லை.

உலக நாடுகள் முன்னர் வழங்கிய உதவி போதாது என்று மேலும் மேலும் வழங்கி வருகின்றன. சில நாடுகள் இரண்டாம் முறையாகவும் வழங்குகின்றன. மேலும் உதவிக்கு உத்தரவாதம் கொடுக்கின்றன. இலங்கையின் மீட்பு முயற்சிக்கு இலங்கைப் பணத்தில் ஆயிரம் கோடி ரூபாவை திரட்ட ஐக்கிய நாடுகள் சபை இணங்கியுள்ளதாக அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரே பிரான்சே கூறியுள்ளார். அதேசமயம் இனி வரக்கூடிய கால நிலை மாற்ற பேரிடர்களை எதிர் கொள்ள முதலீடுகள் தேவையென்று அநுர அரசுக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார்.

பேரிடரிலிருந்து இலங்கை மீள்வதற்கு அரசு கேட்ட 200 மில்லியன் டாலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் முடிவெடுத்துள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு 200 மில்லியன் டாலரை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்ள வேண்டியது தமிழ் அரசியல் கட்சிகளின் பாரிய கடமை. தொல்பொருள் வனபரிபாலன திணைக்களங்கள் இவ்வாறான நிதிகளில் தங்கள் கைங்கரியங்களை நிறைவேற்றக்கூடிய அபாயம் உண்டு. இதற்கு கடந்த கால நிகழ்கால அனுபவங்கள் பல உள்ளன.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலர் ஒன்றிணைந்து தங்கள் சொந்தப் பணத்தில் 3.6 மில்லியன் ரூபாவை நிவாரணத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். இது முற்றிலும் முன்மாதிரியான ஒரு செயற்பாடு. அமெரிக்காவின் இராஜாங்க உதவிச் செயலாளர் அலிசன் கூக்கர் இப்போது இலங்கையில் நிற்கிறார். அமெரிக்காவின் சி-130 உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வேளையில் இவரது வருகை அதனுடன் சேர்ந்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமரவை நேரில் சந்தித்து உரையாடிய இவர் இலங்கையின் மீள் எழுச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அமெரிக்க தயார் என்று உறுதியளித்துள்ளார். ஆங்கிலத்தில் பிளாங் செக் என ஒன்றுண்டு. ஒரு தொகையுமே குறிப்பிடாது வழங்கப்படும் காசோலை என்பது இதன் அர்த்தம். அதாவதுஇ காசோலையின் பெறுனர் தமக்குத் தேவையான தொகையை இதில் எழுதலாம். அவ்வாறான உத்தரவாதம் அலிசன் உடையது. இது தவிர இலங்கை மீது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்திருக்கும் தீர்வை வரியை ரத்தாக்குவது அல்லது குறைப்பது பற்றியும் அமெரிக்கா ஆலோசிப்பதாக கூறியுள்ளார்.

இந்தியா சீனா போன்ற நாடுகள் வழங்கும் உதவிகளுக்கு நிகராக அல்லது அதனிலும் மேலாக அமெரிக்க உதவி கிடைக்கலாம்போலத் தெரிகிறது. ஏற்கனவே சி-130 நடவடிக்கைகள் மீது பலரும் ஐயம் வெளியிட்டு வரும் வேளையில் அமெரிக்காவின் அளவு கடந்த உதவிகள் மேலும் அச்சமூட்டுவதாக அமையலாம்.

முதலாளித்துவ மேலாண்மை கொள்கைகளைக் கொண்ட நாடுகளை எதிர்த்து வந்த ஜே.வி.பி.யின் பினாமி ஆட்சிக்கு அமெரிக்கா உதவுவது என்பது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. உதவி எங்கிருந்து வந்தாலும் அதை தட்டிக் கழிக்க முடியாத நிலை இலங்கையினுடையது. இதனால் அரசியல் சித்தாந்தங்களை வெளிப்படுத்தி கிடைக்கும் உதவிகளை வெட்டுவதற்கு சிலர் முயற்சிப்பது கண்கூடு.

கடந்த ஆட்சிக் காலங்களில் ஊழல் புரிந்துஇ கொள்ளையடித்து பொத்தி வைத்திருக்கும் பணத்தில் ஒரு பகுதியைக்கூட நிவாரணத்துக்கு வழங்க உள்நாட்டு அரசியல்வாதிகள் முன்வரவில்லை. ஆனால் இவர்கள் வெளியிட்டுவரும் கருத்துகளும் அபிப்பிராயங்களும் அரசாங்கத்தைச் சாடுவதாகமும் மக்கள் மத்தியில் ஐயத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க நினைவு நிதியத்திலிருந்து 250 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதுடன் அவசிய மற்ற தப்பபிப்பிராயங்களை பரப்ப வேண்டாமெனவும் வேண்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச திடீர் நோய்வாய்ப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உள்ளாகியுள்ளார். இவரது பொதுஜன பெரமுன விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பேரிடர் உயிர்ச் சேதங்களுக்கு ஆளும் தரப்பே முழுப்பொறுப்பு என்று குற்றஞ்சாட்டியுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடு பேரிடர் விடயத்தில் தாமதமானது என்பது உண்மை. அதனை ஆட்சித் தரப்பே ஒருவகையில் ஒப்புக் கொண்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னரே பேரிடர் எச்சரிக்கை வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பது சகல எதிர்க்கட்சியினரதும் குற்றச்சாட்டு. எச்சரிக்கை ஏற்கனவே வழங்கப்பட்டதென்றால் இது விடயத்தில் அரசாங்கத்தைச் சுட்டி நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றம் எதிர்க்கட்சிகள் மீதும் விழுகிறது என்பதை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

முள்ளிவாய்க்கால் அழிவின் பின் பாதிக்கப்பட்டவர்களை ராஜபக்ச அரசு மீளக்குடியேற்றியது என்று சுட்டிக் காட்டியுள்ள நாமல் ராஜபக்ச அநுர அரசு இப்போது ஏன் அவ்வாறு செயற்படவில்லை என்று கேட்டிருக்கிறார். முள்ளிவாய்க்கால் போரில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுககள் இத்தனை ஆண்டுகளாக வீதிகளில் நிற்பதை இவர் அறியவில்லைப் போலும். பேபி நாமல் பாவம்! இன்னமும் அரசியலில் புட்டிப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பிலுள்ள தூதுவர்களைச் சந்திப்பதில் மினக்கெடுகிறார். இவர்களை சந்திப்பதை ஊடகங்கள் ஊடாக படம் காட்டுகிறார். எல்லாவற்றிலுமே குறை காண்பவராக மல்லுக்கட்டுகிறார். இவரது கட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதாக எங்கும் காணப்படவில்லை.

எல்லாவற்றிலும் மேலானது தமிழர் தரப்பில் இடம் பெறும் அதிரடிகள். நிவாரணப் பணிகளை விட இவர்களின் அறிவார்ந்த நிலைப்பாடு நிச்சயம் சொல்ல முடியாத மாகாண சபை தேர்தல். முன்னைய உள்ளாட்சித் தேர்தலின்போது வெளியேறியவர்களை (வெளியேற்றப்பட்டவர்கள்) மீண்டும் தமிழரசுடன் இணைப்பதற்கான முதற் கூட்டம் முடிவடைந்துள்ளது. இது ஒரு தொடர்கதையாகுமாம். இச்சந்திப்பின் பிறையோரிட்டி தமிழரசின் சுமந்திரனை மாகாணசபை தலைவராக்குவது. இதற்காக எந்த விட்டுக் கொடுப்புக்கும் தமிழரசு இறங்கியுள்ளது.

பேரழிவின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அநுர அரசின் நிகழ்ச்சிப் பட்டியலில் இப்போதைக்கு மாகாணசபை தேர்தல் இல்லையென்று பெலவத்தை வட்டாரங்கள் சொல்லுகின்றன.

இவ்வேளையில் மல்வத்தஇ அஸ்கிரிய பீடாதிபதிகள் அநுர அரசின் துரித நிவாரணப் பணிகளுக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழ் இந்த ஆட்சியின் நீட்சிக்கான வழிகாட்டியாகத் தெரிகிறது.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 டிசம்பர் 2025 முதல் 19 டிசம்பர் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை

நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது 15வது ஆண்டு நினைவு நாள் 18 டிசம்பர் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26 வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி

பேராலை பளைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 26வது ஆண்டு நினைவு தினம் 10 டிசம்பர் 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வல்லிபுரம் கந்தசாமி

தெல்லிப்பளை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த முன்னாள் இ.போ.ச சாரதி வல்லிபுரம் கந்தசாமி அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 09 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வல்லிபுரம் கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 42வது பிறந்த நாள் நினைவாக



### திரு ஈசாந்தன் இராமலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு ஈசாந்தன் இராமலிங்கம் அவர்களது 42வது பிறந்த நாள் 20 டிசம்பர் 2025 சனிக்கிழமை ஆகும். அன்றையதினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது துணைவியார் திருமதி லக்ஷனா ஈசாந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார். திரு ஈசாந்தன் அவர்களது பிறந்த நாளில் அவரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 25 டிசம்பர் 2025 வியாழக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். இணையர்கள் இருவரையும் நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இந்திராதேவி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



07 டிசம்பர் 2025 ஞாயிற்றுக் கிழமை யாழ்.ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பகீரதன் முத்துக்குமாரசாமி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை தெல்லிப்பளை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த முன்னாள் இ.போ.ச. சாரதி திரு கந்தசாமி வல்லிபுரம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செந்தாரி கிளின்ஸ் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செந்தாரி கிளின்ஸ் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 டிசம்பர் 2025 புதன்கிழமை பேராலை பளையைச் சேர்ந்த திருமதி இலட்சுமி கிருஷ்ணபிள்ளை அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 டிசம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மயூரி இராஜேந்திரன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



14 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வர்சிகா.எஸ் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



14 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 டிசம்பர் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு புஸ்பராஜ் சப்பாணி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு புஸ்பராஜ் சப்பாணி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



16 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு புவிபாலன் பாலகிருஷ்ணன் அவர்களது 60வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு புவிபாலன் பாலகிருஷ்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



18 டிசம்பர் 2025 வியாழக்கிழமை நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா - கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

**திரு இளங்குமரன் சிவஞானம்**

வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த எங்கள் சகோதரன் இளங்குமரன் சிவஞானம் அவர்களது மறைவுச் செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கேற்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

தூர தேசங்களில் இருந்து தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்

அன்னாரது பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்ட போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் மலர்மாலை அணிவித்தும் மலர் வளையம் சாத்தியும் அஞ்சலி செய்தோருக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் அனுதாபச் செய்திகள் வெளியிட்டோருக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் 31ம்நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையை முன்னிட்டு 14 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள். ஓம்சாந்தி!

# தாய்லாந்து - கம்போடியா எல்லையில் மீண்டும் வெடித்தது போர்! ட்ரம்பின் அமைதி ஒப்பந்தம் தோல்வி!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தென்கிழக்கு ஆசியாவில் தாம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முடித்து விட்டதாக அறிவித்துச் சில வாரங்களே ஆன நிலையில் தாய்லாந்து மற்றும் கம்போடியா எல்லையில் மீண்டும் கடுமையான மோதல்கள் வெடித்துள்ளன.



சர்ச்சைக்குரிய பிரிய விஹார் (Preah Vihear) கோவில் எல்லைப் பகுதியில் இரு நாட்டு இராணுவத்தினரும் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டுள்ளதால் அப் பகுதியில் பெரும் போர் பதற்றம் நிலவுகிறது.

முறிந்து போன போர் நிறுத்த ஒப்பந்தம் கடந்த மாதம் வாஷிங்டனில் நடைபெற்ற உச்சி மாநாட்டில், தாய்லாந்து மற்றும் கம்போடியத் தலைவர்களைச் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து விட்டதாகப் பெருமிதத்துடன் அறிவித்திருந்தார். ஆனால் அந்த ஒப்பந்தம் கையெழுத்தான 20 நாட்களுக்குள்ளாகவே, 13 டிசம்பர் 2025 (சனிக்கிழமை) இரவு எல்லையில் துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மறுநாள் காலை இது பீரங்கித் தாக்குதலாக (Artillery Shelling) மாறியுள்ளது. இந்த மோதலில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக முதற் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோதலின் மையப்புள்ளி: பிரிய விஹார் கோவில் வரலாறு இந்தச் சண்டையின் ஆணிவேர். 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரிய விஹார் இந்துக் கோவிலைச் சுற்றியுள்ள நிலப்பரப் பாகும்.

வரலாற்றுச் சிக்கல்: 1962-ம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் (ICJ) இக்கோவில் கம்போடியாவிற்கே சொந்தம் என்று தீர்ப்பளித்தது. ஆனால், கோவிலைச் சுற்றியுள்ள 4.6 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பு யாருக்குச் சொந்தம் என்பதில் தெளிவான முடிவு எட்டப்படவில்லை.

புவியியல் அமைப்பு: கோவிலின் பிரதான நுழைவாயில் தாய்லாந்து எல்லையிலிருந்து தான் எளிதாக அணுக முடியும். இதனால், கோவிலுக்குச் செல்லும் பாதை மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப்பகுதியை தாய்லாந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிறது.

கடந்த கால மோதல்கள்: 2008-ம் ஆண்டு இக்கோவில் யுனெஸ்கோ (UNESCO) உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டபோது பெரும் கலவரம் வெடித்தது. தொடர்ந்து 2011-ம் ஆண்டு நடந்த மோதலில் இரு தரப்பிலும் பலர் உயிரிழந்தனர். தற்போது மீண்டும் அதே பழைய வடுவே வெடித்துச் சிதறியுள்ளது.

ட்ரம்பின் இராஜதந்திரத்திற்குச் சவால் இந்தத் திடீர் மோதல், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வெளியுறவுத் கொள்கைக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. எனது தலைமையின் கீழ் ஆசியா அமைதியாக உள்ளது என்று அவர் கூறிய கூற்று தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.

எல்லையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தைக் குறைக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் முக்கிய விதிமுறையை இரு நாடுகளுமே மீறியுள்ளதாக சர்வதேச நோக்கர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாய்லாந்துத் தரப்பு கம்போடியப் படைகள் அத்து மீறியதாகக் கூறுகின்றது, மறுபுறம் கம்போடியா தாய்லாந்தே முதலில் சுட்டதாகக் குற்றம் சாட்டுகிறது.

எல்லை கிராமங்கள் காலி தற்போதைய மோதலால் எல்லையோரக் கிராமங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேறி வருகின்றனர். பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

சத்தமில்லாமல் இருந்த பீரங்கிகள் மீண்டும் முழங்கத் தொடங்கியுள்ளதால், இது ஒரு முழுமையான போராக மாறுமோ என்ற அச்சம் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் (ASEAN) எழுந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இரு தரப்பையும் உடனடியாகச் சண்டையை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை கடந்த காலத் தவறுகளில் இருந்து அமெரிக்கா படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதே இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

வியட்நாம் போர்க்காலத்தில் ஒரு கட்டத்தில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த றொபேர்ட் மக்னமாரா (பிறகு அவர் உலக வங்கியின் தலைவராகவும் பதவி வகித்தார்) ஜேர்மன் தத்துவஞானி ஹெகலின் கூற்று ஒன்றை நினைவு கூர்ந்தார் வரலாற்றில் இருந்து எவரும் படிப்பினைகளைப் பெறுவதில்லை என்பதே வரலாற்றில் இருந்து பெறக் கூடியதாக இருக்கும் படிப்பினையாகும்.

9- 11 தாக்குதல்களுக்கு பிறகு 2001 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானுக்குள் படையெடுத்த அமெரிக்கா இருபது வருடக்களுக்கு பிறகு தலிபானகளுடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்து வெளியேறுவதை தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. சதாம்ஹுசெயன் பேரழிவுதரும் ஆயுதங்களை குவித்து வைத்திருப்பதாகக் கூறிக் கொண்டு 2003 ஆம் ஆண்டில் ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்த பிறகு இடம் பெற்றவை உலகில் இடம்பெற்றிருக்கக் கூடிய படுமோசமான மனிதப் பேரவலங்களில் ஒன்றாக அமைந்தது.

தற்போது பல போர்களை முடிவுக்கு கொண்டு வந்ததாக கூறி நோபல் சமாதானப் பரிசுக்கு ஆசைப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் வெனிசூலாவில் அதே தவறைச் செய்வதற்கு தயாராகும் அபத்தத்தைக் காண்கிறோம்.

தனது முதலாவது பதவிக்காலத்தில் உலகின் எந்த பாகத்திலும் போருக்கு அமெரிக்கப் படைகளை அனுப்பவில்லை என்று பெருமையாகக் கூறிய ட்ரம்ப் தற்போது இரண்டாவது பதவிக் காலத்தில் தனது தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் மூலமாக பல பிராந்தியங்களில் பதற்றநிலை அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கிறார்.


எதிர்பாருங்கள்! காத்திருங்கள்!
காணத் தவறாதீர்கள்!
ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா
தமிழ் இயலும் - இசையும்
21 மார்ச் 2026 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மலையக மக்களை வடக்கு கிழக்கில் குடியேற்றுவது யதார்த்தமா? அரசியலா?

இலங்கை அரசியல் அலைபாயும் இந்நேரத்தில் திடீரென தலைதூக்கும் ஒரு கேள்வி இலங்கைவாழ் மலையக (Upcountry / Estate) தமிழர்களை வடக்கு—கிழக்கில் குடியேற்றுவது சாத்தியமா? என்ற கேள்வியின் பின்னால் கொஞ்சம் அரசியல், கொஞ்சம் உணர்ச்சி, ஆனால் மிக அதிகமாக நிலப்பரப்பு அடையாள உரிமை குறித்த அச்சங்கள் அடங்கியிருக்கின்றன.

பிரித்தானிய காலத்தில் இந்தியாவில் இருந்து தேயிலைத் தோட்டங்களில் வேலைக்காக கொண்டு வரப்பட்ட இந்த சமூகத்தினர் நாட்டின் பொருளாதாரத்தை பல தசாப்தங்களாகச் சுமந்து வரும் பெருமையைப் பெற்றிருந்தாலும் அவர்கள் நில உரிமையில்லாத, வறுமையில் கட்டுண்டு வாழும் புறக்கணிக்கப்பட்ட சமூகமாக இருந்து வருகின்றனர்.

Line-rooms என்ற அவல வாழ்விடங்கள், குறைந்த ஊதியம், கல்வி வேலை வாய்ப்புகளுக்கான குறைந்த அணுகுமுறை, அரசியல் பிரதிநிதித்துவ குறைவு ஆகியவை 200 ஆண்டுகளாக அவர்களை இடமற்ற மக்களாக மாற்றியுள்ளன. இந்நிலையில், வடக்கு கிழக்கில் நிலம் காலியாக உள்ளது. அவர்களை அங்கே குடியேற்றலாம் என்ற சிந்தனை மேல் நியாயமாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அதைவிட சிக்கலானது.

வடக்கு கிழக்கு மக்கள், ஆயிரமாண்டுகளாகத் தொடர்ந்து வாழும் நிலத்தை தமிழர்களின் வரலாற்றுப் பூமி 'Tamil homeland' என்ற உணர்வோடு பார்க்கின்றனர். இந்தப் பிரதேசத்தில் எந்த புதிய குடியேற்றத்தையும் குறித்துப் பேசும் போது முன்பும் குடியேற்ற அரசியல் மூலம் பாதிக்கப்பட்ட நிலம். மக்கள் தொகை மாற்றம், நில பறிமுதல், இராணுவ முகாம்கள், போன்ற நிகழ்வுகளைச் சந்தித்தது. எனவே புதிய குடியேற்றம் குறித்து எழும் எந்த பேச்சும் மக்கள் தொகை மாற்றமா? என்ற அச்சத்தை உடனே உருவாக்கும்.

எனவே, மலையக மக்களை அங்கு குடியேற்றும் யோசனை, அவர்கள் மீது அன்பு காட்டும் முயற்சியாக அல்லாமல், மற்றொரு அரசியல் சமூக பொறியியல் திட்டமா? என்ற சந்தேகம் எழுவது இயல்பு தான். இது சாத்தியமா என்றால் ஆம். நியாயமா என்றால் கேள்விக்குறி. நடைமுறையில் சாத்தியமா? என்றால் மிகுந்த சவால் நிறைந்தது இந்த யோசனைக்கு முன்

1. நில உரிமை பிரச்சனையை ஒரே தீர்வில் சுருக்க முடியாதது. மலையக மக்களின் நலனுக்கான முதன்மைத் தீர்வு: அவர்கள் வாழும் மத்திய மலைநாட்டிலேயே நிலம் வழங்குதல், வீடு வழங்குதல். அவர்களை வேறு இடம் மாற்றுவது என்பது அவர்களின் பிரச்சனையை தீர்ப்பதல்ல. அதை ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கே மாற்றுவது மட்டுமே.

2.இரு சமூகங்களுக்கும் தனித்துவமான அடையாளங்கள் உண்டு. தோட்டத் தொழிலாளர் வரலாறு, இந்திய வம்சாவளி, தனித்த மொழிச் சொற்கள், வேறுபட்ட சமூக அமைப்பு போன்ற விதங்களில் வடக்கு கிழக்கு தமிழர்களிலிருந்து வேறுபட்டவர்கள். இந்த இரு சமூகங்களுக்கும் இடையே இணக்கமும் உள்ளதாக இருந்தாலும், ஒற்றை அடையாளம் என்று பார்க்கப்படுவதில்லை.

3.வடக்கு கிழக்கில் இன்னமும் பொது நிலங்கள் மீட்கப்படாதது, இராணுவப் பகுதிகள் விடுவிக்கப்படாதது, காணாமல் போனோரின் குடும்பங்கள் நிவாரணம் பெறாதது, மீள்குடியேற்றம் முழுமையடையாதது போன்ற பிரச்சனைகள் இருக்கும் போது புதிய குடியேற்றம் தொடங்குவது நூலிழையில் கூந்தல் நெய்த போது சுழல்வெடி எறிவது போன்றது.

4. மக்கள் இடமாற்றம் என்பது ஒரு மனித வாழ்வின் கீறல் அவர்களை அங்கே அனுப்பி விடலாம் என்பதில்லை. மனிதர்களுக்கு வீடு மட்டுமல்ல, சூழல், கலாசாரம், வாழ்க்கை முறை, வேலை வாய்ப்பு, சமூக பிணைப்புகள் அனைத்தும் மாற்றமடையும். இதனால் இது ஒரு அரசியல் வாதமாக எளிமைப்படுத்த முடியாத, ஆழமான மனித உரிமை கேள்வியாக தான் பார்க்கப்படவேண்டும்.

எனவே மலையக மக்களுக்கான உண்மையான தீர்வு எது என்ற கேள்வியின் பதில் வடக்கு கிழக்கில் இல்லை. அது அவர்கள் வாழும் மலைநாட்டிலேயே உள்ளது. அங்கே அவர்களுக்கான நில உரிமை வழங்குதல் நவீன வீடமைப்பு கல்வி வேலை வாய்ப்பு மேம்பாடு தேயிலைத் தொழிலாளர் வருமானம் உயர்த்துதல் மனித கௌரவத்துடன் வாழும் வாய்ப்புகள் இவை கிடைத்தால் அவர்களை எங்கும் பலவந்தமாக மாற்ற வேண்டியதே இல்லை.

வடக்கு கிழக்கில் குடியேற்றும் யோசனை யதார்த்தத்தை விட அரசியலே அதிகம் மொத்தத்தில் பார்க்கும் போது இந்த யோசனை, தீர்வாகும் முன் தீவிரமான விவாதத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் கோணங்களை அதிகம் கொண்டது.

வடக்கு கிழக்கு மக்களின் வரலாறு, மலையக மக்களின் நூற்றாண்டு போராட்டங்கள் இவை இரண்டும் குடியேற்றம் என்ற ஒரு கோர்வையில் இணைக்க முடியாத நுணுக்கமான மனித அனுபவங்கள். எனவே மலையக மக்களை வடக்கு கிழக்கில் குடியேற்றுவது சாத்தியமான திட்டமில்லை, அவர்களுக்கும் நன்மையான தீர்வில்லை அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கிற்கு நல்லதுமில்லை, இதுவொரு அரசியலுக்கு மட்டும் பயனளிக்கும் வாய்ப்பு உள்ளது.

இது உண்மையான தீர்வு அல்ல ஒரு சிக்கலை மறைத்து மற்றொரு சிக்கலை உருவாக்கும் தவறான சுருக்க வழி. மலையக மக்களுக்கு தேவை குடியேற்றம் அல்ல, உரிமை. அவர்கள் வாழும் நிலத்திலேயே மரியாதையும், நியாயமும்.

இவ்வாறு சட்டம் பொருளாதாரம் சமூக அமைப்பு நிர்வாக வடிவமைப்பு ஆகிய அனைத்தும் இணைந்தால் மட்டுமே மலையக வடக்கு கிழக்கு குடியேற்றம் ஒரு தூரநோக்கு



திட்டமாகக் கருதப்படலாம். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமாக வேண்டுமெனில் இது அரசியல் திட்டமாக அல்ல இரு சமூகங்களின் நலனையும் மதிக்கும் மனிதநேய திட்டமாக வேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழர்களின் மனதில் சமூக மாற்றம் ஏற்பட வேண்டும் ஆளும் அரசாங்கத்திடம் மலையக மக்களும் இலங்கையர்கள் அவர்கள் எந்தப் பாகத்திலும் குடியேறலாம் என்ற எண்ணம் உருவாக வேண்டும் இத்தகைய பின்புலத்தில் தான் அவர்களது வடக்கு கிழக்கு நோக்கிய புலப்பெயர்வு சாத்தியமாகும். இல்லையேல் 200 வருடங்களாக இன்று வாழும் எலி வளையையும் விட்டு வடக்கு கிழக்கில் நாடோடிகளாக பொந்து தேடி அலையும் வாழ்வாகவே அமையும். மலைய மக்களுக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மதத் தலைவர்கள் யதார்த்தத்தைப் புரிய வேண்டும்.

– பெருமாள் அடியான்

# மனசாட்சி கொஞ்சமாவது இல்லாத மக்கள் கூட்டம்! எங்களை நேர்மையாகச் செயற்பட விடுங்கள்! ஓர் கிராம உத்தியோகத்தரின் உள்ளக் குமுறல்!



ஊழலற்ற அரசாங்கம் வேண்டும், ஊழலற்ற அதிகாரிகள் வேண்டும் ஆனால் நீங்கள் நன்மை பெற அவர்கள் தவறு செய்தால் அது மக்களின் நலன் என்ற நிலையிலேயே எம் சமூகம் காணப்படுகின்றது என கிராம சேவையாளர் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒரு கிராம உத்தியோகத்தராக கடமையை பொறுப்பேற்ற பின் கொரோனா வெள்ள அனர்த்தம், வறட்சி, பொருளாதார நெருக்கடி என பல்வேறுபட்ட அனர்த்த காலங்களை கடந்து வந்துள்ளேன்.

தற்போது இந்த மாபெரும் இயற்கைப் பேரிடர். ஏனைய அனர்த்தங்களை விட இது எமது பிரதேசத்தில் ஒப்பீட்டளவில் மிகக் குறைவான பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் இம்முறை எமது பிரதேசத்தில் அனர்த்த முன்னாயத்த ஏற்பாடுகள் ஓரளவு நன்றாக மேற்கொள்ளப்பட்டமையாலும் வடிகான்கள் துப்பரவு செய்யப்பட்டமையாலும் வெள்ள நீர் தேங்குவது குறைவாக காணப்பட்டதுடன் அவசர நிலைமைகளின் போது பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உடனடியாக களத்திற்கு சென்று நிலைமைகளை சீர்படுத்தினர். இவை முந்தைய காலங்களை விட மிக சிறப்பான முன்னேற்றமாகும். இருப்பினும் ஒன்று மட்டும் மாறவில்லை 'நட்ட ஈடு கோரல்' அரசாங்கம் பல்வேறுபட்ட நட்ட ஈடுகளை வழங்குவதற்கு அறிவித்துள்ளது. ஆனாலும் உண்மையாக அதன் சுற்றறிக்கையின் வரையறைக்குள் பார்க்கின்ற போது வெகுசிலரே அதற்குத் தகுதியானவர்கள். ஆனால் தினமும் நாங்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக எல்லோரும் தங்களுக்கு நட்ட ஈடுகளை வழங்குமாறு கோருகின்றனர்.

மனசாட்சி எம்மிடம் கொஞ்சமாவது மீதமுள்ளதா? அன்பான உறவுகளை இழந்து இத்தனை வருடங்கள் உழைத்த சொத்துகள் வீடுகள் எல்லாம் இழந்து உண்ண உணவின்றி, குடிநீர் இன்றி, வெறும் கையோடு நிற்கும் எம் சகோதரர்களுக்கு மத்தியில் உங்களுடைய இழப்பு என்ன?

வீதிகள் பாலங்கள் கட்டிடங்கள், மின்சாரம் , தொலைத்தொடர்பு என எல்லா உட்கட்டமைப்பு வசதிகளும் நொருங்கிப் போயுள்ள எம் நாட்டை அரசாங்கம் எவ்வாறு மீட்டுக் கொண்டு வரப் போகிறது?

இத்தனைக்கும் நடுவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடும் வழங்குகிறது, அது அத்தியாவசியமானது, உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு ஊன்று கோலாக அமையும்.

இச்சந்தர்ப்பத்தில் குடிமக்களாகிய நாம் அரசின் நிதியை இஸ்திரப்படுத்த தவறினால் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடியின் பால் எம் அழகிய நாடு செல்வதை தடுக்க முடியாது. எனவே ஒவ்வொருவரும் எங்களுக்கு எதற்கு அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும்? நான் எந்த வகையில் தகுதியானவர் என சிந்தியுங்கள். அரசாங்கம் தருகின்றதென்றால் அது எதுவாயினும் எனக்கும் வேண்டும் என்ற மனோ நிலையை எப்போது எம் சமூகம் மாற்றிக் கொள்ளப் போகிறது.

ஊழலற்ற அரசாங்கம் வேண்டும், ஊழலற்ற அதிகாரிகள் வேண்டும் ஆனால் நீங்கள் நன்மை பெற அவர்கள் தவறு செய்தால் அது மக்களின் நலன் என்ற நிலையிலேயே எம் சமூகம் காணப்படுகின்றது. (17ம் பக்கம் பார்க்க)

# முந்திய இந்தியாவும் பதுங்கிய சீனாவும்



பேரிடர்களுக்குப் பிந்திய சூழலில் புவிசார் அரசியல் போட்டிகள் இடம் பெறுவது எப்போதும் வழமை. சுனாமி பேரழிவுக்குப் பின்னர் இந்தியா, அமெரிக்கா போன்ற பல நாடுகள், போட்டி போட்டுக் கொண்டு இலங்கைக்கு உதவ வந்தன.

2020ஆம் ஆண்டு கொவிட் பரவாலின் போது தடுப்பூசி இராஜதந்திரம் பல நாடுகள் போட்டி போடும் களமாக மாறியது.

சீனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா என பல நாடுகளின் தடுப்பூசி இராஜதந்திரத்தை கையாளுவதில் போட்டி போட்டன. அதற்குப் பின்னர் பொருளாதார நெருக்கடி என்ற பேரழிவை இலங்கை எதிர் கொண்டது.

இதன் போது இலங்கைக்கு உதவ முன்வந்த நாடுகள், மனிதாபிமான உதவிகளை வழங்க முன் வந்தாலும், அந்தப் பேரழிவில் இருந்து கை தூக்கி விடத் தயாராக இருக்கவில்லை.

இலங்கை கடுமையான நெருக்கடிக்குள் சிக்கி இருந்தது. பொருளாதார முடங்கிப் போகின்ற நிலையை அடைந்தது.

அரச நிர்வாகம் கூட செயலிழக்கும் கட்டத்தை எட்டியது. நாட்டை முடக்கி அந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வழி தெரியாமல் விழி பிதுங்கிப் போயிருந்தார் கோட்டாபய ராஜபக்ஷ.

அவரது அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசியல் நெருக்கடிக்குள்ளேயும் சிக்கிக் கொண்டு தவித்தது. அந்தச் சூழலில், இந்தியா 4 மில்லியன் டொலர்களை கொடுத்திருக்கா விட்டால், இலங்கையில் பட்டினிச் சாவுகள் நிகழ்ந்திருக்கும்.

பேரழிவு சந்தர்ப்பங்களில் நாடுகள் ஒன்றுக்கு ஒன்று உதவுவது வழமை. அது ஒரு மனிதாபிமான கடப்பாடாக கூட பேணப்படுகிறது.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரழிவு பின்னர் பல நாடுகள் தங்களின் சொந்த விமானங்களில் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்தன.

மியான்மார் கூட 500 மெற்றிக் தொன் அரிசி, 9.2 மெற்றிக் தொன் மருந்துப் பொருட்களுடன் ஒரு வை-8 விமானத்தை அனுப்பியது. ஒரு இலட்சம் டொலர் இடர் நிவாரண நிதியையும் வழங்கியது. அதன் பொருளாதார நிலையுடன் ஒப்பிடும்போது இது ஒரு மிகப்பெரிய உதவி.

மாலைதீவு 2.4 மில்லியன் டொலர் உதவிகளை வழங்கியிருக்கிறது. சுவிட்சர்லாந்தில் இருந்து ஒரு விமானம் வந்தது. ரஷ்யாவில் இருந்தும் சீனாவில் இருந்தும் தலா ஒவ்வொரு விமானங்கள் உதவிப் பொருட்களுடன் வந்தன .அமெரிக்கா இரண்டு விமானங்களில் பொருட்களை அனுப்பியது.

அதேபோல ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இதுவரை 9 விமானங்களில் உதவி பொருட்களை அனுப்பி வைத்திருக்கிறது. இந்தியாவில் இருந்து இது வரை கிடைத்த உதவிகளின் அளவு இவற்றை விட மிகப் பெரியது.

நவம்பர் 28ஆம் திகதி பேரிடர் நிகழ்ந்த போது இந்திய கடற்படையின் விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ். உதயகிரி என்ற போர்க்கப்பல் ஆகியன கொழும்பு துறை முகத்தில் தரித்திருந்தன.

அவற்றில் இருந்து இரண்டு செடெக் ஹெலிகொப்டர்கள் உதவிப் பணிக்கு அனுப்பப்பட்டன. திருவனந்தபுரத்தில் இருந்து இரண்டு எம். ஐ -17 ஹெலிகொப்டர்கள் உதவி மற்றும் மீட்பு பணிக்காக விரைந்து வந்தன.

இதன் பின்னர் உதவிப் பொருட்களுடன் ஐ.என்.எஸ். சுகன்யா என்ற போர்க்கப்பல் திருகோணமலைக்கு உதவிப் பொருட்களுடன் வந்தது. அதற்குப் பிறகு தமிழக அரசின் 700 மெற்றிக் தொன் நிவாரண பொருட்களை ஏற்றிக் கொண்டு ஐ.என்.எஸ். காரியல் என்ற கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கும், தலா 100 மெற்றிக் தொன் நிவாரணப் பொருட்களுடன், மூன்று தரையிறங்கு கலங்கள் கொழும்பு துறைமுகத்திற்கும் வந்தன.

இந்திய விமானப்படையின் சி-130 விமானங்கள் மற்றும் சி- 17 விமானங்கள் அடுத்தடுத்து நிவாரண பொருட்களை மாத்திரமன்றி, தற்காலிகமாக அமைக்கக் கூடிய இரும்பு பாலங்களையும் எடுத்து வந்தன. இதன் மூலம் சேதமடைந்திருந்த பாலங்களை புனரமைக்கும் பணி மேற்கொள்ளப் பட்டது.

இந்திய மருத்துவ குழு மகியங்கனையிலும் வேறு சில இடங்களிலும் தற்காலிக மருத்துவமனைகளை அமைத்து சிகிச்சைகளை வழங்குகிறது. இந்திய இராணுவத்தினர், விமானப்படையினர், கடற்படையினர் பல்வேறு உதவிப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சாகர் பந்து என்ற பெயரில் இந்தியா எடுத்துள்ள இந்த உதவி மீட்பு நிவாரண நடவடிக்கை, இலங்கையில் இந்தியாவின் மீதான அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறது. அயல் நாட்டுக்கு முன்னுரிமை என்ற கொள்கையை இந்தியா செயல்படுத்தி வருகிறது.

அதற்கமைய இலங்கையில் அனர்த்தம் ஏற்பட்டவுடன் உடனடி உதவியை வழங்கியது.

இன்று வரை அந்த உதவிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இலங்கையில் ஆதிக்கத்தை செலுத்துவதற்கு கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே பனிப்போர் நிலவி வருகிறது.

இரண்டு நாடுகளும் அவ்வப்போது இந்த விடயத்தில் முட்டி மோதிக் கொள்கின்றன. இலங்கையின் மீதான செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்வது இந்த நாடுகளின் முக்கிய தேவையாக இருக்கிறது.

இந்தியப் பெருங்கடலின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவானது இந்தியா, சீனாவுக்கு மாத்திரமல்ல, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கும் கூட முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கிறது. இவ்வாறான நிலையில் இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்ற இந்தியாவும் சீனாவும் இலங்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கு போட்டி போடுவது ஆச்சரியம் இல்லை.

இந்த போட்டி பாதுகாப்பு ஒத்துழைப்பில் இருக்கிறது, அரசியல் உறவுகளில் இருக்கிறது, உதவிகளை வழங்குவதில் இருக்கிறது, முதலீடுகளை மேற்கொள்வதில் இருக்கிறது.

ஒட்டு மொத்தமாக சொல்வதானால் இலங்கையில் எல்லா மட்டங்களிலும் இந்த நாடுகள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் தித்வா சூறாவளிக்கு பின்னர் சீனாவும் இந்தியாவும் போட்டி போட்டுக் கொண்டு உதவுகின்ற நிலை இருக்கவில்லை.

இந்தியா இதுவரை அளித்துள்ள கிட்டத்தட்ட 2000 மெற்றிக் தொன் நிவாரணப் பொருள் உதவிகளுடன் ஒப்பிடுகின்ற போது, கடற்படைக் கப்பல்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்ற வளங்களை இங்கு பணியில் ஈடுபடுத்தி இருப்பதுடன் ஒப்பிடுகையில், சீனா வழங்கியிருக்கும் உதவி மிக மிக சொற்பமானதாகும்.

பேரிடர் ஏற்பட்டவுடன் இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளைப் போல சீனா தனது படைகளையோ, விமானங்கள் அல்லது ஹெலிகொப்டர்களையோ உதவிக்கு அனுப்ப முன் வரவில்லை. ஆனால், இலங்கையில் சீனாவின் நலன்கள் அதிகம் இருக்கின்றன.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கொழும்பு துறைமுக நகரம் சீனாவினால் கட்டி எழுப்பப்படுகின்றது. கொழும்பு துறைமுகத்திலும் சீனாவுக்கு இறங்குதுறை இருக்கிறது.

ஆக பொருளாதார கேந்திர நிலைகளை இலங்கையில் கொண்டிருந்த போதும் சீனா தனது படைகளையோ படைக்கலங்களையோ இலங்கைக்கு அனுப்புவதற்கு முற்படவில்லை.

இது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஆறுதலான ஒரு விடயம்.

இலங்கையில் கால் பதிப்பதற்கு சீனா எல்லா வழிகளிலும் முயற்சிக்கிறது என்ற அனுமானம் இந்த நாடுகளிடம் இருந்து வந்தது. சந்தர்ப்பம் பார்த்து சீனா உள்நுழையப் பார்க்கிறது என்ற கற்பனை ஒன்று இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் இருந்தது. ஆனால் இலங்கைக்குள் படைகளை அனுப்புவதற்கு சீனா அவசரம் காட்டவில்லை.

இலங்கை சர்வதேச அளவில் உதவிகளை கோரியிருந்த போதும் இலங்கைக்கு அத்தியாவசிய பொருட்களை அவசரமாக அனுப்புவதற்கு கூட சீனா தயாராக இருக்கவில்லை.

சீனாவில் உதவிப் பொருட்களை ஏற்றிய விமானம் கிட்டத்தட்ட 10 நாட்களுக்குப் பின்னரே வந்து சேர்ந்தது.

அந்த வகையில் பார்க்கப் போனால் இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதற்கான பூகோள அரசியல் போட்டியில் அக்கறை காட்டும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது என்பது உறுதியாகிவிட்டது.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அது தனது நலன்களை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமின்றி, நெருக்கடியில் சிக்கி இருக்கின்ற போது இலங்கைக்கு ஓடிவந்து உதவுவதிலும் முன்னணியில் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தி விட்டது.

'சாகர் பந்து' மூலம் மாத்திரமன்றி பொருளாதார நெருக்கடியிலும் இந்தியா அதனை உறுதி செய்தது. இப்போது இலங்கைக்கான உதவி வழங்கலில் இந்தியா மேலாதிக்க நிலையை அடைந்துள்ளதன் மூலம் சீனாவ மேலாதிக்கும் பெற முடியாத சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

இது புவிசார் அரசியல் போட்டி களத்தில் முக்கியமான ஒரு நிலை. இந்தியாவுக்கு ஆறுதலான ஒரு சூழல்.

ஆனால், இந்த போட்டிக் களத்தை சீனா ஏன் பயன்படுத்திக் கொள்ள தவறியது என்பது நிச்சயம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயம். சீனா பதுங்குகிறது என்றால் அதையிட்டு இந்தியா கரிசனை கொள்ளாமல் இருக்க முடியாது.

## பெரிய அளவிலான இழப்பீட்டு..

(15ம் பக்கத் தொடர்ச்சி) குற்றச்சாட்டுகளை கூர்மையிழக்கச் செய்கின்றது. அதோடு அரசாங்கம் அறிவித்திருக்கும் இழப்பீட்டுத் தொகையும் மிகப்பெரியது. இதுவரையிலும் இருந்த அரசாங்கங்கள் இது போன்ற அனர்த்தங்களின் போது அறிவித்திராத பெரிய தொகை இழப்பீடு அது.இந்த இழப்பீட்டின் மூலம் அரசாங்கம் தன்னை ஏழைகளின் நண்பனாக மீண்டும் ஒரு தடவை நிரூபிக்க முயற்சிக்கின்றது.

அரசாங்கம் அறிவித்திருக்கும் பெரிய அளவிலான இழப்பீட்டுத் தொகையானது மக்கள் அபிமானத்தை வென்றெடுப்பதற்கு உதவும். இதனாலும் எதிர்க் கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக குற்றச் சாட்டுகளை அடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே புயலுக்கு பின்னரான அரசியல் சூழலைத் தொகுத்துப் பார்க்கும்போது, அது மனிதாபிமானத் தேவைகளை முன்னிறுத்தும் சூழலாக மேலெழுகிறது. இதனால் அனுர அரசாங்கம் எதிர்க் கட்சிகள் எதிர்பார்த்ததைப் போல பலவீனம் அடையவில்லை, மாறாக பலமடைந்திருக்கிறது என்று தான் தோன்றுகிறது

# பெரிய அளவிலான இழப்பீட்டுத் தொகை ஏழைகளின் நண்பனாக அநுராவை நிருபிக்கிறது!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



புயல் அனுர அரசாங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அனைத்துலக அளவிலும் உள்நாட்டிலும் அரசாங்கத்தைப் பலப்படுத்தத் தேவையான ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியிருக்கிறது. இந்த மனிதாபிமான அரசியல் சூழல் அல்லது நிவாரண அரசியல் சூழல் எனப்படுவது அதன் தர்க்கபூர்வ விளைவாக அரசாங்கத்தைப் பலப்படுத்தும்.

அனைத்துலக அளவில் பெரும்பாலான நாடுகள் வரிசை கட்டி நின்று உதவி செய்கின்றன. குறிப்பாக முதலில் உதவியதும் இந்தியா. அதிகம் உதவியதும் இந்தியா தான். தவிர வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களும் உதவுகிறார்கள். சில புலம்பெயர்ந்த தமிழர்களும் அரசாங்கத்துக்கு நிதி சேர்த்துக் கொடுக்கிறார்கள். அல்லது தாம் சேர்த்த



நிதியை தாம் வாழும் நாட்டின் அரசாங்கத்துக்கு ஊடாகக் கொடுக்கிறார்கள்.

உள்நாட்டில் செழிப்பான ஒரு மனிதாபிமானச் சூழல் மேலெழுந்துள்ளது. தொண்டு நிறுவனங்கள்,மத நிறுவனங்கள், சிறிய சமூக அமைப்புக்கள் என்று பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் தனி நபர்களும் தன்னார்வமாக முன்வந்து உதவிகளைச் சேகரித்து, தேவைப்படும் மக்களுக்குத் கொண்டு சென்று கொடுக்கிறார்கள். நிவாரணத்தைச் சேகரிக்கும் பொழுது உள்ளூர் வணிகர்களும் காசு உள்ளவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள்.

சிங்களப் பகுதி ஒன்றில் ஒரு முதிய பெண் தன்னுடைய பங்குக்கு தன்னிடம் இருந்த இரண்டு பனடோல் மாத்திரை அட்டைகளை அன்பளிப்பாகக் கொடுத்தது ஒரு நிகழ்ச்சியான சம்பவமாக சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது.

அதே சமயம் தமிழ்ப் பகுதிகளில் தன்னார்வமாக இளையவர்களும் தொண்டு நிறுவனங்களும் நிவாரணங்களை சேகரித்துக் கொண்டு மலையகத்தை நோக்கிச் செல்கிறார்கள். புயல் ஓய்ந்த அடுத்தடுத்த நாட்களில் ஒரு பகுதியினர் தனித்து விடப்பட்டிருக்கும் முல்லைத்தீவை நோக்கியும் வன்னியின் எனைய பகுதிகளை நோக்கியும் சென்றார்கள். அங்கே தங்களால் முடிந்த உதவிகளைச் செய்த பின் மலையகத்தை நோக்கித் திரும்பினார்கள். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மலையகத்தை நோக்கி உதவிகள் செல்கின்றன. புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலானது தமிழ் சகோதரத்துவத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்கள் தங்களுடைய மதக் கட்டமைப்புகளுக்கு ஊடாகவும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊடாகவும் பொருட்களை சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களை நோக்கிச் செல்கிறார்கள். உதாரணத்துக்கு, கெலிஓயா அபிவிருத்தி நிதியம்'' என்ற அமைப்பு கண்டி மாவட்டத்தில் உடுநுவர பிரதேச செயலர் பிரிவில் பள்ளிவாசலை மையமாக கொண்டு இயங்குகிறது. டித்வா புயல் அழிவுகளின் பின் உருவாக்கப்படட அமைப்பு இது.

தென்னிலங்கையில் பாதிக்கப்படாத பகுதிகளை சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்கி தன்னார்வமாகத் திரண்டு செல்கிறார்கள். அரச கட்டமைப்புகள் உதவிக்கு வரும் அதே வேளை, மக்கள் தாங்களாக முன்வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள். வெள்ளம் கட்டுக்கடங்காது ஓடிய பகுதிகளில் வீதிகள், வீடுகள், பொது இடங்கள் போன்றவற்றில் சேறு கழி போல மூடிக்கிடக்கின்றது. சில இடங்களில் கால் புதையக் கூடிய அளவுக்கு சேறு. அதனை அரச உதவி வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், அயலில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தாங்களாக முன்வந்து அகற்றுகிறார்கள். தெருக்களிலும் வீடுகளிலும் பொது இடங்களிலும் உள்ள சேற்றைக் கழுவி அகற்றுகிறார்கள். முறிந்து விழுந்த மரங்களையும் குப்பைகளையும் சேகரித்து ஓரிடத்தில் குவிக்கிறார்கள்.

இது விடயத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரே சமயத்தில் அரச கட்டமைப்புகள், அரசுசாரா கட்டமைப்புகள், தன்னார்வலர்கள், இவர்களோடு உதவி




க்கு வந்த நாடுகளின் தொண்டர்கள், படையினர் மற்றும் வெளிநாட்டவர்கள் என்று எல்லாத் தரப்பும் இணைந்து அந்தப் பகுதியை துப்புரவாக்கும் காட்சி அற்புதமானது. சில இடங்களில் உல்லாசப் பயணிகளாக வந்த வெள்ளைக்காரர்களும் காணப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களே மக்களுக்கு உதவும் தன்னார்வ தொண்டுச் செயற்பாடுகளில் ஜேவிபியின் அடிமட்ட வலைப்பின்னல் பலமாகச் செயல்படுகின்றது.தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது ஜேவிபி. அது அடிப்படையில் ஓர் இயக்கம். அடிமட்ட கிராமிய வலைப் பின்னலைக் கொண்ட ஓர் இயக்கம். எனவே அவர்களிடம் உள்ள அடிமட்ட வலையமைப்பு புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை அரசாங்கத்துக்குச் சாதகமாகக் கட்டமைத்து வருகிறது.

இவ்வாறாக டித்வா புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் என்பது ஒரு விதத்தில் அனுரவுக்குச் சாதகமானதாகவே காணப்படுகிறது. ஒருபுறம் நாட்டை நோக்கி உதவிகள் குவிக்கின்றன. இன்னொருபுறம்,ஒரு பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் அதிகம் நெகிழ்ச்சியானதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் காணப்படுகிறது.

(நாட்டில் நிலவும் ) மிகவும் பலமான ஒரு சகோதரத்துவத்துக்கு நாங்கள் உயர் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறோம். என்னைப் பொறுத்தவரை இது அசாதாரணமானது. நாடு முழுவதும் மக்களும் மக்கள் அமைப்புகளும் ஒன்றாக திரண்டு ஒருவர் மற்றவருக்கு உதவ முன்வருகிறார்கள். இதுபோன்ற சகோதரத்துவத்தை என்னுடைய நாட்டில் காண முடியுமா என்பதை என்னால் உறுதியாக கூறமுடியாது என்பதனை நான் இங்கே கூற வேண்டும். சிறீலங்கர்கள் காட்டும் இந்த வகையான சகோதரத்துவம் அசாதாரணமானது. இவ்வாறு இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி அண்மையில் தெரிவித்துள்ளார்.

இது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல். ஆனால் இங்கு இயற்கை மட்டும் பேரிடரை ஏற்படுத்தவில்லை .மனிதத் தவறுகளும் இதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்றன. ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கம் பதவியேற்ற புதிதில் இது ஓர் எல்போர்ட் அரசாங்கம் என்று நக்கலடித்திருந்தார். அனர்த்த காலமொன்றை முகாமை செய்ய இந்த அரசாங்கத்தால் முடியவில்லை என்று நிரூபிப்பதற்கு எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன.

நுகேகொட பேரணிக்குப் பின் டித்வா புயலானது எதிர்க் கட்சிகள் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு அதிகரித்த வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது வழமை போல எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எதிர்ப்பதனை ஒரு மரபாகப் பேணுகின்றன என்று அரசுக்கு ஆதரவான அறிவுஜீவிகள் நியாயம் கற்பிக்கின்றார்கள். ஆனால் அது உண்மை அல்ல. எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே முன்னெச்சரிக்கைகள் கிடைத்த போதிலும் அரசாங்கம் வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையானது போல தெரிகிறது.

இந்திய வானிலை ஆய்வு மையம் புயல் தொடர்பாக நொவம்பர் 13ஆம் திகதியே எச்சரித்திருந்தது. நவம்பர் 26வரை அனைத்துத் தகவல்களும் இலங்கையுடன் பரிமாறப்பட்டுள்ளன என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளம் கூறுகிறது. அது போலவே தமிழக வானிலை முன்னறிவிப்பாளர்களில் ஒருவராகிய செல்வக்குமார், தன்னுடைய யூ டியூ ப் தளத்தில் இது தொடர்பாக இலங்கையை 24ஆம் திகதி எச்சரித்திருந்தார். குறிப்பாக முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத வெள்ளப்பெருக்கும் மண்சரிவும் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

அதை விடக் குறிப்பாக இந்தப் பேரிடரின் காரணமாக இலங்கை அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டி வரலாம் என்றும் செல்வக்குமார் மிகத்துல்லியமாக எதிர்வு கூறியிருந்தார். அது மட்டுமல்ல தன்னுடைய முன்னெச்சரிக்கையை அரசாங்கத்திடம் கொண்டு சென்று சேர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். அவருடைய முன்னெச்சரிக்கை அடங்கிய காணொளி 24 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இலங்கை வானிலை என்ற தலைப்பில் அது வெளியிடப்பட்டது

அதேபோல யாழ்ப்பாணத்தில் வசிக்கும் யாழ் பல்கலைக்கழக,புவியியல் துறையின் தலைவராகிய பேராசிரியர் பிரதீபராஜா ஒரு புயலைக் குறித்து ஏற்கனவே எச்சரித்திருந்தார். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்பு அதாவது செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அவர் அந்த எச்சரிக்கையை விட்டிருந்தார். அவர் வழமையாக தன்னுடைய முகநூல் தளத்தில் வானிலை அறிவிப்புகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்.

அவர் ஒரு புவியியல் துறை பேராசிரியர். இயற்கை அனர்த்தங்களைக் குறித்து எச்சரிப்பது அவருடைய உத்தியோகபூர்வ கடமை அல்ல. அதைச் செய்ய வேண்டியது வளி மண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்றன தான். ஆனால் பிரதீபராஜா அதைத் தன்னார்வமாகச் செய்கிறார். இம்முறை பருவ மழையை முன்னிட்டு அவர் முகநூலில் பதிந்த நீண்ட முன்னெச்சரிக்கைகள் அடங்கிய பதிவு ஒன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதன்பின் மடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவரை தன்னுடைய அலுவலகத்துக்கு அழைத்து துறைசார் திணைக்களங்களின் பொறுப்பாளர்களையும் அழைத்து ஒரு கலந்தாலோசனை செய்தார்.

எனவே ஒரு பேரிடரைக் குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று அரசாங்கம் கூறமுடியாது. இந்த முன்னெச்சரிக்கைகளை அரசாங்கம் உரிய பாரதூரத் தன்மையோடு உள்வாங்கியிருக்கவில்லை என்பதைத் தான் அது காட்டுகிறது. மேலும் ரவுப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கூறியது போல திணைக்களங்களுக்கு இடையில் போதிய ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் அரசாங்கம் அனர்த்தமொன்றை வினைத்திறனுடன் முகாமை செய்யவில்லை என்று பொருள் கொள்ளத்தக்கது.

எதிர்க்கட்சிகள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. எனினும், பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமான உதவிகளுக்கான சூழலானது, எதிர்க்கட்சிகளின் (14ம் பக்கம் பார்க்க)

# காணத் தயாராகுங்கள்!

Association of Past Business Owners of Sri Lanka -CANADA

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா

PRESENTS

13வது ஆண்டில்

# வர்த்தக தீபம் 2025

13TH ANNUAL

## Winter Get-Together

AWARDS | DINNER | ENTERTAINMENT

தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்

Mega Tuners

K2B The "style" house K2B DANCE STUDIOS

மெகா ரியூநெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னணி நடன ஆசிரியர்கள், K2B டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....

**DEC 27 2025** | SATURDAY 6:00 PM

SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PLACE,
SCARBOROUGH, ON. M1X 1E3

- வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
- காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
- கண்ணுக்கினிய நடனங்கள்
- நாவிற்கினிய அறுசுவை உணவுகள்

கண்டு களித்து உண்டு மகிழ்வதோடு தாயகத்தில் வாழ்வாதாரமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அன்பளிப்பு **$65**

| Soma Satchithanandan | Sothy Sella | Kathiravel Karunananthan |
|---|---|---|
| President | Secretary | Treasurer |
| 647.202.3234 | 647.409.8966 | 416.450.4955 |

வல்லவர் தொழில் வர்த்தகத்துறை

# உள்ளூராட்சி மன்றங்களும் அவற்றின் எதிர்காலமும்

இலங்கையில் ஜனநாயக வழியில் அமைக்கப்படும் கீழ்மட்ட விருத்தி நிர்வாகக் கட்டமைப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றம், மாகாணசபைகள் ஆகியவற்றுக்கு அடுத்த படிநிலையில் உள்ளூராட்சி மன்றங்கள் இருந்தாலும் மாகாணசபைகளுக்கில்லாத சில வகையான அதிகாரங்களை இச்சபைகள் கொண்டுள்ளன.

பல்வேறு காரணங்களினால் ஏழு ஆண்டுகள் நடைபெறாதிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற பின் இவ்வாண்டின் மே மாதம் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து அம்மன்றங்களை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகள் பொறுப்பேற்றுக் கொண்டன. பெரும்பாலான சபைகளில் தலைவர் தெரிவில் தொடங்கிய இழுபறிகள் இன்றுவரை தொடர்கதையாக இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. சபைகளில் உறுப்பினர்களின் நடத்தைகள் தொடர்பாக எதிர்மறையான செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருந்தாலும் தற்போது அச்சபைகளின் முதலாவது வரவு செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பில் அச்சபைகளில் நிலவும் முரண்பாடுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இந்நிலைமைகள் சபைகளின் தற்போதைய செயற்றிறன் தொடர்பாக மட்டுமன்றி அவற்றின் எதிர்காலம் தொடர்பாகவும் பல ஐயங்களைத் தோற்றுவிக்கின்றன.

இந்த ஆண்டின் முற்பகுதியில் மன்றங்களை வழி நடத்தும் பொறுப்பை சபைகள் எடுத்துக் கொண்டாலும் இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏலவே செயலாளர் தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்து விட்டிருந்தன. அதனால் சபை உறுப்பினர்களின் முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான அவர்களின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தற்போது சபைகளில் வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படுவதைக் காணமுடிகிறது.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டங்கள் பல வாக்கெடுப்பில் தோல்வி கண்டுள்ளன. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் அதிலும் குறிப்பாக ஆளும் தேசிய மக்கள் கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட சபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைமையிலான ஊர்காவற்றுறை பிரதேச சபை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைகளின் வரவு செலவுத் திட்டங்கள் வாக்கெடுப்பில் தோல்வி கண்டுள்ளன. இவற்றுள் ஊர்காவற்றுறை பிரேதேச சபையின் திட்டம் இரண்டாவது வாக்கெடுப்பிலும் தோல்வி கண்டுள்ளது.

அதேவேளை யாழ் மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டங்கள் வெற்றி பெற்றுள்ளன. ஆனால் யாழ் மாநகரசபையின் திட்டம் இரு வாக்குகளால் மட்டுமட்டாக வெற்றி பெற்றுள்ளது. மாநகரசபையின் தலைவர் தெரிவில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸூடன் இணைந்து நின்ற ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நால்வர் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமையாலும் சைக்கிள் சின்னத்தில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீகாந்தாவின் தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததாலும் தோல்வி தவிர்க்கப்பட்டது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினர்களும் காங்கிரஸின் முடிவை எடுத்திருந்தால் மாநகரசபையின் வரவு செலவுத் திட்டமும் தோல்வி கண்டிருக்கும் என்பதே உண்மை.

இதேபோல பல சபைகளில் வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டங்களும் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. எவ்வாறாயினும் இரு ஆண்டுகளுக்கு அதாவது எதிர்வரும் 2027 மே மாதம் வரையில் சபைகளின் ஆளுந் தரப்புகளுக்கு ஆயுள் கெட்டியாக இருக்கும். ஆனால் நித்திய கண்டமாக அவற்றின் உயிர் ஊசலாடிய வண்ணமே இருக்கும்.

சபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் மட்டுமன்றி அவற்றின் வழமையான கூட்டங்களும் ஆரோக்கியமற்றவையாக ஏன் இருக்கின்றன? அவற்றுக்கான காரணங்கள் யாவை?

1. சபையின் மக்களுக்கான பணிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை விட கூடிய முக்கியத்துவத்தை தமது கட்சிசார் அரசியலுக்கு கட்சிகள் அளிக்க முனைதல். இதில் ஆளும் தரப்பு, ஆளாத தரப்பு எவையும் விலக்கானவை அல்ல.




2. களநிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஏனைய தரப்புகளையும் அணைத்துச் செல்ல ஆளுந்தரப்பு முனையாமை.

3. உறுப்பினர்களின் முதிரச்சியின்மையும் கட்சித் தலைமைகளால் சரியாக வழிகாட்டப்படாமையும் அல்லது தவறாக வழிகாட்டப்படுதலும்.

4. இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்த உள்ளூராட்சித் தேர்தல்முறை.


உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தற்போதைய தேர்தல் முறை 2015 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட தேர்தல் திருத்தச் சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். இச்சட்டங்களின் மூலமாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் விகிதாசார கலப்புத் தெரிவு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கமைய 60வீதம் வட்டார உறுப்பினர்களும் 40வீதம் விகிதாரமுறையிலான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். உதாரணமாக ஒரு சபையில் 6 பேர் வட்டார உறுப்பினர்கள் இருந்தால் 4 பேர் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இம்முறைமையின் கீழ் ஒரு கட்சி 6 உறுப்பினர்களைப் பெற்றால் மட்டுமே உறுதியான வகையில் மன்றத்தின் ஆயுட்காலமான நான்கு ஆண்டுகளும் ஆளுகையைச் செய்ய முடியும்.

ஆனால் இத்தெரிவு முறையின் கீழ் அவ்வாறாக ஒரு கட்சிப் பெரும்பான்மையைப் பெறுவது கடினமானது. இதற்கு சிறந்த உதாரணம் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகள். இம்மாவட்டத்திலுள்ள அனைத்துச் சபைகளிலும் அதிகாரத்திலுள்ள கட்சி உறுப்பினர்களை விட ஏனையவர்களின் எண்ணிக்கை அதிகமானது. விளைவு, தலைவர் தெரிவில் போட்டி, ஒரு கட்சி மற்றைய கட்சியின் காலைப் பிடித்தல் அல்லது காலை வாருதல், தலைவர் தெரிவில் வெற்றி பெறாததரப்பு ஆளுந் தரப்புக்குத் தொடர்ந்து குடைச்சல் கொடுத்து வருதல், தற்போது வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்தல் என சபைகளில் ஜனரஞ்சகக் காட்சிகள் தொடர்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட தேர்தல் முறை இறுதியில் அதனைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளதைக் காணமுடிகிறது. இது அம்முறையின் தோல்வியா? அல்லது அதனைப் புரிந்து கொள்ளாத கட்சிகளினதும் மக்களதும் தோல்வியா? பெரும்பாலான சபைகளின் உறுப்பினர் பங்கீடு இவ்வாறு இருக்கும் நிலையில் அதற்கேற்றவாறு சபையின் ஆளுகை உத்திகளை தலைவர் கையாண்டால் தான் தடையின்றி நிர்வாகத்தை நடத்த முடியும். ஆனால் அவ்வாறு செய்வதற்கான ஆளுமைப் பண்புகள் பலரிடம் இல்லாதிருப்பது மட்டுமன்றி பல விடயங்களில் கட்சிகளின் எதிர்மறையான அழுத்தங்களும் அவர்கள் மீது இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒற்றுமையாகவும் சிறப்பாகவும் ஒரு சபையின் நிர்வாகம் நடந்தால் அதிகாரத்திலுள்ள கட்சிக்கு ஆதரவு கூடி விடும் என்று கருதுபவர்கள் ஒரு புறம், எரிகிற வீட்டில் பிடுங்கிறது இலாபம் எனத் தங்கியிருக்கும் சபையொன்றில் தத்ததமது நோக்கங்களை நிறைவேற்ற முனைபவர்கள் இன்னொரு புறம், மறுபுறத்தில் சபைகளின் மட்டுப்பாடான வளங்கள், வட்டாரங்களின் அதிகரித்த தேவைகளின் அழுத்தங்கள் போன்ற இச்சிக்கல் நிறைந்த களத்தைச் சரியான முறையில் கையாளமுடியாத தலைமைகள் என பல உள்ளூராட்சி மன்றங்கள் சந்தியில் நிற்கின்றன.

இவ்வாறான சிக்கல் நிறைந்த களத்தை உறுப்பினர்களின் ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, கூட்டுமுயற்சி சரியான தலைமைத்தவம் போன்றவற்றின் மூலமே வெற்றி கொள்ள முடியும். இதற்கு உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தின் நோக்கம், சட்டங்கள், அதிகாரங்கள், பற்றிய தெளிவும் இவ்விடயங்களை கையாள்வதிலான அனுபவ முதிர்ச்சியும் அவசியமாகும். இவை பற்றிய போதிய தெளிவு பெரும்பான்மையான உறுப்பினர்களிடம் காணப்படாமையே சபைகளின் இன்றைய பிரச்சினைகளுக்கான பிரதான காரணம். இதனை உணர்ந்து ஒருசில சபைகள் இயங்கினாலும் பெரும்பாலான சபைகளில் ஆளுந்தரப்புடன் பிரச்சினைகள், கட்சிகளுக்கிடையில் பிரச்சினை, கட்சிக்குள் பிரச்சினை, பணியாளர்களுடன் பிரச்சினை,பயனாளிகளுடன் பிரச்சினை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- க. அருந்தவபாலன் -



எனப் பிரச்சினைகளின் வடிவமாக அச்சபைகள் மாறியுள்ளன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை எப்படிப் பெரிது படுத்தலாம் என்பதில் சில அரசியல் கட்சி உறுப்பினர்கள் அக்கறை காட்டுகின்றனர். அவர்களுக்குத் துணையாகக் குரல் கொடுக்க சில எடுபிடிகளும் அதற்காகவே காத்துக் கிடக்கும் சில ஊடகங்களும் குறிப்பாகச் சமூக ஊடகங்களும் இருப்பதைக் காணமுடிகிறது. குரங்கும் அப்பமும் கதையின் முடிவுக்காக தேசிய மக்கள் சக்தி முனைவதையும் மறுக்க முடியாது.

சபைகளின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் தலைவருக்குச் சட்டத்தினூடாக வழங்கப்பட்ட தற்றுணிவு அதிகாரத்துக்கமைய இரண்டு வருடங்கள் தற்போதைய சண்டை சச்சரவுகளுடன் சபையை இழுத்துச் செல்லமுடியும். அதன் பின் இச்சபைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையும்? நிச்சயமாக ஆரோக்கியமாக அமையப் போவதில்லை. பெரும்பாலான சபைகளில், தற்போது வரவு செலவுத் திட்டம் வெற்றி பெறும் சில சபைகளுட்பட தற்போதைய ஆளுந் தரப்பு மற்றும் தலைமை மாறுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும். மீண்டும் காலைவாருதல், காலைப்பிடித்தல் தொடரும். கட்சிகளின் பிரிவும் புதிய கூட்டும் அரங்கேறும். நடத்துநர் சாரதியாகவும் சாரதி நடத்துநராகவும் மாறுவர். ஆனால் வாகனம் முன்னைய பிரச்சினைகளுடன் தான் பயணமாகும். பயணிகள் தான் பாவம். இத்தேர்தல் முறை மாறாத வரை அல்லது நாம் மாறாதவரை இப்பயணம் இப்படியே தான் இருக்கப்போகிறது.

நன்றி:- யாழ்.ஈழநாடு

## மனசாட்சி கொஞ்சமாவது இல்லாத மக்கள் கூட்டம்

(13ம் பக்கத் தொடர்ச்சி) எனக்கு இழப்பீடு தருவதால் என்ன குறைந்து விடப் போகிறது என நினைக்காதீர்கள். சிறுதுளி பெருவெள் ளம் என்பதை மறக்காதீர்கள். எனவே 'வேண்டாம்.... இந்த இழப்பீடு' நிவார ணப் பொருட்கள் சேகரித்து அனுப்பி னால் மாத்திரம் எம் நாட்டை மீட்டுக் கொண்டு வர முடியாது. அரசின் இழப்பீடுகளுக்கு உங்களை பொருத்த மற்றவர்களாக தார்மீகமாக இணைத்து கொள்ளுங்கள் உண்மையில் பாதிக்கப் பட்டவர்களை சென்றடைந்து அவர் களும் வாழட்டும். அரச உத்தியோக த்தர்களாகிய எங்களை நேர்மையாக செயற்பட விடுங்கள்.

# பெருந்தலைவர் இராஜதுரையை கொண்டாடுவோம்!

கட்டுரையாளர்:-
– அழகு குணசீலன் –



செல்லையா இராசதுரை என்ற சொல்லின் செல்வர் இராஜதுரையின் மரணச் செய்தியால், மட்டக்களப்பு மக்கள் கனத்த இதயங்களை சுமக்கிறார்கள். காரணம் இராசதுரை மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது மாநகர பிதா, மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியின் முதலாவது உறுப்பினராக 33 ஆண்டுகள் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தை அலங்கரித்தவர். ஒரு ஜனநாயக அரசியல்வாதி என்பதற்கும் அப்பால் அவர் ஒரு சகாப்தம். பெருந்தலைவர்.

### மானிடவியல் தத்துவார்த்தம்

பெருந்தலைவர் இராதுரை ஒரு குறிப்பிட்ட துறைக்குள் தன்னை வரையறுத்துக் கொண்ட ஒரு தத்துவார்த்தவாதியல்ல. அரசியல், சமூகம், கலை, இலக்கியம், பண்பாடு, மதம் – ஆன்மீகம், பகுத்தறிவு, சீர்திருத்தம், ஊடகம், கருத்துச் சுதந்திரம், மனித உரிமைகள், ஜனநாயகம், அரசியல் அறம், ….போன்றவற்றை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு செயற்பட்ட தசாவதானி, தத்துவஞானி. இதனால் பெருந்தலைவர் இராசதுரையை ஒரு 'கூட்டுத்தத்துவஞானி'( COLLECTIVE/ COLLABORATIVE PHILOSOPHER) என்று கூறினால் அது மிகையல்ல. அவர் தனிமனித தத்துவார்த்த கருத்தியலை அன்றி சமூக தத்துவார்த்த கருத்தியலை கொண்டிருந்தார். இதனால் அவரின் பன்மைத்துவ, பல்துறை ஈடுபாடு வியாபித்திருந்து.

மானிடவியலாளர்கள் சமூக, பொருளாதார, அரசியல் மாக்சிய கருத்துக்களுடன், பகுத்தறிவுவாதிகளுடன் முரண்படுவதில்லை. மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளுக்கு குறுக்கே நிற்பதில்லை. அவற்றை அங்கீகரித்து அந்த நம்பிக்கைக்குப் பின்னால் உள்ள கருத்தியலை அறிய ஆய்வு செய்வர். இது தான் கிழக்கின் கண்ணகி வழிபாட்டின் ஊடாக இராசதுரையை சிலப்பதிகார உரையாளனாக மாற்றியது. சைவ சமயத்தின் பின்னால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் இரகசியங்களை மானிடவியல் நோக்கில் அணுக வழி வகுத்தது.

### 1977 பொதுத்தேர்தல்

1977 பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பில் அ.அமிர்தலிங்கத்தின் நடு நிலையற்ற நிலைப்பாட்டிற்கு சிறந்த உதாரணம் வடக்கில் இருந்து வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் காசி.ஆனந்தனுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தது. பெயரளவில் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறி இது நடந்தது. கோவை மகேசன், ஈழவேந்தன், ரகுபதி பாலசிறிதரன், அந்தனிசில் போன்றவர்கள் இதில் முக்கியமானவர்கள்.

இவர்கள் காசி.ஆனந்தனுக்கு ஆதரவான பிரச்சாரங்களில் 1970 தேர்தல் முடிவை உதாரணமாக மேற்கோள் காட்டி 1970 தேர்தலில் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர்கள் தொகுதியில் இரண்டு தமிழர்கள் வெற்றி பெற முடியுமானால், தற்போது இந்தத் தேர்தலில் ஏன் இரண்டு தமிழர்கள் காசி ஆனந்தனும், செ.இராசதுரையும் வெற்றி பெறமுடியாது? என்று கேள்வி எழுப்பினார்.

முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அபகரிக்கின்ற இந்த தவறான கருத்தை இராசதுரையும், எஸ்.பொன்னுத்துரையும் (எஸ்.பொ) மிகவும் கடுமையாக கண்டித்தனர். இவ்வாறு சகோதர சிறுபான்மைத் தேசிய இனமான மட்டக்களப்பு தொகுதி முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாக்கும் அரசியல் நேர்மையாளனாக தன்னை அடையாளப்படுத்தியவர் பெருந்தலைவர் இராசதுரை. தேர்தல் வெற்றிக்காக இது விடயத்தில் அவர் மௌனம் சாதிக்கவில்லை.

பெருந்தலைவரிடம் மார்க்ஸ்ஸை, லெனினை, பெரியாரை, காந்தியை, அண்ணாவை, தந்தை செல்வாவை –திராவிடத்தை பகுத்தறிவை, தமிழ்த் தேசியத்தை, இலங்கை தேசியத்தை, சீர்திருத்தத்தை இவை போன்ற இன்னும் பலவற்றை காண்கிறோம். பிற்காலத்தில் ஆன்மீகத்தை பெருந்தலைவரின் நல்ல நண்பரான கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் நூலின் கருத்துக்களை உள்வாங்கிய ஒரு தத்துவார்த்த வாழ்க்கையை அவரிடம் காணமுடிந்தது.

வி.நவரெட்டணம் தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர். கொள்கை முரண்பாடுகள் காரணமாக தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி 1960 இல் தமிழர் சுயாட்சிக்கழகத்தை நிறுவியவர். அவர் பெருந்தலைவர் பற்றி கூறுவதை படியுங்கள்…..

வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாண தமிழர்களிடையே ஒற்றுமையை உருவாக்குவதில் பாரம்பரிய மட்டக்களப்பு –யாழ்ப்பாண தப்பெண்ணத்தை முறியடிப்பதில் அவரது பங்களிப்பு குறைவானதல்ல என்கிறார் வி.நவரெட்ணம்.

தப்பெண்ணம் என்ற வடக்கு அரசியல்வாதிகளின் கருத்தை இல்லை…. இல்லை…. அதுதான் உண்மை என்று பிற்காலத்தில் பெருந்தலைவர் இராசதுரை அனுபவத்தில் அமிர்தலிங்கத்தின் சதியின் ஊடாக அறிந்து கொண்டார். வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையே அவர் கட்டிய சமூக, பொருளாதார, அரசியல் உறவுப் பாலத்தை தகர்த்தவர் அ.அமிர்தலிங்கம். பெருந்தலைவர் கட்சியை விட்டு வெளியேறியது (?) கொள்கை முரண்பாடுகள் காரணமாக அல்ல என்பதை தமிழ் கூறும் நல்உலகம் அறியும்.

அ.அமிர்தலிங்கத்தின் விரோதம், நயவஞ்சகம், குத்து வெட்டு, கழுத்தறுப்பு இராசதுரைக்கு பெரும் அழுத்தமாக இருந்தது. கட்சியை கூட்டி ஜனநாயக வழியில் இராசதுரையை விலக்க முடியாத நிலையில் அவர் தானாகவே ஓடட்டும் என்ற அளவுக்கு அந்த உளவியல் சித்திரவதை இருந்தது. இத்தனைக்கும் மத்தியில் 1977 முதல் 1979 வரை இராசதுரை பொறுமை காத்தார் இந்த உளவியல் சித்திரவதையை சுமந்தார்.

தனது விலகலை (?) தனக்கு நடந்த அனைத்து அநியாயங்களையும் பட்டியல் இட்டு ஒரு பெரும் நூலையே அவரால் எழுதியிருக்க முடியும். ஆனால் விலகினேனா? விலக்கப்பட்டேனா? என்று ஒரு சிறு கைநூலை மட்டுமே மக்களுக்கு விளக்குவதற்காக அவர் வெளியிட்டார். இது அவர் கொள்கை முரண்பாட்டில் அல்ல தனக்கு எதிரான அநீதிகளுக்காகவே கட்சி மாறினார் என்பதை இன்னும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது. ஃஇதனால்தான் ராசதுரை மட்டக்களப்பு மக்களுக்கு பெருந்தலைவர்.

### தந்தையின் விழாவுக்கு வந்த தனயனுக்கு கறுப்புக்கொடி

வடக்கிற்கும் கிழக்கிற்கும் பாலமாக இருந்தும், தந்தை செல்வாவுடன் நீண்ட காலம் பயணித்தும் தமிழரசுக்கட்சியை பாதாளத்தில் வீழ்ந்து விடாமல் காப்பாற்றிய பெருந்தலைவரை, தந்தை செல்வாவின் 35வது ஆண்டு நினைவில் கலந்து கொள்ள அழைப்பின் பேரில் வந்த போது சிவாஜிலிங்கம் கறுப்புக்கொடி காட்டினார். அது மட்டுமா பெருந்தலைவரை ஒரு சமூகப்பெயரை குறிப்பிட்டு அவமானப்படுத்தினார். சிவாஜிலிங்கத்தின் பிரேசவாதத்தையும், யாழ். மேலாதிக்க திமிரையும், சாதிவெறியையும் இது காட்டுகிறது. கடந்த 98 ஆண்டுகளில் சிவாஜிலிங்கத்தை போன்று எத்தனை பூச்சாண்டிகளை இந்த அஞ்சா நெஞ்சன் சந்தித்திருப்பார்.

### கட்சிக்கொடியை முறித்தவருடன் கடைசி வரை உறவு

1970 பொதுத்தேர்தல் காலத்தில் மகிழடித்தீவு சந்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களான இளைஞர்கள் கூட்டமாக திரண்டிருந்தனர். அப்போது மண்முனை துறையில் தமிழரசுக்கட்சியின் மூவர்ண கொடி கட்டப்பட்ட கார் ஒன்று கொக்கட்டிச்சோலை பக்கம் பயணிக்க படகுப் பாதைக்கு காத்து நிற்கிறது என்ற செய்தி காதில் விழுந்தது. அந்தக் கார் பட்டிருப்பு தொகுதி வேட்பாளர் எஸ்.எம்.இராசமாணிக்கத்தின் கார் என்றே இளைஞர்கள் நம்பினர்.

கார் மகிழடித்தீவு சந்திக்கு வந்த போது வழியை மறித்து நிறுத்தினர். உள்ளே இருந்தது இராசமாணிக்கம் அல்ல இராசதுரை. அப்போது இராசதுரையோடு முனைக்காடு பாலிப்போடி இன்பராசா பேசினார். நாங்கள் மண்முனை மேற்கிற்கு பிரச்சாரத்திற்கு போகின்றோம் என்றார் இராசதுரை.

அந்தச் சந்தர்ப்பத்தில் இன்பராசாவின் ஒரு கை காரில் கட்டப்பட்டிருந்த அந்த கொடிக் கம்பத்தில் இருந்தது. கவிக்குயில் சிவஞானம் இன்பராசாவின் கையில் அடிக்க கொடி முறிந்து விட்டது. இன்பராசா தமிழரசுகட்சி கொடியை முறித்து விட்டார் என்று ஊரெல்லாம் கதை. உண்மையில் என்ன நடந்தது என்பது இராசதுரைக்கு தெரியும். அன்றிலிருந்து இன்பராசாவுக்கும் பெருந்தலைவருக்குமான உறவு தொடர்ந்தது. எந்த அரசியல்வாதியிடம் இந்த புரிந்துணர்வை உறவை எதிர்பார்க்க முடியும்.

அண்மையில் மட்டக்களப்பிற்கு பெருந்தலைவர் வந்திருந்த போது இன்பராசாவுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து சந்திக்க வேண்டும், சாப்பாடும் வேண்டும் என்று உரிமையோடு கேட்டாராம். அத்துடன் நான் எனது மண் படுவான் கரையை ஒரு முறை பார்க்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். ஒன்று கேட்டால் இரண்டு செய்யும் இன்பராசா கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பிரதம குருவுடன் தொடர்பு கொண்டு பெருந்தலைவர் வருகிறார் விசேட பூசை ஒன்றுக்கு ஒழுங்கு பண்ணுங்கள் என்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

சந்திப்பிற்கு பின்னர் சந்தோஷமாக படுவான்கரைக்கு புறப்பட்டு இருக்கிறார்கள். மண்முனைப் பாலத்தடியில் காரை நிறுத்தச் சொல்லி பாலத்தை பார்த்திருக்கிறார். பெருந்தலைவர் இராசதுரை அமைச்சராக இருந்த போது மண்முனைப்பால நிர்மாணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் ஆயுதப்போராட்டத்தின் தீவிரத்தில் பாலப்பணிகள் முன்னெடுக்கப்படவில்லை.

வரலாற்றில் மண்முனை பாலத்திற்கு இரண்டு சோதனைகள் வந்தன. ஒன்று நிலப்பிரபுத்துவம் மாடுகள் களவு போகும் என்று பாலம் வேண்டாம் என்ற அரசியல். மற்றையது விடுதலைப் போராட்டம் ஆமி வருவான் என்று பாலப் பணிகளை தடுத்து நிறுத்தியது. இறுதியில் பாலம் இல்லாமலே ஆமி எல்லாப் பக்கத்தாலும் வந்து கொக்கட்டிச்சோலை பகுதியே அழிந்தது.

இந்த நினைவுகளுடன் பெருந் தலைவர் தான்தோன்றீஸ்வரரை தரிசித்து விட்டு மணற்பிட்டி காஞ்சிரங்குடா– மண்டபத்தடியூடாக வலையிறவுப் பாலம் கடந்து மட்டக்களப்பு வந்திருக்கிறார். பயணத்தின் போது அப்பகுதியின் கிராமங்களின் பெயர்கள், ஊர்ப் பெரியவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு குசலம் விசாரித்திருக்கிறார் அவர். படுவான் கரையை(22ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த்தேசிய அரசியலில் ஐக்கியம் - ஒற்றுமை - கூட்டணி - கூட்டமைப்பு

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கும் இடையில் சிநேகபூர்வமான சந்திப்பு ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. எதிர்காலத்தில் தமிழ்த்தேசியத் தரப்புகள் எவ்வாறான அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்வது என்ற அடிப்படையிலேயே இந்தச்சந்திப்பு நடந்ததாக. சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழரசுக் கட்சியின் செயலாளர்எம். ஏ. சுமந்திரனும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்பு இந்தத் தரப்புகள் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியை அமைப்பதற்கான புரிந்துணர்வில் இணக்கம் கண்டிருந்தன. இந்த இணக்கம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நடத்தி வரும் மாகாணசபை முறைமையை வலுப்படுத்துவதற்கான மக்கள் அரங்குகளில் தமிழரசுக் கட்சியும் நட்பின் அடிப்படையில் கலந்து கொள்வதற்கான கதவுகளைத் திறந்தது.

ஆக இதை படிப்படியாக உருவாகி வந்த ஒரு வளர்ச்சி நிலை என்றே சொல்லலாம். ஆனால் அடுத்த கட்டத்துக்கு இது வளர்ச்சியடைவதில் அல்லது நகர்வதில் பல இடர்ப்பாடுகளும் சிக்கல்களும் உண்டு. அவை கட்சி நலன் — மக்கள் நலன் — பிரமுகர் அல்லது அரசியல் தலைவர்களின் நலன் என்ற முக்கோண வலைப் பின்னல்களுக்குள் சிக்குண்டுள்ளது. இதைக் குறித்துப் பின்னர் பார்க்கலாம்.

அதற்கு முன் இந்தச் சந்திப்பு மீண்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உயிர்ப்பிக்குமா? என்று சிலரிடம் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தரப்பின் பலத்தையும் அதற்கான ஐக்கியத்தையும் விரும்புவோர் இத்தகைய எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இது உள்ளூர மகிழ்ச்சியை அளிக்கிறது.

அப்படியென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த காலத்தை நியாயமான முறையில் பரிசீலனை செய்ய வேண்டும். ஏறக்குறைய அது ஒரு போஸ்மோட்டம் தான். இதைச் செய்வதற்கு திறந்த மனதுடன் ஒவ்வொரு தரப்பும் தம்மை விமர்சனத்துக்குள்ளாக்க வேண்டும். அதற்குத் துணிய வேண்டும். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதும் ஒரு தரப்பின் மீது மறுதரப்பு பழி சுமத்துவதையும் நிறுத்த வேண்டும். மக்கள் நலனை முன்னிறுத்தினால் இது எளிது. இல்லையென்றால் கடிதினம் கடிது.

ஆனால் அப்படியான ஒரு அவசியம் இன்று தமிழ் அரசியற் தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியும் அது நாடு முழுவதிலும் பெற்ற வெற்றியும் தமிழ்ப் பரப்பில் அதற்கு உருவாகியுள்ள செல்வாக்கு மண்டலமும் வடக்குக் கிழக்கில் தேசிய மக்கள் சக்தி நிலை கொண்டுள்ள விதமும் தமிழ் அரசியற் தரப்புகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. இந்த நெருக்கடி தனியே தமிழ்த் தேசியத்தை அடையாளமாகக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு மட்டுமல்ல இதுவரையிலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி போன்றவற்றுக்கும் உள்ளது. ஏன் மலையகக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகளுக்கும் உண்டு.

தேசிய மக்கள் சக்தி இன அடையாளக் கட்சிகளைச் சவாலுக்குட்படுத்தியுள்ளது. அதன் மீதும் இனரீதியான பார்வை இருந்தாலும் நடைமுறையில் இன அடையாள அரசியலை அது சவாலுக்குட்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

இந்த நிலையின் வெம்மை தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளை எச்சரிக்கை அடைய வைத்துள்ளது. இப்பொழுது தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் இரண்டு வகையான நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது.

1.தேசிய மக்கள் சக்தியை, அதனுடைய அரசியல் நகர்வுகளை எதிர் கொள்ள வேண்டியிருப்பது. தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இருப்பதால் அது இரண்டு மடங்கு பலமானதாக உள்ளது. மட்டுமல்ல, அதை எளிதிற் குற்றம் சாட்டுவதற்கு முடியாத ஒரு நிலையும் உண்டு.



அதாவது, கடந்த கால ஆட்சியாளர்களைப் போல ஆட்சித் தவறுகள், அதிகாரத் தவறுகள், போர்க்குற்றம் போன்ற குற்றச்சாட்டுகளை முன்னிறுத்தி அதை எதிர்க்க முடியாது. மட்டுமல்ல, அதை நேரடி இனவாதச் சக்தியாக இப்பொழுது அடையாளப் படுத்தவும் முடியாது.

கடந்த கால ஜே.வி.பிக்கு அப்படியான ஒரு அடையாளத்தைச் சொல்ல முயற்சிக்கலாம். ஆனால் அதையும் தேசிய மக்கள் சக்தி முறியடித்துள்ளது என்றே சொல்ல வேண்டும். எப்படியென்றால், 2010க்கு முந்திய ஜே.வி.பி வேறு. இன்றைய ஜே.வி.பி வேறு என்பதை அது நிறுவி வருகிறது. முந்திய ஜே.வி.பியானது இந்திய எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்பு, வடக்குக் கிழக்கு இணைப்புக்கான எதிர்ப்பு, மாகாணசபை மீதான தயக்கம் போன்ற விடயங்களுடன் சம்மந்தப்பட்டது.

இன்றைய தேசிய மக்கள் சக்தி, இவற்றைச் சாதகமான முறையில் கையாளும் ஒரு நிலைக்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அல்லது அதற்கு அமைய தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. என்பதால், அதனை இன அடையாளத்துடன் அல்லது இனவாத அடையாளத்துடன் சம்மந்தப்படுத்த முடியாத அளவுக்கு அது தன்னை வேறுபடுத்திக் காட்டுவதற்கு முயற்சிக்கிறது. இதில் அது கணிசமான அளவுக்கு முன்னேறியும் உள்ளது. என்பதால் தான் அது வடக்குக் கிழக்கிலும் மலையகத்திலும் ஏனைய தேசிய அரசியற் கட்சிகள் பெற முடியாத இடத்தை அதனால் பெற முடிந்தது.

குறிப்பாக இளைய தலைமுறை தேசிய மக்கள் சக்தியின் பக்கம் ஈர்ப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியை வழமையான தேசிய அரசியற் சக்திகளோடு (சு.க, ஐ.தே.க, பொதுஜன பெரமுன) ஒப்பிட்டு அரசியல் செய்யவும் முடியாது. அவற்றை எதிர் கொண்டதைப் போல தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்ளவும் முடியாது.

எனவே அதற்கு ஒரு புதிய சிந்தனை முறையும் (New Thinking method) அணுகுமுறையும் (Approach) வேலைத்திட்டமும் (Work plan) வேண்டும். இவற்றை வகுத்துக் கொள்ளாமல் தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்வது கடினம். ஆகவே கடந்த காலத்தில் இவை மேற் கொண்ட அரசியல் முறைமையையும் இவை பின்பற்றிய அரசியற் கருத்துநிலை அல்லது கொள்கையையும் இனியும் அப்படியே தொடர முடியாது. சுருக்கமாகச் சொன்னால், ஜே.வி.பியானது எப்படித் தன்னைப் புதிய சூழலுக்கு ஏற்றமாதிரி வடிவமைப்புச் செய்து கொண்டதோ, அவ்வாறு இவையும் தம்மை வடிவமைக்க வேண்டியுள்ளது.

2.இந்தத் தரப்புகள் இதுவரையில் எட்டிய சாதித்த அரசியல் வெற்றிகள் (அடைவுகள்) என்ன என்ற கேள்வி மக்களிடம் உருவாகியுள்ளது. இன அடிப்படையில் தமது அடையாளத்துக்காகவும் கடந்த கால ஆட்சித் தரப்புகளின் இன ரீதியான நெருக்கடிகளை எதிர் கொள்வதற்காகவும் மக்கள் இந்தத் தரப்புகளை நிபந்தனையின்றி ஆதரித்து வந்தனர். அதை இந்தத் தரப்புகள் தமக்கான வாய்ப்பாகவும் கையாண்டு வந்தன. ஆனால், இப்பொழுது உருவாகியிருக்கும் அரசியற் சூழல் வேறு. என்பதால் இவை புதிய அரசியல் அடையாளங்களை உருவாக்கி, அதை மக்களிடம் காட்ட வேண்டியுள்ளது. அப்படிக் காட்டவில்லை என்றால் மக்கள் இவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள். மக்களுடைய உணர்வுத் தளமும் வாழ்க்கைச் சவால்களும் பிரச்சினைகளும் தேவைகளும் வேறாக விட்டது. அதைப் புரிந்து கொண்டு அரசியல் முன்னெடுப்புகளைச் செய் வேண்டிய தேவை அவசியம் இந்தத் தரப்புகளுக்கு வரலாற்று நிர்ப்பந்தமாகியுள்ளது.

இந்தப் பின்னணியில் தான் நாம், தமிழரசுக் கட்சி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சந்திப்பையும் அதனுடைய அடுத்த கட்ட நகர்வையும் இதைக் குறித்து இவற்றின் ஆதரவாளர்கள் கொள்ளும் கனவையும் (விருப்பத்தையும்) பார்க்க வேண்டும்.

இப்பொழுதும் தமிழ்த்தேசியச் சக்திகளிடம் தடுமாற்றங்களே அதிகமாக உண்டு. இதற்குக் காரணம், மறுபரிசீலனைக்கான சிந்தனையும் உள நிலையும் இவற்றிடம் இன்னும் ஏற்படாதிருப்பதேயாகும். ஏராளமாக விளைந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியற் சக்திகளில் ஒன்றிற்கூட இன்னும் புதிய அடையாளத்தை நோக்கிய பயணச் சுவட்டைக் காண முடியவில்லை. இதனால்தான் பட்டும் படாமலும் முட்டியும் முட்டாமலும் ஒரு மாதிரியாக இவை சந்திப்புகளைச் செய்கின்றன. பேசுகின்றன. இப்பொழுது தமிழ்த்தேசியத் தரப்புகள் மும்முனையில் மூன்று தரப்புகளாக உள்ளன.

1.கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவை. இதில் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஐங்கரநேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், சிவாஜிலிங்கம் ஸ்ரீகாந்தா இரட்டையர்களின் தமிழ்த்தேசியக் கட்சி மற்றும் சரவண பவன், தவராஜா, அருந்தவபாலன் உள்ளிட்ட ஒரு தரப்பு.

2. புளொட், ஈ.பி.ஆர்.எல். எவ், ரெலோ, சமத்துவக் கட்சி ஜனநாயகப் போராளிகள் ஆகியவை இணைந்துள்ள ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி.

3. இலங்கைத் தமிழரசுக் கட்சி. தனிக்கட்சியாக இருந்தாலும் தற்போது தமிழ்ப்பரப்பில் வலுவான சக்தியாக இருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சியே. ஏனைய கட்சிகளுக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தலா ஒன்று என்ற அளவிலேயே உண்டு. ஆனால், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கு வடக்குக் கிழக்கு முழுவதிலும் உள்ளூராட்சி சபைகளில் செல்வாக்குண்டு.

இந்த மூன்று சக்திகளும் இடைவெளிகளுடன் கூடிய தமிழ்த்தேசிய அரசியலைப் பிரகடனம் செய்துள்ளன. அரசியல் தீர்வு, மக்களுடனான அணுமுறை, தமது அரசியலை முன்னெடுக்கும் விதம் அரசியற் கொள்கை போன்றவற்றில் துலக்கமான வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவை ஒன்றும் புதியவையும் இல்லை. கடந்த காலத்தில் தூக்கிச் சுமந்த அதே பழைய சரக்குத் தான். ஆனால், இவற்றை இன்னும் சுமந்து கொண்டேயுள்ளன. பாரம்பரிய அரசியச் சக்திகளையும் பாரம்பரிய அரசியற் சித்தாந்தங்களையும் மீள் பரிசீலனை செய்யுமாறு வரலாறும் சூழலும் வற்புறுத்துகின்றன. நிபந்தனை செய்கின்றன. இருந்த போதும் அதைப் பற்றிய எந்தவிதமான உணர்வுமின்றி, அதே சுமைகளோடு பிடிவாதம் செய்து கொண்டிருப்பதோடு, ஒன்றோடு ஒன்று முரண்பட்டுக் கொண்டும் உள்ளன. சில வேளைகளில் தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொள்வதும் உண்டு. இது மக்களுக்குச் சலிப்பையும் ஏமாற்றத்தையுமே அளிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன், தமிழ் பேசும் சமூகங்களிடம் ஒரு கூட்டுக் கோரிக்கை இருந்தது. தமது அரசியற் சக்தி திரண்டிருக்க வேண்டும். அப்போது தான் பலமானதாக இருக்கும் என்பதாக. அன்றைய ஆட்சியாளர்களை எதிர்கொள்வதற்கு அப்படியான ஒரு திரண்ட சக்தியின் பலம் தேவையானதாகவும் இருந்தது.

இன்றைய நிலையில் அந்தத் திரட்சி ஐக்கியம் ஒற்றுமை கூட்டணி கூட்டமைப்பு என்பதெல்லாம் போதுமானதல்ல. அதையும் கடந்து புதிய அரசியல், புதிய முன்னெடுப்பு, புதிய அணுகுமுறை, புதிய வேலைத் திட்டம் போன்றவையே தேவை.

(22ம்பக்கம் பார்க்க)

# மாறும் கட்சிகளின் கணக்கு! தி.மு.க. கூட்டணிக்கு நெருக்கடியா?

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் நிலையில் தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் இந்த முறை கூடுதல் தொகுதிகளில் போட்டியிட விரும்புகின்றன. கூட்டணிக் கட்சிகள் இப்படிக் கோருவதற்குக் காரணம் என்ன?

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில், அரசியல் களம் பரபரப்பாகியுள்ளது. ஒவ்வொரு கூட்டணியிலும் உள்ள கட்சிகள், கடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டதை விட கூடுதல் இடங்களைத் தத்தம் கூட்டணியில் எதிர்பார்க்கின்றன. சில கட்சிகள் இதை வெளிப்படையாகவும் தெரிவித்து வருகின்றன.

குறிப்பாக, தி.மு.க. கூட்டணியில் உள்ள பல கட்சிகளின் தலைவர்கள் இந்த விருப்பத்தைப் பல முறை நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள தேர்தல் கூட்டணிகளில், கடந்த சட்டமன்றத் தேர்தலை வைத்துப் பார்த்தால், தி.மு.க. கூட்டணியில் தான் பெரும் எண்ணிக்கையிலான கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. கடந்த 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது தி.மு.க. கூட்டணியில் பத்துக்கும் மேற்பட்ட கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன.

இவற்றில் ம.தி.மு.க, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, பி.வி. கதிரவன் தலைமையிலான அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, எஸ்.கே. முருகவேல் ராஜன் தலைமையிலான மக்கள் விடுதலைக் கட்சி, ஆதித் தமிழர் பேரவை ஆகியவை தி.மு.கவின் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிட்டன.

## பெரிய மாற்றம் இல்லை

இவை தவிர காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியயூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் தங்கள் சொந்த சின்னத்தில் போட்டியிட்டன.

கடந்த சட்டமன்றத் தேர்தல் கூட்டணியோடு ஒப்பிட்டால் தற்போதும் தி.மு.க. கூட்டணியில் பெரிய மாற்றங்கள் ஏதும் இல்லை. 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் புதிதாக இந்தக் கூட்டணியில் இணைந்திருப்பது மட்டுமே ஒரு சிறிய மாற்றம்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது மக்கள் நீதி மய்யத்திற்கு இடங்கள் ஏதும் அளிக்கப்படாமல், மாநிலங்களவையில் ஓரிடம் ஒதுக்கப்படும் என்று கூறப்பட்டது. அதன்படி, அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தற்போது மாநிலங்களவை உறுப்பினராக இருக்கிறார். ஆனால், 2026 சட்டமன்றத் தேர்தலின்போது அக்கட்சியும் சில இடங்களை எதிர்பார்க்கும்.

இந்த நிலையில் தான் தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ், இடதுசாரிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவையும் கூடுதல் இடங்களில் போட்டியிட விரும்புகின்றன.

கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு சில இடங்களைக் கூடுதலாகக் கொடுத்தாலும் தி.மு.க. போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறையும். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் 188 இடங்களில் அந்தக் கூட்டணியின் வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இதில் தி.மு.க. மட்டும் 173 இடங்களில் போட்டியிட்டது.

காங்கிரஸ் கட்சி 25 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தலா 6 இடங்களிலும் போட்டியிட்டன. ம.தி.மு.க. ஆறு இடங்களில் தி.மு.கவின் சின்னத்திலேயே போட்டியிட்டது. இந்த நிலையில்தான் தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள், கூடுதல் இடங்களை எதிர்பார்ப்பதாக வெளிப்படையாகவே தெரிவிக்கின்றன.

சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ. சண்முகம், தங்கள் கட்சி கூடுதல் இடங்களில் போட்டியிட விரும்புவதாகத் தெரிவித்தார். இதே போன்ற குரல்கள் காங்கிரஸ், வி.சி.க ஆகிய கட்சிகளிலும் ஒலிக்கின்றன.

## காங்கிரஸ் கூறுவது என்ன?

தி.மு.க. கூட்டணியைப் பொறுத்தவரை, கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கு அடுத்தபடியாக கூடுதல் இடங்களில் போட்டியிட்டது காங்கிரஸ் கட்சி தான்.

கடந்த 2006ஆம் ஆண்டிலிருந்து எல்லா சட்டமன்றத் தேர்தல்களிலும் காங்கிரசும் தி.மு.கவும் இணைந்தே போட்டியிட்டு வருகின்றன. ஆனால், 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு அக்கட்சி தி.மு.க. கூட்டணியில் பெறும் இடங்கள் குறைந்து வருகின்றன.

திமுக கூட்டணியில், 2006ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி 48 இடங்களில் போட்டியிட்டு 34 இடங்களைக் கைப்பற்றியது. 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம் பிடித்திருந்த காங்கிரஸ் கட்சி 63 இடங்களில் போட்டியிட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் அக்கட்சிக்குப் பெரும் ஏமாற்றமளித்தன. தி.மு.க. கூட்டணி தோல்வியைத் தழுவ, காங்கிரஸ் கட்சியால் வெறும் ஐந்து இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

கடந்த 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரசுக்கு 41 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் அக்கட்சி 8 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. 2021ஆம் ஆண்டு தேர்தலின் போது, தி.மு.க. மிகப் பெரிய கூட்டணியை உருவாக்கியது. இந்தக் கூட்டணியில் இடம் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு 25 இடங்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதில் 18 இடங்களில் அக்கட்சி வெற்றி பெற்றது. இந்த நிலையில் தான், கடந்த முறை பெற்ற 25 இடங்களை விட கூடுதல் இடங்களில் போட்டியிட வேண்டுமென அக்கட்சிக்குள் குரல்கள் ஒலிக்கின்றன.

இது குறித்து தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கு. செல்வப்பெருந்தகை பிபிசி தமிழிடம் பேசிய போது, 'இந்தத் தருணத்தில் இது குறித்து ஏதும் சொல்ல முடியாது. கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் இப்போது வரை துவங்கவில்லை. கூட்டணிப் பேச்சுவார்த்தைகளுக்காக தி.மு.க. விரைவில் குழு ஒன்றை அமைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இரு வாரங்களில் அது நடக்கலாம்.



அதற்குப் பிறகுதான் பேச்சுவார்த்தைகள் துவங்கும்' என்று மட்டும் தெரிவித்தார்.

காங்கிரஸ் தி.மு.கவிடம் கூடுதல் தொகுதிகளைக் கேட்குமா என்ற கேள்விக்கு அவர் நேரடியாகப் பதில் அளிக்கவில்லை. 'இப்போதே எவ்வளவு இடங்கள் என்று வெளியில் சொல்வது சரியாக இருக்காது' என்று மட்டும் தெரிவித்தார்.

## விசிக கூறுவது என்ன?

ஆனால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைப் பொறுத்தவரை கூட்டணியில் இரட்டை இலக்க இடங்களை எதிர்பார்ப்பதை வெளிப்படையாகவே கூறுகிறது.

கடந்த 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் 8 இடங்களில் போட்டியிட்டோம். 2011ஆம் ஆண்டு தேர்தலின்போது தி.மு.க. கூட்டணியில் முதலில் 11 இடங்கள் தருவதாகப் பேசப்பட்டது. ஆனால், கடைசி நேரத்தில் அது 10 இடங்களாகக் குறைக்கப்பட்டது. இருந்தாலும் ஏற்றுக்கொண்டோம். தி.மு.க. கூட்டணியில் முதன் முதலில் 8 தொகுதிகளைப் பெற்ற 2001 ஆம் ஆண்டிலிருந்து எடுத்துக் கொண்டால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வெகுவாக வளர்ந்திருக்கிறது' என்கிறார், அக்கட்சியின் பொதுச் செயலாளர் து. ரவிக்குமார். அதே போல, வேறு சில விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் அவர்.

கடந்த 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், வி.சி.க. ஆகிய கட்சிகள் தலா ஆறு இடங்களைப் பெற்றன. ஆனால், வெற்றி விகிதத்தைப் பார்த்தால் இடதுசாரிக் கட்சிகள் தலா இரண்டு இடங்களில் தான் வென்றன. வி.சி.க. நான்கு இடங்களில் வெற்றி பெற்றது.

இதற்குப் பிந்தைய சுமார் ஐந்து ஆண்டுகளிலும் எங்கள் செயல்பாடுகள் தீவிரமாக இருந்துள்ளன. கூட்டணி வைக்கும் போது வி.சி.க. தரப்பில் இருந்து கிடைக்கும் வாக்குகள் (Vote Transfer), கடந்த ஐந்தாண்டு காலச் செயல்பாடுகள் அனைத்தையும் மனதில் வைத்து இந்த முறை இரட்டை இலக்கத்தில் இடங்களை எதிர்பார்க்கிறோம்' என்கிறார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் து. ரவிக்குமார்.

## இடதுசாரி கட்சிகள் கூறுவது?

இடதுசாரிக் கட்சிகளும் கூடுதல் இடங்களைக் கோரும் முடிவில் தான் உள்ளனர். இதுகுறித்து பிபிசி தமிழிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் வீரபாண்டியன், 'கண்டிப்பாக கூடுதல் இடங்களைக் கோருவோம். அது இயல்பானது தானே' என்று மட்டும் தெரிவித்தார்.

ஆனால், அது எத்தனை இடங்கள் என்பது குறித்து அவர் ஏதும் தெரிவிக்கவில்லை. 'இன்னும் அதற்கான காலம் வரவில்லை. தேர்தல் கூட்டணி குறித்துப் பேசுவதற்கு கட்சியில் குழு அமைக்கப்படும். எத்தனை இடங்களைக் கேட்பது, எந்தெந்த இடங்களைக் கேட்பது என்பதையெல்லாம் அந்தக் குழுவே முடிவு செய்யும்' என்று மட்டும் தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, கூடுதல் இடங்களைக் கோரும் நிலையில் இருந்தாலும், இடங்களின் எண்ணிக்கையை வைத்து கூட்டணியை முடிவு செய்யப் போவதில்லை என்கிறது.

இது குறித்து பிபிசி தமிழிடம் பேசிய அக்கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம், 'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, தேர்தலின் போது அளிக்கப்படும் இடங்களை வைத்து தேர்தல் அணுகுமுறையை முடிவு செய்வதில்லை. மதவாத சக்திகளை முறியடிக்க வேணடும். அதில் தி.மு.க. உறுதியாக இருக்கிறது. ஆகவே அந்தக் கூட்டணியில் தொடர்கிறோம்.

எல்லா கட்சிகளுமே கடந்த தேர்தலில் போட்டியிட்டதை விட அடுத்த தேர்தலில் கூடுதல் இடங்களில் தான் போட்டியிட விரும்புவார்கள். அப்படித் தான் நாங்களும். ஆனால் இடங்களை வைத்து கூட்டணியை முடிவு செய்வோம் என்பதில்லை' என்கிறார்.

இப்படி கூட்டணியில் இருக்கும் எல்லா கட்சிகளும் கூடுதல் இடங்களை எதிர்பார்ப்பதென்பது தி.மு.க. கூட்டணிக்கு நெருக்கடியாக மாறாதா?

அது குறித்துப் பேசிய து.ரவிக்குமார், 'கூட்டணியில் உள்ள எல்லா கட்சிகளையும் ஒரே மாதிரி அணுக முடியாது. அவற்றின் பலம், செயல்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அணுகினால் நெருக்கடி இருக்காது' என்றார்.

## கூடுதல் இடங்களைக் கேட்பதன் பின்னணி?

தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் கூடுதல் இடங்களைக் கோருவதை இருவிதமாகப் பார்க்கலாம் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர். மணி. முதலாவதாக, நிஜமாகவே கூடுதல் இடங்களை அவர்கள் பெற விரும்புகிறார்கள். இரண்டாவதாக, கூடுதல் இடங்கள் கிடைக்கா விட்டாலும் கடந்த முறை பெற்ற இடங்களை யாவது அவர்கள் தக்க வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்' என்கிறார் அவர்.

அவரைப் பொறுத்தவரை, கூட்டணிக் கட்சிகளுக்கு கடந்த முறை கொடுத்த இடங்களை விடக் குறைவான இடங்களையே தி.மு.க. அளிக்க விரும்புகிறது. மேலும் சில கட்சிகள் கூட்டணியில் இடம் பெறலாம் என்பதை இதற்குக் காரணமாக அக்கட்சி சொல்லக் கூடும் என்றார் மணி. அதோடு, 'மக்கள் நீதி மய்யம் தவிர, தே.மு.தி.கவும் இந்தக் கூட்டணிக்கு வரலாம். பா.ம.கவின் ஒரு பிரிவையும்

(22ம் பக்கம் பார்க்க)

# புயல் ஓய்ந்த பின் சந்தித்த காட்சிகள்!



நாடு புயலில் சிக்கிச் சின்னாபின்னமாகி அதிலிருந்து முழுமையாக மீண்டெழாத கடந்த வாரம், யாழ்ப்பாணத்தில் தமிழரசு கட்சிக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு (டி.ரி.என்.ஏக்கும்) இடையே ஒரு சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது.

புயலின் அழிவுகளில் இருந்து மக்கள் முழுமையாக மீண்டு எழவில்லை. சிதைந்த வீதிகள் பல இப்பொழுதும் திருத்தப்படவில்லை. உடைந்து தொங்கும் பாலங்கள் பல இப்பொழுதும் முழுமையாகக் கட்டப்படவில்லை. நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் முழுமையாக வீடு திரும்பவில்லை. சேறு படிந்த நகரங்களையும் வீதிகளையும் கட்டிடங்களையும் முழுமையாகத் துப்பரவாக்கி முடியவில்லை. இப்படிப்பட்டதோர் பின்னணியில் மேற்படி கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒரு சந்திப்புத் தான். இப்படி ஒரு சந்திப்புக்கு சுமந்திரன் ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார். அதற்கு சுரேஷ் பிரமச்சந்திரன் பகிரங்கமாகப் பதில் கூறியதோடு சில கேள்விகளையும் எழுப்பியிருந்தார். இப்படிப்பட்டதோர் பின்னணியில் தான் இந்தச் சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது.

சந்திப்பின் பின் சுரேஷ் பிரேமச்சந்திரனும் சுமந்திரனும் தெரிவித்த தகவல்களைத் தொகுத்துப் பார்த்தால் மாகாண சபைத் தேர்தல்களை வைக்க வேண்டும் என்ற கோரிக்கை அங்கே வைக்கப்படுகிறது. எனவே மாகாண சபைத் தேர்தல் ஒன்றை நோக்கி இந்தச் சந்திப்பு இடம் பெற்றிருக்கலாம். மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்று ஈபிஆர் எல்எப் தமிழ்ப் பகுதிகளில் தொடர்ச்சியாக கருத்தரங்குகளை ஒழுங்குப்படுத்தி வருகிறது. அவ்வாறான ஒரு கருத்தரங்கு வவுனியாவில் நடந்த போது அதில் சுமந்திரனும் கலந்து கொண்டார். பேசினார். மாகாண சபைத் தேர்தலை ஆகக்கூடிய விரைவில் வைக்க வேண்டும் என்று இந்தக் கட்சிகள் கேட்கின்றன.

மேற்படி சந்திப்பில் கலந்து கொண்ட டி.ரி.என்.ஏ ஏற்கனவே தமிழ்த் தேசியப் பேரவை என்ற ஒரு கூட்டுக்குள் காணப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்பின் ஓர் எழுத்து மூல ஆவணத்தில் கையெழுத்திட்டு அந்த கூட்டு உருவாக்கப்பட்டது. அப்பொழுது நடந்த ஓர்ஊடகச் சந்திப்பில் கஜேந்திரக்குமார் பின்வருமாறு சொன்னார் இந்தக் கூட்டு உடையுமாக இருந்தால் அதைத் தமிழ் மக்கள் தாங்க மாட்டார்கள் என்று.

அவர் ஏன் அப்படி சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் நாடு தாங்க முடியாத ஒரு புயலில் சிக்கி மீண்டும் எழுந்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் இந்தச் சந்திப்பு நடந்திருக்கிறது. இதனால் தமிழ் மக்கள் தாங்க முடியாத அந்த உடைவு விரைவில் ஏற்படுமா?

ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஏற்கனவே மாகாண சபைத் தேர்தல்களை வலியுறுத்தி கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்திய போது அந்தக் கூட்டில் விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. டி.ரி.என்.ஏ ஓர் இலட்சியக்கூட்டு அல்ல. அந்த கூட்டுக்குள் இருப்பவர்கள் அனைவருமே முன்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்களைச் சேர்ந்த கட்சிகள். முன்பு தமிழரசுக் கட்சியோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயல்பட்ட கட்சிகள். பின்னர் தமிழரசுக் கட்சியின் பெரிய அண்ணன் தனத்தால் அந்தக் கூட்டுக்குள் இருந்து வெளியேறிய அல்லது வெளியேறுமாறு நிர்பந்திக்கப்பட்ட கட்சிகள்.

கடந்த ஆண்டு பொது வேட்பாளரை முன்நிறுத்திய கூட்டுக்குள்ளும் மேற்படி கட்சிகளில் பெரும்பாலானவை காணப்பட்டன. அவர்களுடைய சொந்த வாக்கு வங்கி பலவீனமானது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க அளவு வாக்குகளை அவர்கள் வெல்லமுடியும். ஆனால் மாகாண சபைத் தேர்தலிலோ, ஒரு நாடாளுமன்றத் தேர்தலிலோ பெரிய வெற்றிகளைப் பெறத் தேவையான வாக்கு வங்கி அவர்களுக்கு இல்லை.

இந்த விடயத்தில் தங்களுடைய உயரம் என்னவென்று அந்த கட்சிகளுக்கும் தெரியும். சங்குச் சின்னத்தை தங்களுடையதாக்கியதன் மூலம் தமது வாக்கு வங்கியை மேலும் பலப்படுத்தலாம் என்று அவர்கள் கண்ட கனவு பலிக்கவில்லை. எனவே வெற்றி பெறக்கூடிய கட்சியோடு இணைவதன் மூலம் தான் அவர்களால் எதிர்காலத்தில் கட்சிகளாக நின்றுநிலைக்க முடியும். அந்த அடிப்படையில் பார்த்தால் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய தரப்பு சந்தேகத்துக்கு இடமின்றி இப்போதைக்கு தமிழரசுக் கட்சி தான். எனவே தமிழரசுக் கட்சியோடு ஏதோ ஓர் இணக்கத்துக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் இந்தக் கட்சிகளுக்கு உண்டு.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்ததன்மூலம் அவர்கள் மூன்று உடன் நன்மைகளைப் பெற விரும்பினார்கள். முதலாவது, தங்களைத் துரோகிகள் என்றும் ஒட்டுக் குழுக்கள் என்றும் இந்தியாவின் ஆட்கள் என்றும் பெட்டிகட்டி, முத்திரை குத்திய தீவிர தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தரப்புகளால் ஆதரிக்கப்படுகின்ற ஒரு கட்சியோடு கூட்டுக்குப் போவதன் மூலம் தமிழ்த் தேசியப் பரப்பில் தங்களைப் பற்றியுள்ள முற்கற்பிதங்களை அகற்றலாம் என்ற ஒரு எதிர்பார்ப்பு.

இரண்டாவது உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த கையோடு தமிழரசுக் கட்சியோடு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திராத ஒரு பின்னணியில், தமது பேரம்பேசும் சக்தியை அதிகப்படுத்திக் கொள்வதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஓர் இணக்கத்துக்கு போக வேண்டிய தேவை இருந்தது.

மூன்றாவது உள்ளூராட்சி சபைகளை இயலுமானவரை கைப்பற்றுவது.

இப்பொழுதும் அந்த அடிப்படையில் தான் அவர்களை தமிழரசுக் கட்சியோடு பேச முற்பட்டுள்ளார். மாகாண சபைத் தேர்தலில் கிடைக்கக்கூடிய வெற்றிகளை உறுதிப்படுத்துவது. இப்பொழுது நடக்கும் பேச்சுக்கள் வெற்றி பெறுமாக இருந்தால் அதன் முதல்விளைவு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தனிமைப்படுத்தப்படும். அதே சமயம் டி.ரி.என்.ஏ.யும் மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகும்.

அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் அவர்கள் நம்பத்தக்க சக்திகள் அல்ல, இலட்சிய பாங்கான கட்சிகள் அல்ல என்ற அபிப்பிராயம் எண்பிக்கப்படும். ஏற்கனவே பொது வேட்பாளர் விடயத்தில் சங்குச் சின்னத்தை எடுத்ததன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் சிவில் சமூகங்களோடு இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை பெருமளவுக்கு இழந்து விட்டார்கள். அதற்குப் பின்னர்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஓர் எழுத்து மூல ஆவணத்தின் அடிப்படையில் கூட்டாகச் செயல்படச் சம்மதித்தார்கள். இப்பொழுது தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியதன் மூலம் அவர்கள் தமிழ்த் தேசியப் பேரவையுடனான தமது உறவைப் பலவீனப்படுத்தியிருக்கிறார்கள். அதன் மூலம் எதிர்காலத்தில் நம்பிக் கூட்டுச்சேர முடியாத தரப்பு இது என்ற முற்கற்பிதம் மேலும் நிரூபிக்கப்படும். அது மட்டுமல்ல, எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியும் அவர்களைக் கைவிடுமாக இருந்தால் அல்லது கூட்டமைப்பாக செயற்பட்ட கால கட்டங்களில் மேடைகளில் பகிரங்கமாகவே அவர்களை ஒட்டுக் குழுக்கள் என்று அழைத்தது போல இனிமேலும் அழைப்பார்களாக இருந்தால், டி.ரி.என்.ஏ என்ற கூட்டுக்குள் இருக்கும் கட்சிகளின் எதிர்காலம் என்னவாகும்?

இக்கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டது போல, கஜேந்திரகுமார் கூறியது போல தமிழ்த் தேசியப் பேரவையுடனான அவர்களுடைய இணக்கம் உடையுமாக இருந்தால் அதைத் தமிழ் மக்கள் தாங்குவார்களோ இல்லையோ டி.ரி.என்.ஏ. தாங்குமா என்ற கேள்வி உண்டு.

மாகாண சபைத் தேர்தலை நோக்கி மேற்படி சந்திப்பு நடந்திருக்கலாம். ஆனால் ஒரு மாகாண சபைத் தேர்தல் நடக்குமா இல்லையா என்பது இப்பொழுதும் சந்தேகம் தான். புயலுக்கு பின்னரான அரசியல் சூழலானது ஒரு தேர்தலை வைக்கத் தக்கதாக இல்லை. ஏற்கனவே அரசாங்கம் புயலுக்கு முன்பு மாகாண சபைத் தேர்தலுக்காக நிதியை ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருந்தது. அதேசமயம் மாகாணங்களின் எல்லைகளை மீள நிர்ணயம் செய்ய வேண்டி இருப்பதனால் அதற்கு கால அவகாசமும் கேட்டது. இப்பொழுது புயலுக்குப் பின்னரான அரசியல் சூழலில் அரசாங்கம் மேலும் கால அவகாசத்தை கேட்க வாய்ப்பு உண்டு. இந்தியாவை திருப்திப்படுத்துவதற்காக வேண்டுமானால் மாகாண சபை தேர்தலை அடுத்த ஆண்டு வைக்கலாம்.


அப்படி ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால் அது தமிழ்த் தரப்பின் பாவீனத்தை வெளிப்படுத்துவதாக அமையுமா? இப்போதைக்கு தமிழரசு கட்சிக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகமாக தெரிகின்றன. ஆனால் அதில் அர்ஜுனாவும் களமிறங்கி இளஞ்செழியனும் களமிறங்குவாராக இருந்தால், அவர் தமிழரசு கட்சியின் வேட்பாளராக களமிறங்கவில்லை என்றால் அப்பொழுது தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்புக்களின் பருமன் குறையும். அதுமட்டுமல்ல தேசிய மக்கள் சக்தி நம்பிக்கையோடு முன்னேறும்.

எனவே நடக்குமா இல்லையா என்று உறுதியாகத் தெரியாத ஒரு தேர்தலை நோக்கி,ஏற்கனவே இருந்த ஒரு கூட்டை உடைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சியோடு இணங்கிப் போவது என்று டி.ரி.என்.ஏ முடிவெடுக்கமாக இருந்தால், அது கஜேந்திரக்குமார் சொன்னது போல, தமிழ்த் தேசியப் பரப்பில் ஏற்கனவே உள்ள மிகப் பலவீனமான ஒரு ஐக்கியத்தின் முடிவாக அமையும்.


ஆனால் அதை தமிழ் மக்கள் தாங்கிக் கொள்வார்கள். ஏனென்றால் முள்ளிவாய்க்காலை கடந்து வந்த ஒரு மக்கள் கூட்டத்துக்கு இனி எதிர்காலத்தில் தாங்கிக் கொள்ள முடியாத துயரம் தாங்கிக் கொள்ள முடியாத காயம் தாங்கிக் கொள்ள முடியாத இழப்பு என்று எதுவும் கிடையாது.

**- நிலாந்தன் -**


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். உத்தியோகத்தில் செயல்திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பெண்கள் எந்த விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள்.





ரிஷபராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீண் வாக்குவாதங்கள் அகலும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை நீங்கும்.





மிதுனராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பாக துணிச்சலாக எடுக்கும் முடிவுகள் வெற்றியை தரும்.





சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமாக தங்களது பணிகளை கவனிப்பது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். எதை விரும்பினாலும் அது கிடைக்க வழி தெரியும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். பணியாளர்கள் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உத்யோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்க பெறுவர்.





துலாம்ராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். வேலை தொடர்பான வீண் அலைச்சல் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து வந்த பூசல்கள் அகலும். பெண்கள் எதை பற்றியும் அதிகம் யோசித்து மனதை குழப்பி கொள்ளாமல் இருப்பது நன்மை.





விருச்சிகராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்னை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். ஆனாலும் அதன் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.







தனுசுராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் அடையும். அதே வேளையில் சுபச்செலவுகள் அதிகமாகும். எந்த விஷயத்திலும் மிகவும் நிதானமாக இருப்பது நல்லது. அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதோ அல்லது அதைப் பற்றி விவாதிப்பதையோ தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம் கவனம் தேவை. வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்சனை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும்.




மீனராசி அன்பர்களே! செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுூர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் மனம் மகிழும் படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். பெண்கள் சாதுூர்யமாக பேசி எல்லா காரியத்தையும் வெற்றிகரமாக செய்து முடிப்பர். இவ்வாரம் சிறப்பானதாகும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# பெருந்தலைவர் இராஜதுரையை...

(18ம் பக்கத் தொடர்ச்சி) பார்த்த திருப்தியில் அவரின் இறுதிப்பயணம் இருந்திருக்கும் என்று நம்புவோம். பெருந்தலைவருக்கு பேராசிரியர் மௌனகுரு எழுதியுள்ள நினைவுக் குறிப்பில், இரு விடயங்கள் கவன ஈர்ப்பை பெற்றுள்ளன. ஒன்று அவர் பாராளுமன்றத்திற்கு முதன் முதலில் தெரிவு செய்யப்பட்டபோது இவர் என்ன, பாராளுமன்றத்தில் சிலப்பதிகாரம் பற்றியா பேசப் போகிறார்? என்ற கேலி செய்யப்பட்டமை குறித்த தகவல்.

உண்மை தான்! நான் பொருளாதார மாணவனாக உயர்தர வகுப்பிலும், பல்கலைக்கழகத்திலும் கற்ற போது குறிப்பாக வரவுசெலவுத்திட்ட உரைகளில் அவர் ஐம்பெரும் காப்பியங்கள் பற்றி பேசியதை செவிமடுத்துள்ளேன். அன்று எனக்கு அந்த உரை தலைப்புக்கு சம்பந்தம் இல்லாத ஒன்றாக சலிப்பைத் தந்தது. ஆனால், பின்வந்த தமிழ்த்தேசிய எழுச்சிக் காலத்தில் அந்த உரைகளுக்கு பின்னால் இருந்த அரசியலை எண்ணி வியக்க வேண்டி இருந்தது. சிங்கள பௌத்த பேரினவாத அரசியலில் உள்ள நியாயமின்மையை அவர் இலக்கியங்களை கொண்டு புட்டு, புட்டு வைத்தார்.

மகாபாரதத்தில் பெரும்பான்மை கௌரவர்கள், பஞ்சபாண்டவர்களிடம் அறமற்ற அரசியல் தோற்றுப் போனதை நினைவுபடுத்தினார். இராமாயணத்தில் கூனியின் சதியால் இராமர் காட்டுக்குப் போகவேண்டிய அரசியல் சதியை எடுத்துரைத்தார். சிலப்பதிகாரத்தில் நீதி தவறிய ஆட்சி தலைவனுக்கு கண்ணகி கற்பித்த பாடத்தை பேசினார். இந்தக் கதைகள் தமிழ்தேசிய இனத்தின் விடுதலையின் பால் உள்ள நியாயத்தன்மையை பேசின. ஆம்! பெருந்தலைவர் இராசதுரை வரவு செலவுத் திட்ட விவாதங்களை இலக்கிய மேடையாக மாற்றினார் என்பது உண்மை தான். மற்றையது பெரியவரின் பேத்தி சரண்யாவுக்கு எழுதிய செய்தியின் சில வரிகள். அவர் இறப்பு இரங்குதற்குரியதன்று. அவர் வாழ்வு கொண்டாடப் படவேண்டியது. இரங்கல் வேண்டாம், கொண்டாடுவோம். ஆம்! அருமைகளும், பெருமைகளும் நிறைந்த இந்த பெருமகனை நாம் எவ்வாறு கொண்டாடப்போகிறோம்....?

மட்டக்களப்பு நகரில் அன்னாருக்கு முழு உருவச்சிலை ஒன்றை நிறுவுவதன் மூலம் மட்டக்களப்பு தமிழகம் அவரை கொண்டாட முடியும். மட்டக்களப்பு மாநகர சபை, மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம், மட்டக்களப்பு வர்த்தக சங்கம், விபுலானந்த இசை நடன அழகியற்கற்கைகள் நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த பணியை செய்வது பற்றி ஆலோசிக்க வேண்டும்.

கிழக்கு பல்கலைக்கழகம் பெருந்தலைவர் இராசதுரைக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கு மட்டக்களப்பின் கல்விச்சமூகமும், நிறுவனங்களும், சிவில் அமைப்புக்களும் சிபாரிசு செய்யமுடியும். தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் ஆலோசனையும், ஒத்துழைப்பும் இதில் உள்வாங்கப்படலாம். பெருந்தலைவர் இராசதுரை தொடர்பான எழுத்துக்களையும், அவர் ஆற்றிய உரைகளையும் தொகுத்து ஒரு வரலாற்று ஆவணத்தை நூல் வடிவில் வெளியிடலாம். இதற்கு தமிழக, மலேசிய நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவை அனைத்திற்கும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை மக்களிடம் இருந்து நிதி உதவிகளை கோர முடியும்.

இவற்றை இலகுவாக சொல்லி விடலாம் ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார்? இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குழுவினரிடம் பொறுப்புக் கொடுக்கலாம். ஆனால் அனைத்தையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஒரே ஆளுமையாக பேராசிரியர் சி.மௌனகுருவே அடையாளப்படுத்தப்படுகிறார். மேற்கூறிய அனைத்து தரப்புடனும் தொடர்பை பேணும் ஒருவராக செயற்பாட்டுத் தளத்தில் அவரே உள்ளார். ஐயா பேராசிரியர் மௌனகுருவே வாருங்கள்! சரண்யாவுக்கு நீங்கள் எழுதிய வார்த்தைகளை அனைவரையும் ஒன்று சேர்த்து நனவாக்குவோம். பெருந் தலைவர் இராசதுரையை கொண்டாடுவோம்.

# தமிழ்த்தேசிய அரசியலில் ஐக்கியம்

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆக, மக்களுடைய நலனுக்கான முறையில் யதார்த்த அரசியலை உலகுடன் பொருத்தக் கூடிய முறையிலான நடைமுறை அரசியலைச் சிந்திக்க வேண்டும். அதுவே மெய்யான பலத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலையை விரும்பும் சமூகத்துக்கு அளிக்கும். அதுவரையில் இவை வெறும் தேநீர்ச் செலவீனத்தையும் பத்திகை இணையச் செய்தி களுக்கான இடத்தையுமே எடுக்கும். அதற்கு மேல் எதுவுமே இல்லை இது சற்றுக் கடுமையான விமர்சனம்தான். ஆனால் தவிர்க்க முடியாதது. தேவையானது.

(20ம் பக்கத் தொடர்ச்சி) கூட்டணிக்கு இழுக்க தி.மு.க. முயலும். அப்படியானால், குறைந்தது 15 முதல் 20 இடங்களை இந்தக் கட்சிகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, 'நாங்களும் சில இடங்களைக் குறைத்துக் கொள்ளப் போகிறோம். நீங்களும் குறைத்துக் கொள்ளுங்கள்' என்று தி.மு.க. சொல்லக்கூடும். அதைத் தவிர்க்கவே கூடுதல் இடங்களை இப்போதே கூட்டணிக் கட்சிகள் கோருகின்றன' என்கிறார். மேலும் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை 30 - 35 இடங்களையும் இடதுசாரிகள் 8 இடங்களையும் கோரலாம் என்கிறார் அவர். இருந்தாலும், கோரிய இடங்கள் கிடைக்காவிட்டால் இந்தக் கட்சிகள் வேறு கூட்டணிக்குச் செல்லும் வாய்ப்புகள் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

## தி.மு.க.கூறுவது என்ன?

தி.மு.க.வை பொருத்தவரை இதுவொரு பிரச்னையே இல்லை என்கிறார் அக்கட்சியின் செய்தித் தொடர்பாளரான ரவீந்திரன் கான்ஸ்டைன்டீன். ஒவ்வொரு கட்சியும் கூட்டணியில் கூடுதல் இடங்களைக் கேட்பதைத் தவறு எனச் சொல்ல முடியாது. ஆனால், வேறு சில விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சமீபத்திய தேர்தல்களில் மாறாத கூட்டணியாக தி.மு.க. கூட்டணி அமைந்திருக்கிறது. அதற்கு முன்பாக அ.தி.மு.க - தி.மு.க. கூட்டணிகளுக்குள் இடமாறுதல்கள் இருக்கும். அம்மாதிரி தருணங்களில் முந்தைய கூட்டணியில் இருந்ததை விட கூடுதல் இடங்களை புதிய கூட்டணியில் எதிர்பார்ப்பார்கள். ஆனால், தி.மு.க. கூட்டணியில் அப்படி மாற்றங்கள் ஏதுமில்லை. அடுத்ததாக, இந்தக் கூட்டணியில் உள்ள தலைவர்கள் சித்தாந்த வலுவுள்ளவர்கள். ஆகவே இது பிரச்னையாகாது என்கிறார் அவர். ஆனால், 'புதிதாக ஏதாவது சில கட்சிகள் கூட்டணியில் இணைந்தால், அந்தத் தருணத்தில் இடங்களை விட்டுத் தர வேண்டிய சூழல் உருவாகுமல்லவா?' எனக் கேட்டபோது, 'அப்படியொரு சூழல் ஏற்பட்டால், அந்தக் கட்சிகளுக்கு அளிக்கும் இடங்கள் ஒன்றிரண்டு இடங்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடலாம். ஆகவே, அப்போதும் கூட்டணியில் பிரச்னை ஏற்பட வாய்ப்பில்லை'

# வாழ்க்கைத் தத்துவத்தின் களஞ்சியம் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதம்!

தமிழ் இலக்கிய உலகில் கவியரசு கண்ணதாசன் என்ற பெயர் அவரது திரைப்பாடல்களுக்காக மட்டுமல்லாமல் அவர் எழுதிய காலத்தால் அழி யாத காவியங்களுக்காகவும் போற்றப்படுகிறது. அதில் மிக முக்கியமானது, ஆன்மீகத்தையும் வாழ்வியலையும் இணைத்து அவர் படைத்த 'அர்த்தமுள்ள இந்து மதம்' என்னும் நூல்.

இந்து மதத்தின் சம்பிரதாயங்களையும், சடங்கு களையும் கேள்வி கேட்கும் பாமரனுக்கும், பகுத்தறிவாளனுக்கும் புரியும் வகையில், அவற்றின் பின்னால் உள்ள அறிவியல் மற்றும் உளவியல்




காரணங்களை மிக அழகாக விளக்கியதே இந்த நூலின் தனிச்சிறப்பு.

கண்ணதாசன் தனது ஆரம்ப காலங்களில் தீவிர நாத்திகராகவும், திராவிட இயக்க சிந்தனையாளராக வும் இருந்தவர். 'கடவுள் இல்லை' என்று வாதி ட்ட அதே நாக்கு தான் பிற்காலத்தில் 'அர்த்த முள்ள இந்து மதம்' என்று உலகமே போற்றும் படைப்பைத் தந்தது.

தனது வாழ்வில் அவர் சந்தித்த ஏற்ற இறக்கங்கள், துரோகங்கள், தோல்விகள் மற்றும் உடல் உபாதை கள் ஆகியவை அவரை ஆன்மீகத்தை நோக்கித் தள்ளின. தான் கண்டடைந்த உண்மைகளையும், இந்து மதத்தில் புதைந்துள்ள வாழ்வியல் நெறி களையும் தன் சுய அனுபவத்தோடு கலந்து எழுதியதே இந்த நூல்.

இந்த நூல் வெறும் மதப் பிரச்சாரம் அல்ல. இது மனித வாழ்வின் கையேடு என்று சொல்லலாம். எளிமையான நடை: வேதங்களும், உபநிஷத்து களும் சாதாரண மக்களுக்குப் புரியாத மொழியில் இருந்த காலத்தில், அவற்றை பாமரத் தமிழில், ஒரு நண்பன் இன்னொரு நண்பனிடம் பேசுவது போன்ற நடையில் கண்ணதாசன் எழுதியிருப்பார்.



கேள்வி – பதில்: நாம் அன்றாடம் செய்யும் பல சடங்குகளுக்குப் பின்னால் இருக்கும் காரணங் களை அவர் விளக்கியிருப்பார். உதாரணமாக, 'கோயிலுக்கு ஏன் செல்ல வேண்டும்?', 'திருநீறு ஏன் அணிய வேண்டும்?', 'தீர்த்த யாத்திரையின் பயன் என்ன?' போன்ற கேள்விகளுக்கு அறிவியல் ரீதியாகவும், மனரீதியாகவும் விடை அளித்திரு ப்பார். கடன், கவலை, பொறாமை, கோபம் போன்ற மனித உணர்வுகளை எப்படி கையாள்வது என்பதை இந்து மதக் கோட்பாடுகளின் துணை யோடு விளக்கியிருப்பார். 'துன்பம் வரும்போது துவளாதே, இன்பம் வரும்போது துள்ளாதே' என்ற கீதையின் சாரத்தை எளிய வரிகளில் கடத்தி யிருப்பார்.

கண்ணதாசன் இந்த நூலில் எதையும் குருட்டுத் தனமாக நம்பச் சொல்லவில்லை. 'இந்து மதம் என்பது ஒரு மதம் மட்டுமல்ல, அது ஒரு வாழ்வியல் முறை' (Way of Life) என்பதை அவர் ஆணித்தரமாக நிறுவியுள்ளார்.

உதாரணமாக கர்ம வினையைப் பற்றி பேசும் போது 'நீ விதைத்ததை நீயே அறுப்பாய்' என்ற இயற்கையின் நீதியை அவர் சுட்டிக்காட்டுகிறார். மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்விளைவு உண்டு என்பதை உணர்த்துகிறார்.

இன்றைய பரபரப்பான உலகில் மன அழுத்தத்தால் தவிப்பவர்களுக்கு இந்த நூல் ஒரு சிறந்த மருந்து. 10 பாகங்களாக வெளிவந்துள்ள இந்தத் தொகுப்பில், மனித மனதை அமைதிப்படுத்தும் பல உத்திகள் உள்ளன. எந்த மனிதன் தன் மனசாட்சிக்கு பயந்து நடக்கிறானோ, அவனுக்குத் தனியாக ஒரு சட்டம் தேவையில்லை அவனே ஒரு தர்மம்.' என்பது போன்ற வரிகள் வாசகர் களின் மனதில் ஆழமாகப் பதியக்கூடியவை.

அர்த்தமுள்ள இந்து மதம்' என்பது இந்துக் களுக்கு மட்டுமான நூல் அல்ல. இது மதம், இனம், மொழி கடந்து மனிதநேயத்தையும், நல்வாழ்வையும் போதிக்கும் ஒரு பொதுமறை. கவியரசரின் அனுபவச் சாரத்தில் உருவான இந்த நூல், வாழ்க்கையில் தடுமாறும் எவருக்கும் ஒரு கைவிளக்காக அமையும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கையை ரசிக்கவும், அதே சமயம் அதன் ஆழத்தைப் புரிந்து கொள்ளவும் விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய நூல் இது. இந்நூல் அனைத்துப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம். வாழ்வில் ஒரு தடவை யேனும் வாசியுங்கள். உங்களை வாழ்க்கையை மாற்றும் மருந்தாகலாம்.



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

HOMELIFE HIGHER STANDARDS

Ravi. Paramu
Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




# மனித குலத்தின் முகமாக நின்ற அகமது அல் அகமது! வெறுப்பின் நடுவே வெளிச்சமாகிய அதிதீவிர துணிச்சல்!

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் யூத சமூகத்தை குறி வைத்து நிகழ்ந்ததாகக் கூறப்படும் தாக்குதல் முயற்சியைத் தடுத்து நிறுத்தி, பலரின் உயிரைக் காக்க தனது உயிரையே பணயம் வைத்தவர் அகமது அல் அகமது. இன, மத, மொழி வேறுபாடுகள் மனிதத் தன்மையை மறைக்கும் காலகட்டத்தில், மனிதநேயத்தின் உச்ச வடிவமாக அவர் எடுத்த முடிவு உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.



தாக்குதல் நிகழ வாய்ப்பு இருப்பதை உணர்ந்த அந்த நொடியில் அகமது அல் அகமது பின்னோக்கி செல்வதையும், தன்னைப் பாதுகாப்பதையும் தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக, மற்றவர்களின் உயிர் முக்கியம் என்ற ஒரே எண்ணமே அவரை இயக்கியது. தன் பாதுகாப்பை விட அந்நியர்களின் பாதுகாப்பையே முன்னிறுத்திய அந்தத் துணிச்சல், மனிதகுலம் இன்னும் உயிருடன் இருப்பதற்கான நம்பிக்கையை மீண்டும் விதைத்துள்ளது.

யுயூதர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எனப் பிரித்து பார்க்காமல், மனிதன் மனிதனுக்காக என்ற அடிப்படை உண்மையை தனது செயலால் உலகிற்கு எடுத்துக் காட்டினார் அகமது. வெறுப்பால் வளர்க்கப்படும் வன்முறைக்கு எதிராக, அன்பும் துணிச்சலும் தான் உண்மையான பதில் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

இன்றைய உலகில் பயம் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அந்த பயத்தை எதிர்கொள்ள தைரியமும் மனிதநேயமும் ஒன்றாக நிற்கும் போது, எந்த வன்முறையும் தோல்வியடையும் என்பதற்கான உயிருள்ள சாட்சியே அகமது அல் அகமது. அவரது செயல், சமூக வலைதளங்களில் ஒரு செய்தியாக மட்டும் அல்ல மனித மனங்களில் விதைக்கப்பட்ட ஒரு விழிப்புணர்வாக மாறியுள்ளது.

மதம் மனிதனைப் பிரிக்க அல்ல மனிதனை மனிதனாக வைத்திருக்க என்ற உண்மையை அகமது வார்த்தைகளால் அல்ல, செயலில் நிரூபித்துள்ளார். அவரைப் போன்ற மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதே, இன்றைய உலகின் மிகப்பெரிய நற்செய்தி. அகமது அல் அகமது ஒரு பெயர் அல்ல. மனிதகுலத்தின் மனசாட்சி.

தாக்குதல் முயற்சியைத் தடுத்து நிறுத்தி பலரின் உயிரைக் காப்பாற்றிய அகமது அல் அகமதுவின் துணிச்சல், ஆஸ்திரேலியாவைத் தாண்டி உலகமெங்கும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. அரசியல், மதம், இன எல்லைகளைத் தாண்டி மனிதநேயத்தின் அடையாளமாக அவரது செயல் பார்க்கப்படுகிறது.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், அகமது அல் அகமதுவின் செயலை வெறுப்பை தோற்கடித்த மனிதநேயத்தின் வெற்றி என வர்ணித்துள்ளனர். வன்முறைக்கு எதிராக தனிநபர் தைரியம் எவ்வளவு பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதற்கான உயிருள்ள உதாரணம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அகமது அல் அகமதுவின் துணிச்சலுக்கு வெளிப்படுத்திய பாராட்டுக்கள் இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியான செய்திக்குறிப்புகளில் பின்வருமாறு பதிவாகியுள்ளது:

அகமது அல் அகமதுவை மிகவும், மிகவே துணிந்தவர் என்று வர்ணித்து, அவர் ஒரு பயங்கர சூழலில் நேருக்கு நேர் தாக்குதலை எதிர்கொண்டு பல உயிர்களைச் சேமித்தார் என்று மிகுந்த மரியாதையுடன் பாராட்டியுள்ளார்.

யூத, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத் தலைவர்கள் இணைந்து, மதங்கள் மனிதர்களை பிரிக்க அல்ல பாதுகாக்கவே உள்ளன என்ற உண்மையை அகமது தனது செயலில் நிரூபித்துள்ளார் எனப் பாராட்டியுள்ளனர். மத நல்லிணக்கத்தின் சிறந்த முன்னுதாரணம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள், அகமது அல் அகமதுவை சாதாரண மனிதராக இருந்து அசாதாரண துணிச்சலை வெளிப்படுத்தியவர் என புகழ்ந்துள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அரசுகள் மட்டுமல்ல, மனிதநேயமுள்ள தனி நபர்களும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதைக் காட்டியதாக தெரிவித்துள்ளன.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த பொதுமக்கள், இன்றைய உலகிற்கு அகமது போன்ற மனிதர்களே தேவை, "He represents humanity not a religion" போன்ற வார்த்தைகளில் தங்களின் பாராட்டுகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவரது பெயர் மனிதநேயத்தின் அடையாளமாக சமூக ஊடகங்களில் பேசப்படுகிறது.

ஆஸ்திரேலிய சமூக அமைப்புகள் மற்றும் குடிமக்கள், அகமது அல் அகமதுவின் செயலை தேசிய ஒற்றுமையின் சின்னமாகக் கருதி, அவர் ஆஸ்திரேலிய சமூகத்தின் பெருமை எனக் கூறியுள்ளனர்.

அகமது அல் அகமது பெற்றுள்ள இந்த உலகளாவிய பாராட்டுகள், ஒரு மனிதன் எடுத்த சரியான முடிவு உலகத்தின் மனசாட்சியை எப்படி உலுக்க முடியும் என்பதற்கான சான்றாக நிற்கிறது. அவர் பாராட்டப்படுவது ஒரு மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அல்ல. மனிதனாக நடந்து கொண்டதற்காக.




Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters

KRISHNA SABARATNAM
Insurance & Investments

I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# இலங்கைக்கு ஒரு மில்லியன் டொலர் அவசர உதவி! கனடிய நாடாளுமன்றத்தில் ஒலித்த அமைச்சர் ஹரியின் குரல்!

இலங்கையைச் சின்னாபின்னமாக்கியுள்ள 'டிட்வா' (Ditwah) சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மலையக மற்றும் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் துயர் துடைக்கக் கனடா முன் வந்துள்ளது. கனடிய அரசாங்கம் 1மில்லியன் கனடிய டொலர்களை (CAD) அவசர மனிதாபிமான நிதியாக ஒதுக்குவதாக 16 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அதேவேளை கனடியத் தமிழ் சமூகம் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பொருட்களைச் சேகரிக்கும் நிலையங்களையும் அறிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது, ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான திரு. ஹரி ஆனந்தசங்கரி அவர்கள், கனடிய நாடாளுமன்றத்தில் எழுப்பிய வாதமே இந்த உடனடி அறிவிப்பிற்கு ஓர் காரணமாக அமைந்தது. அவர் அவையில் பேசியதாவது:

சபாநாயகர் அவர்களே! கடந்த டிசம்பர் 12 ஆம் திகதி தாக்கிய 'டிட்வா' புயலால் இலங்கையின் மலையகத் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் வடக்கின் விவசாய நிலங்கள் அழிந்துள்ளன. தலைமுறை தலைமுறையாக லயன் அறைகளில் வசித்த மக்கள் இன்று வீதியில் நிற்கிறார்கள். கனடா என்பது மனிதாபிமானத்தின் மறுபெயர். அரசியல் காரணங்களுக்காக நாம் காத்திருக்க முடியாது. பாதிக்கப்பட்ட எனது தமிழ் உறவுகளுக்கு உணவு,





மருந்து மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க கனடா உடனடியாக நிதியுதவி அளிக்க வேண்டும்.

அவரது இந்தக் கோரிக்கைக்கு அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மற்றொரு தமிழ் வம்சாவளிப் பெண் அமைச்சரான அனிதா ஆனந்த் அவர்களும் வலுவான ஆதரவை வழங்கியிருந்தார்.

கனடியப் பிரதமர் அலுவலகம் விடுவித்துள்ள இந்த 1 மில்லியன் டொலர் நிதியானது, இலங்கை அரசாங்கத்திடம் நேரடியாகக் கையளிக்கப்பட மாட்டாது. மாறாக, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகள் ஊடாகவே நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிவாரணப் பொருட்கள் சேகரிப்பு நிலையங்கள் (Collection Centers)

கனடியத் தமிழர் பேரவை (CTC) மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகள் இணைந்து, 'கரம்தருவோம்' திட்டத்தின் கீழ் அவசர நிவாரணப் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளன. பொதுமக்களிடமிருந்து உலர் உணவுப் பொருட்கள் படுக்கை விரிப்புகள், குழந்தைகளுக்கான பால் மா மற்றும் சுகாதாரப் பொருட்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் ஒற்றுமை "எமது சொந்தங்கள் அங்கு மழையிலும் குளிரிலும் வாடும் போது எம்மால் இங்கு நிம்மதியாக இருக்க முடியாது. அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்தது போல, எமது கரங்கள் நிவாரணப் பணிகளில் இணைகின்றன, என டொரொண்டோ தமிழ் சமூகத்தின் தலைவர் உருக்கமாகத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் அவசர உதவி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இரண்டு மில்லியன் டொலரிலும் அதிகமான மனிதாபிமான நிதி உதவியை வழங்குவதாக ராஜாங்க செயலாளர் (சர்வதேச அபிவிருத்தி) கௌரவ ரண்டீப் சறாய் 17 டிசம்பர் 2025 அறிவித்தார். இந்தப் பணம் பின்வருமாறு ஒதுக்கப்படுகிறது:

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உடனடியாக உணவைப் பெறுவதற்காக உலக உணவுத் திட்டத்திற்கு 4 மில்லியன் டொலர் வழங்கப்படுகிறது.

மனிதாபிமான கூட்டிணைவின் ஓர் உறுப்பு அமைப்பான World Vision Canada வுக்கு, கனடா மனிதாபிமான உதவி நிதியத்தின் ஊடாக, உதவிப் பொருட்கள், அவசர தங்குமிடம் ஆகியவற்றையும், நீர், தூய்மைப்படுத்தல் மற்றும் சுகாதாரம் ஆகிய சேவைகளை வழங்குவதற்காகவும் 350.000 டொலர் வழங்கப்படுகிறது.

கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தால் முகாமைப்படுத்தப்படும் பேரிடர் உதவி அவசர நிதியத்தின் ஊடாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தற்போதைய உதவி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக 215.000 டொலர் வழங்கப்படுகிறது. அவசர உதவியை வழங்குவதற்காக, உள்ளூர் முன்முயற்சிகளுக்கான கனேடிய நிதியத்தின் ஊடாக ஏறத்தாழ 70.000 டொலர் வழங்கப்படுகிறது. கனடா நிலைமையைத் தொடர்ந்து கண்காணிப்பதுடன், மாறும் தேவைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக அனுபவமுள்ள பங்காளிகளுடன் தொடர்பைப் பேணுகிறது.



பேராசிரியர் காசிவிஸ்வநாதன் செல்வகுமார்

# உடல் உறுப்பை இழந்தவர்களின் வாழ்வில் புத்தொளி பாய்ச்சும் மனிதாபிமானத் திட்டம்

தாம் வாழும் சமூகத்திலிருந்து பெற்றவற்றை அச் சமூகத்துக்கே திருப்பிச்செலுத்துதல் எனும் கொள்கையில் அதீத ஈடுபாடுடைய தனிநபர்கள் சிலர் இணைந்து, நலிவுற்ற நபர்களின் சிதைவடைந்த எதிர்காலத்தை மீளத்திருத்தி எழுதும் நோக்குடன் ஆரம்பித்து, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திவரும் ஒரு மனிதாபிமானச் செயற்திட்டத்தைப் பற்றியதே இக்கட்டுரை.

நமது உடலில் நன்றாக இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு உறுப்பு, திடீரென செயலிழந்துபோனால் நம்முடைய மனநிலை எப்படி இருக்கும்? அன்றைய தினத்திலிருந்து நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கும்? அதுவரை நாம் வாழ்ந்து பழக்கப்பட்ட வாழ்க்கையையும், நாம் கட்டியெழுப்பி வைத்திருந்த கனவுகளையும் கொஞ்சமாகவோ அல்லது முழுவதுமாகவோ மாற்றியமைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம். அவ்வாறிருக்கையில் நாம் இழந்த அங்கத்தை மீண்டும் பெறமுடிந்தால், அதன்மூலம் மீண்டும் நம் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப முடிந்தால், இவ்வாறு நம் வாழ்க்கையை மீட்டுத்தருவதற்கு பரோபகாரிகள் சிலர் தயாராக இருந்தால், அது பெரிதும் பெரிது அல்லவா?

இலங்கையில் உள்நாட்டுப் போரினாலும், வேறு காரணங்களாலும் தமது கால், கை போன்ற உடலுறுப்புக்களை இழந்த நபர்களுக்கு முழுவதும் இலவசமாக செயற்கை உறுப்புக்களைப் பொருத்தி, சிதைவடைந்த அவர்களது வாழ்வாதாரத்தை மீட்டெடுத்துக் கொடுக்கும் வகையில் 'இந்திய– இலங்கை ஒத்துழைப்பு செயற்கை சார்பியல் உறுப்புப் பொருத்துதல்' (Indo– Lanka Collaboration: Prosthetic Empowerment) எனும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் சில புலம்பெயர் தமிழர்கள்.

இந்தச் செயற்திட்டத்துக்கு விதை போட்டவர் புலம்பெயர் தமிழரான பேராசிரியர் காசி விஸ்வநாதன் செல்வகுமார். மேற்படி திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் காசி விஸ்வநாதன் செல்வகுமார் தலைமையில் நகுலானந்தம் லாவண்யா, இரட்ணசபாபதி இளங்கோ, சஞ்சீவ் ஹெரான்ஸ் அருளினி ஆகியோரின் பங்கேற்புடன் இயங்கி வரும் இந்த செயற்கை சார்பியல் உறுப்பு நிலையத்தின் (Centre for Prosthetics) சார்பில் செல்வகுமாரால் இலங்கையில் வாழும் உடல் உறுப்புக்களை இழந்த, நலிவுற்ற மக்களுக்கு இலவசமாக செயற்கை உடல் உறுப்புக்களைப் பொருத்துதல் தொடர்பான திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு இவ்வருடத் தொடக்கத்தில் கனேடிய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.



குலா செல்லத்துரை



சுகுமார் கணேஷன்



இரட்ணசபாபதி இளங்கோ



அத்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்த கனேடிய அரசாங்கம், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான மொத்த நிதியில் அரைப்பங்கு நிதியை வழங்குவதற்கு உடன்பட்டது. அதனையடுத்து இத்திட்ட அமுலாக்கத்துக்குத் தேவையான எஞ்சிய நிதியுதவியை வழங்குவதற்கு குலா செல்லத்துரையை தலைவராகவும் (President), கணேஷன் சுகுமாரைப் தவிசாளராகவும் (Chairman), இளங்கோ இரட்ணசபாபதியை இலங்கைக்கான நிறைவேற்றுப்பணிப்பாளராகவும் (SriLanka Executive Director) கொண்டியங்கி வரும் கனடா இலங்கை வர்த்தக சம்மேளனம் (Canada Sri Lanka Business Convention) முன்வந்தது. அதனுடன் உள்ளக செயற்திட்டங்களுக்கான கனேடிய நிதியமும் இத்திட்டத்துக்கு நிதியுதவி அளித்தது.

அதன்படி இலங்கையிலிருந்து இத்திட்டத்தை நெறிப்படுத்திய இரட்ணசபாபதி இளங்கோ ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, செயற்கை உடலுறுப்பு பொருத்தப்படுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி அங்கு பதிவுசெய்வோருக்கு மருத்துவர் நீதன் ரத்னகுமார் மற்றும் செயற்கை சார்பு உறுப்பியல் நிபுணர் சிவரஞ்சன் அரவிந்தன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் முறையான மருத்துவப்பரிசோதனைகள் மற்றும் பொருத்தப்படவேண்டிய செயற்கை உறுப்பின் அளவுகள் தொடர்பான பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

இக்கூட்டு ஒத்துழைப்பின் மூலம் செயற்கை உறுப்புக்களைப் பொருத்தும் செயற்திட்டத்தின் முதலாம் கட்டம் கடந்த மார்ச் மாதம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. உரிய பரிசோதனைகளின் பிரகாரம் கிளிநொச்சி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 20 பயனாளர்கள் கடந்த மார்ச் மாதம் 5 – 9 ஆம் திகதி வரை இந்தியாவின் குஜராத் நகருக்கு அழைத்துச்செல்லப்பட்டு, ஸ்பார்க் மின்டா பவுன்டேஷனின் முழுமையான அனுசரணை மற்றும் காந்தி நகர் இந்திய தொழில்நுட்பக் கல்லூரியின் உதவியுடன் அவர்களுக்கு அவசியமான செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்டு, மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர்.



முதற்கட்ட அமுலாக்கத்தின் வெற்றியை அடுத்து, இரண்டாம் கட்டமாக மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த 30 பயனாளர்கள் கடந்த நவம்பர் மாதம் 19 – 21 ஆம் திகதி வரை இந்தியாவின் சென்னைக்கு அழைத்துச்செல்லப்பட்டு, அவர்களுக்குரிய செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், செயற்கை உறுப்புக்களைப் பொருத்துவதற்கான வசதிகளை உள்நாட்டிலேயே நிறுவுவது குறித்தும் இப்போது தாம் ஆராய்ந்து வருவதாக எம்மிடம் தெரிவித்த இளங்கோ, பேராசிரியர் காசிவிஸ்வநாதன் செல்வகுமாரின் இந்தக் கனவுத்திட்டம் நனவாவதற்கு கனேடிய அரசாங்கமும், கனடா, இலங்கை வர்த்தக சம்மேளனமும், இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயமும் வழங்கிய பூரண ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.



செயற்கை உறுப்பு தயாரிப்பு, இந்தியாவுக்கான பயணம், தங்குமிடம், உணவு, மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரல் என சகல செலவுகளும் இத்திட்டத்தின் ஊடாகப் பொறுப்பேற்று நடத்தப்பட்டதாகவும், பயனாளர்களிடமிருந்து எந்தவொரு தொகைப்பணமும் பெறப் படவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், புதிதாக உறுப்புக்கள் பொருத்தப்பட்ட பயனாளர்கள் தமக்கென ஒரு புதிய வாழ்க்கையைக் கட்டமைத்து வாழ ஆரம்பித்திருப்பதாகக்கூறி உள மகிழ்ந்தார்.

இலங்கையில் பிறந்து, வளர்ந்து, புலம்பெயர்ந்த பிற்பாடும் பேராசிரியர் செல்வகுமார் போன்றவர்களும், அவர்கள் நடைமுறைப்படுத்த விளையும் சமூகநலத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்கும் பரோபகாரிகளும் இலங்கையில் வாழும் நலிவுற்ற சமூகங்களின்பால் கொண்டிருக்கும் பேரன்பும், அக்கறையும் என்றென்றும் நம் மக்களின் வாழ்வில் புத்தொளி பாய்ச்சட்டும்.

நா.தனுஜா